பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 20 புதன்கிழமை (06-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:316

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக

# மக்கள் அனுமதியுடன் அரசமைப்பை

# மீறிச் செயற்பட சந்திரிகா தயார்!

## பலருடனும் ஆலோசனை கலக்கிறார் எனத் தகவல்

கொழும்பு,ஒக்ரோபர்6

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவும் அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் கொண்டு நகர்த்தவும் தேவைப்படுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக மக்கள் அனுமதியுடன் அரசமைப்பையும் மீறிச் செயற்படுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயார் எனக் கூறப்படுகின்றது.**

**இவ் விவகாரங்கள் தொடர்பாகத் தமக்கு நெருக்கமான சிலருடனும் சட்ட நிபுணர்கள் சிலருடனும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை கலந்துவருகின்றார் எனத் தெரிகின்றது.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் அடுத்த 13 மாதங்களில் முடிவடைகின்றது. அரசமைப்பின் 31 (2) ஆவது பிரிவின்படி இன்னொருதடவை ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க நிற்கமுடியாது.

எனினும், தனது முதலாவது பதவிக்காலம் முற்றாகப் பூர்த்தியான பின்னரே இரண்டாவது பதவிக்காலத்தைத் தாம் ஆரம்பித்தார் என்று காரணங்காட்டி தமது தற்போதைய பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு அவர் இழுத தடிப்பதற்குச் சட்டத்தில் ஓட்டைகள் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

எப்படியாயினும் அடுத்த 13 மாதத்தில்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம்-புலிகள் சந்திப்பு இன்று!

மட்டக்களப்பு,ஒக்.6

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையிலான நல்லெண்ண சந்திப்பு ஏற்கனவே தீர்மானித்தபடி இன்று புதன்கிழமை நடைபெறவிருக்கின்றது. ஒரு மாதத்துக்குள் நடைபெறும் இரண்டாவது சந்திப்பு இது.

வவுணதீவு யுத்தசூனியப் பிரதேசத்தில் இந்தச் சந்திப்பு முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

நீண்ட நாள்களின் பின்னர் கடந்த மாதம் 22ஆம் திகதி இடம்பெற்ற இச்சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய மாதத்தில் இரு தடவை இத்தகைய சந்திப்புகள் இடம்பெறவேண்டும்.

இன்று நடைபெற இருந்த சந்திப்பு விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதால் ஏற்கனவே

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னிரு வேங்கைகளுக்கு நேற்று பல்வேறு இடங்களிலும் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஒக்.6

இந்திய வல்லாதிக்கத்தின் சதியினால் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்.கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று குடாநாட்டின் பல்வேறு இடங்களில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

பிரதான நிகழ்வுகள் தீருவிலில் உள்ள பன்னிரு வேங்கைகள் நினைவாலயத்தில் நடைபெற்றன.

ஏராளமான மககள் திரண்டிருக்க அங்கு மாலை 4.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பன்னிரு வேங்கைகளின் திருவுருவப்படங்கள் மருதடிச் சந்தியிலிருந்து தீருவில் சதுக்கத்திற்கு 'பாண்ட்' வாத்திய சகிதம் எடுத்துச்செல்லப்பட்டன.

அங்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் பொறுப்பா

(18 ஆம் பக்கம் பார்க்க)



தீருவிலில் அமைந்துள்ள பன்னிரு வேங்கைகளின் நினைவாலயத்தில் நேற்றுமாலை இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா தேசியக் கொடி ஏற்றுவதையும் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் பொதுச்சுடர் ஏற்றுவதையும் காணலாம். *(படங்கள்:எஸ்.சுந்தரலிங்கம்-கரவெட்டிச் செய்தியாளர்)*

### பிரமாண்டமான ஏற்பாடுகளுடன்

## மாலதி நினைவுதின நிகழ்வுகள் கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்

இரண்டாம் லெப்.மாலதியின் நினைவு தினத்தையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முனனிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள் இணைந்து நடத்துகின்ற மாபெரும் கண்காட்சி நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இன்று கிளிநொச்சி மத்திய மைதானத்தில் மிகவும் சிறப்பாக ஆரம்பமாகின்றன.

காலை 9 மணிக்கு பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல் என்பவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். லெப்.மாலதியின் திருவுருவப படத்திற்கு அவரது தந்தையார் பேதுருப்பிள்ளை ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவிப்பார்.

தொடர்ந்து கண்காட்சி மண்டபங்கள் திறந்து

(18 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த மீறல்களைத் தடுக்க புலிகளின் நடவடிக்கை தேவை!

### தமிழ்ச்செல்வனிடம் ஹெல்கிசன் கோரிக்கை

கொழும்பு,ஒக்.6

தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் போர் நிறுத்த மீறல்களைத் தடுப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மால் இயன்றளவு கூடுதலான பங்களிப்பை வழங்கவேண்டும் என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன் கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார் விடர் ஹெல்கிசன்.

இக்கலந்துரையாடலின்போது அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்ற யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் தொடர்பாக அவர் தனது கவலையைத் தெரிவித்தார் என நோர்வேத்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்காவல் படையினர் விவகாரம்:

## கண்காணிப்புக் குழுவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சி

கொழும்பு,ஒக்.6

திருகோணமலையில் இரு ஊர்காவலர்கள் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தைத் தனது சொந்த விடயமாகக் காட்டிக்கொண்டு, பொதுமக்கள் மத்தியில் செலவாக்குப்பெற ஓர் அமைப்பு முயற்சிக்கின்றது. அதேநேரம் இந்த விடயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவும் அந்த அமைப்பு முயற்சிக்கின்றது.

இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நடவடிக்கை. இது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முக்கிய நடவடிக்கையான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் பணியையும் பாதிக்கக் கூடியது.

- இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொனட் புருஹெறாவ்டே தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்

(18 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வு முடிவுகள் நேற்று வெளியாகின

கிளிநொச்சி,ஒக்.6

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை வடககு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து ஆசிரியர்களிடையே நடத்திய தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளன.

உலக ஆசிரியர் நாளையொட்டி நடத்தப்பட்ட மேற்படி தேர்வில் தேசிய மட்டத்தில் முதல் 5 இடங்களையும் பெற்றவர்களுக்கு வெற்றிப்பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் என்பவற்றோடு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவிருக்கின்றன.

வலய மட்டங்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அனைவருக்கும் சான்றிதழ்களும் ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவிருக்கின்றன. இப்பரிசுகளை தமிழ் வளர்ச்சிக் கழகம் வழங்குகின்றது.

தேசிய மட்ட முடிவுகள் வருமாறு:-

★ பட்டிருப்பு - திருமதி கி.சிவஞானம் (மட்/கோட்டைக்காடு கல்லாறு ம.வி.),

★ பதுளை - மு.இந்திரகுமார் (ப/பதுளை சரஸ்வதி ம.வி.)

★ மட்டக்களப்பு - எஸ்.சந்திரமோகன் (மட்/கிரான்குளம் விநாயகர் ம.வி.)

★ தென்மராட்சி - திருமதி வித்தியாதேவி மனோகரன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

★ மடு - செ.ப.விமலதாஸ் (மன்/ கருங்கண்டல் றோ.க.த.ம.வி.

வலய மட்டத்தில் வெற்றிபெறுபவர்கள் விவரம் வருமாறு:-

மட்டக்களப்பு - செ.சிவானந்ததேவன் (மட்/புதூர் விக்கினேஸ்வரா வித்தி.), திருமதி தி.கரிதாஸ் (மட்/ சிவானந்த வித்தி.), திருமதி சு. பூபாலசிங்கம் (மட்/ கிரான்குளம் விநாயகர் ம.வி.).

பட்டிருப்பு - மு.தயாநிதி (மட்/ முதலைக்குடா ம.வி.), தா.கோபாலகிருஷ்ணன் (மட்/ குருமண்வெளி சிவசக்தி ம.வி.), க.பிரபாகரன் (மட்/ திருப்பழுகாமம் கண்டுமணி ம.வி.).

கல்குடா - ஜனாப் எம்.எம்.எச் இஸ்மால் (மட்/அந்தூ ம.வி.), முத்துராமன் சுந்தரம் (மட்/கிரான் ம.வி.), எல்.ா.எம். சாதிக்கீன் (மட்/அந்தூர் ம.வி.).

அக்கரைப்பற்று - திருமதி இ.சதானந்தம் (அக்/கலைமகள் வித்தி.), து.யோகநாதன் (அக்/இராமகிருஷ்ணமிசன் வித்தி.), திருமதி மு.ஜெயானந்தமூர்த்தி (அக்/தம்பிலுவில் ம.ம.வி.)

கல்முனை - செல்வி வி.சதாசிவம் சோதீஸ்வரி (கல்/இராமகிருஷ்ணசபை பெண்கள் க.)

சம்மாந்துறை - பிள்ளையான்தம்பி யோகராசா (ச.து/ராணமடு இந்து ம.வி.), கண்ணப்பன் கிருபாலட்சுமி (ச.து/ ராணமடு இந்து ம.வி.)

திருகோணமலை - திருமதி ஜெயதாசன் மதிவதனி (பாரதி தமிழ் வித்தி.), திருமதி ஏ.வீ.ஏ.கிருபாகரன் (புனித மேரிக் கல்லூரி), திருமதி ஞா.தனபாலசிங்கம் (புதுக்குடியிருப்பு அ.த.ப.பள்ளி).

மூதூர் - மு.மோகனேந்திரன் (தி/ஈச்சந்தீவு விபுலானந்த வித்தி.), றெ.சதாத் (தி/வான் எல புகாரி வித்தி.), ஏ.சீ.தௌபீக் (தி/கிண்ணியா மத்திய கல்லூரி).

வவுனியா தெற்கு - அ.ரகுமத்துல்லா (வ/மதீனா வித்தி.), திருமதி நெ.அன்ரனி குரூஸ் (வ/செட்டிக்குளம் ம.வி), அசுஜீவா (வ/வவுனியா தமிழ்மத்திய ம.வி.)

வவுனியா வடக்கு - திருமதி இ.தெய்வேந்திரன் (வ/புதுக்குளம் ம.வி.)

மன்னார் - திருமதி ப.பி.ரெஜினா சந்தியோகுலோகு (மன்/புனித பாத்திமா ம.ம.வி.), திருமதி ஜெயூயூட்மிராண்டா (மன்/புனித பாத்திமா ம.ம.வி.), திருமதி ஆர்.இராமதாஸ் (மன்/புனித லூசியா ம.வி.),

மடு - செல்வி சகாயம்மா ஞானப்பிரகாசம் (மன்/அடம்பன் ம.ம.வி.), செல்வி கிஹறவின்றோஸ் கிறிஸ்தோப்பர் (மன்/தேவன்பிட்டி றோ.த.க. பள்ளி.)

முல்லைத்தீவு - செல்வி த.மேரிசுசி (மு/முல்லைத்தீவு ம.வி.), சி.ஜெயக்காந் (மு/பாரதி வித்தியாலயம்), திருமதி அ.விமலதாஸ் (மு/கொக்கிளாய் அ.த.க.பாடசாலை),

துணுக்காய் - க.முருகேசு (மு/வவுனிக்குளம் படிவம்-4), திருமதி ஜெ.தவநேசன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி).

கிளிநொச்சி - திருமதி செ.இராஜரட்ணம் (கிளி/தர்மபுரம் ம.வி.), கணபதிப்பிள்ளை குணரத்தினம் (கிளி/வேரவில் இந்து ம.வி.), செல்வி கயிலாஜபிள்ளை ரஞ்சிதமலர் (கிளி/மசார் அ.த.க.பள்ளி).

யாழ்ப்பாணம் - திருமதி சத்தியவாணி செபமாலைதாசன் (யா/பெரியபுலம் ம.வி.), சி.தங்கரூபன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), யோசப் ஜோன்சன் ராஜ்குமார் (யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்).

வலிகாமம் - சு.சிறீகுமரன் (யா/ஏழாலை சிறமுருகன் வித்தியாலயம்), செல்வி பூ.ஜெயமலர் (யா/விக்ரோறியாக் கல்லூரி), த.தயானந்தன் (யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.),

தீவகம் - திருமதி க.விஜிதா (யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி.).

தென்மராட்சி - திருமதி மாலினிதேவி முத்துலிங்கம் (யா/மிருசுவில் அ.த.க.), திருமதி தேவராணி நாகராசா (யா/மட்டுவில்தெற்கு அ.மி.த.க. பள்ளி), திருமதி மஞ்சுளாதேவி மகேசன் (யா/வீரசிங்கம் ம.வி.மீசாலை).

வடமராட்சி - நடராசா தேவராசா யா/உடுத்துறை ம.வி.

கண்டி - (திருமதி குமுதினி இரவீந்திரன் (க/தலாத்து ஓயா தமிழ் ம.வி.), திருமதி ச.அருணாசலம் (க/விவேகானந்த தமிழ் ம.வி.), திருமதி சு.சிவமூர்த்தி (க/விவேகானந்த தமிழ் ம.வி.)

நாவுல - வை.சரவணமுத்து (நா/கம்மடுவ தமிழ் வித்தி.), நல்லையா பிரேமகுமார் (நா/கம்மடுவ தமிழ் வித்தி.)

நுவரெலியா - செல்வி சு.யோகராணியம்மாள் (நு/டெஸ்போட் த.வி. நானு ஓயா), திருமதி சு.திருவனம் (நு/டெஸ்போட் த.வி.நானு ஓயா), ம.உதயகுமார் (நு/பேர்ஹாம் த.வி.தலவாக்கல)

கம்பளை - திருமதி T.சந்திரவதனி (க/கதிரேசன் மத்திய கல்லூரி), பி.குணசேகரன் (க/விக்டன் தமிழ் வித்தி.), செல்வி கந்தையா கீதாஞ்சலி (க.முத்துமாரியம்மன் தமிழ் ம.வி.).

கொத்மலை - துரைசாமி நடராசா (கொ/இறஸ்புருக் தமிழ் வித்தி.), திருமதி Z.B.ஸக்கிரியா (கொ/அல்அரபா முஸ்லிம் வித்தி.), செல்வி P.சுசீலா (கொ/சீன் வித்தி.).

ஹற்றன் - P.சங்கர் (அவ/எல்டொப்ஸ் தமிழ் வித்தி.), மு.அகிலன் (அவ/புளியாவத்தை த.ம.வி.டிக்கோயா), திருமதி S.தியாகராஜா (அவ/ஹைலன்ஸ் கல்லூரி).

காலி - V.L.M.M.KHAIRA (கா/மழ்ஹறுல்ஸுல்ஹியா தே.பள்ளி), M.H.F நுஸ்கியா - (கா/உஸ்வதுன் ஹஸனா ம.வி.), S.D.N.நசீறா (கா/ஸாஹிரா தே.பள்ளி).

மாத்தறை - M.I.M.NAFLY (மாறை/தாருல் உலூம் ம.வி.)

அக்குரஸ்ஸ - M.S.பஸ்லி ஸாலிற் (மாறை/அஸ்ஸபாகனிஷ்ட வித்தி.).

தங்காலை - எம்.ஏ.எஸ்.ஸனூலா (ஹ/தங்காலை முஸ்லிம் கனிஷ்ட வித்தி.).

அம்பாந்தோட்டை - எஸ்.நஸீரா ஸக்கீம் (ஹ/ஸாஹிரா தேசிய பள்ளி), M.M.M.பௌஸ்டீஸ் (ஹ/எம்.ஆர்.தாஸம் கனிஷ்டவித்தி.). (3)

# கோதுமை மாவுக்கு கட்டுப்பாட்டு விலை!

கோதுமை மாவின் விலை கடந்த சில தினங்களாக அதிகரித்துச் செல்வதால், அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மாவுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்திருக்கின்றது.

இது தொடர்பாக அந்தச் சமாசம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சந்தையில் மாவின் விலை அதிகரித்துக் காணப்படுவதால் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவும், பாவனையாளர்களின் நன்மைகருதியும், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் கிளை நிலையங்களில் பச்சை நிறத்திலான வியாபாரக்குறி உள்ள மா கிலோ ஒன்று சில்லறை விலையாக 23ரூபா 50 சதமாகவும் -

சிவப்பு நிறத்திலான வியாபாரக் குறி உள்ள மா கிலோ ஒன்று சில்லறை விலையாக 27 ரூபாவாகவும் விற்பனை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இந்த விலையில் தேவையான அளவு மா எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அடுத்து வரும் தலைவர், பொதுமுகாமையாளர் மாநாட்டில் விலை தீர்மானிக்கும்வரை மேற்குறிப்பிட்ட விலை நடைமுறையில் இருக்கும் - என்றுள்ளது.(4)

# மக்கள் அனுமதியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- அல்லது ஆகக் கூடியது 25 மாதத்தில் - இந்தப் பதவியிலிருந்து அவர் இறங்குவதும், வேறு ஒருவர் இத்தகைய வானளாவிய அதிகாரங்களோடு பதவியில் அமர்வதும் தவிர்க்க முடியாதவையாகும்.

அப்படி நடந்தால், ஜனாதிபதி குமாரதுங்கவின் அதிகார ஆட்சி அற்றுப்போய்விடும். அதற்குப் பின்னரும் அதிகாரத்தில் அவர் இருக்கவேண்டுமானால் தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும். புதிய ஆட்சிமுறையின் கீழ் அதிகாரத்தில் தாம் நீடிப்பதற்கான வழிமுறையை அவர் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

அதைச் செய்வதற்கு அரசமைப்பை அவர் மாற்றியாக வேண்டும்.

அதேபோல, தற்போதைய நிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுப்பதாயின் தமிழர்களுக்கு ஓர் இடைக்கால நிர்வாகத்தைக் கணிசமான அதிகாரத்தோடு வழங்குவது இன்றியமையாதது, தவிர்க்க முடியாதது என்று ஜனாதிபதியும் ஏனையோரும் உணர்ந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்கமுடியாவிட்டாலும் ஏதேனும் ஓர் இடைக்கால நிர்வாகத்தை வழங்காமல் அமைதி முயற்சிகளை முன்நகர்த்த முடியாது என்பதை ஜனாதிபதி குமாரதுங்க ஏற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிகின்றது.

ஆனால், தற்போதைய அரசமைப்பின் கீழ் ஜனாதிபதி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைத் தமது சார்பில் ஒருவர் ஆற்றும் வகையில், அதைத் தனக்குக் கீழ் உள்ள ஒருவரிடம் ஒப்புவிக்கலாமே தவிர, இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் ஓர் அதிகாரப் பகிர்வுக்குச் செல்வதற்குத் தமக்கு அரசமைப்பில் அதிகாரமில்லை என்றும் ஜனாதிபதி உணர்கிறார்.

எனவே, இடைக்கால ஏற்பாடு ஒன்றைத் தமிழர்களுக்கு வழங்குவதற்கும் அரசமைப்பு குறுக்காக நிற்பதாக ஜனாதிபதி கருதுகின்றார் எனக் கூறப்படுகின்றது.

எனவே, இந்த இரண்டு பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அரசமைப்பில் மாற்றம் கொண்டு வருவது அவசியம்.

ஆனால், தற்போதைய அரசமைப்பை அதிலுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக மாற்றுவதாயின் - அல்லது திருத்துவதாயின் - அல்லது புதுப்பிப்பதாயின் - நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு அதற்கு அவசியம்.

ஆன்ால், தற்போதைய நிலையில் - தமது தற்போதைய பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் - அத்தகைய ஆதரவு தமக்குக் கிட்டுவது துர்லபம் என்பது ஜனாதிபதிக்கு நன்கு தெரியும்.

எனவே, மக்கள் அனுமதியோடு, தற்போதைய அரசமைப்பை அதன் ஏற்பாடுகளுக்கு மீறி மாற்றியமைத்தால் என்ன என்று ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் ஆலோசித்து வருகின்றனர் எனத் தெரிகின்றது.

அரசமைப்பின் 86 ஆவது பிரிவின் கீழ், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது எனத் தாம் கருதும் ஏதேனும் விடயம் குறிதது மக்களின் கருத்தை அறிவதற்காக அது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி உத்தரவிடமுடியும்.

அந்த அடிப்படையில், இவ்விவகாரத்தை மக்களின் கருத்துக்கணிப்புக்கு விட்டு, அவர்களின் அனுமதியோடு அரசமைப்பை, அதன் ஏற்பாடுகளை மீறிய வகையில் மாற்றியமைக்கலாமா என்பது குறித்து ஜனாதிபதி தரப்பில் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

எது எப்படியென்றாலும் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைப் புலிகளுக்கு வழங்குவதில் ஜனாதிபதிக்கு அறவே உடன்பாடில்லை என்று தெரிகின்றது.

அதற்குப் பதிலாக -

தற்போதைய அரசமைப்பை மாற்றி அமைத்துவிட்டு -

2000 ஓகஸ்டில் தாம் முன்வைத்த தீர்வுத் திட்ட யோசனைகளின் அடிப்படையிலான இடைக்கால நிர்வாகம் ஒன்றை வழங்குவது குறித்துப் பரிசீலிக்க ஜனாதிபதி தயாராக இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுத் தரப்பின் இந்தத் தீர்மானம் சில வட்டாரங்கள் மூலம் புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

உத்தேச சர்வஜன வாக்கெடுப்பை சில அம்சங்களுக்காக அரசுத் தரப்பில் உள்ள ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய போன்ற கட்சிகளும் வேறு சில அம்சங்களுக்காக ஐ.தே. கட்சி போன்ற பிரதான கட்சிகளும் எதிர்க்கக்கூடும் என்றும் -

அதேசமயம், வெவ்வேறான காரணங்களுக்காக அவற்றை ஆதரிக்கவேண்டிய இக்கட்டும் அக்கட்சிகளுக்கு இருக்கும் என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த சர்வஜன வாக்கெடுப்பை அடுத்து ஏற்படக்கூடிய அரசமைப்பு மாற்றம் இடைக்கால நிர்வாகம் ஒன்றைத் தமிழருக்கு வழங்கும் என்று கருதி அதை ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய போன்றவை எதிர்க்கும்.

அதேபோன்று அது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றும் என்பதற்காக ஐ.தே.கட்சி போன்றவை எதிர்க்கும்.

இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பை ஓரளவு சமாளித்துத் தமக்குச் சாதகமாக நடத்தி முடிப்பதற்காகவே வாக்களிப்புக்கு அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் சட்டமூலத்தை அவசர அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்ற ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள் எனக் கூறப்படுகின்றது.

(க-3)

# 20 இந்திய மீனவர் மன்னார் கடலில் கைது!

கொழும்பு,ஒக்.6

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக்கொண்டிருந்த 20 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். அவர்களது 'ட்ரோலர்'களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் தலைமன்னார்க் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயத்தில் இந்த மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களும் அவர்களது 'ட்ரோலர்கள்' மற்றும் உபகரணங்களும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் நீதிவான் எம்.அதாவுல்லா முன் நேற்று ஆஜர்செய்யப்பட்டனர். இவர்களில் படகோட்டிகளான ஐந்து மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான் ஏனையோரை இந்திய கடற்படையினிடம் கையளிக்கும்படி தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டு அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதன் பின்னர் இந்திய மீனவர்கள் வடபகுதிக் கடலில் அத்துமீறி மீன்பிடிக்கும் செயல் அதிகரித்து வருகின்றது. (க-3)

# பொலீஸ் நிலையத் தாக்குதல்: உயர்மட்ட விசாரணை நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.6

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ருவான் சந்திரசேகர பொலீஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான உயர்மட்ட விசாரணைகள் அடுத்தவாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

கைதி ஒருவர் யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்துப் பொலீஸாரால் தாக்கப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளச் சென்ற இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகர, விசாரணை அதிகாரி பெரோஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசகராகப் பணியாற்றும் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அலுவலரான பற்றிக் ஆகியோர் கடந்த 29ஆம் திகதி யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்துத தாக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளே அடுத்தவார முற்பகுதியில் இடம்பெறவுள்ளன.

இந்த விசாரணைக்குழு யாழ். மாவட்ட பிரதிப் பொலீஸமா அதிபர், யாழ். மாவட்ட உதவிப் பொலீஸ் அத்தியட்சகர், யாழ். பொலீஸ் நிலையத் தலைமை அதிகாரி மற்றும் இச்சம்பவத்துடன் தொடர்புடைய பொலீஸார் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5-ரி)

# படைத்தளபதியுடன் இணையப் பிரதிநிதிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்கும் - யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இணையத் தலைவர் விபூசக்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினை, குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# பாடசாலைப் பரிசுத்தினம்

வலி.கிழக்கு,ஒக்.6

நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் வருடாந்த பரிசுத்தினம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் சு.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி சத்தியலட்சுமி காங்கேயனும் சிறப்பு விருந்தினராக யா/பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை அதிபர் திருமதி மேரி கலிஸ்ரா செல்வநாயகமும் கலந்துகொள்வர். (ஐ-180)

# கொழும்பு வைத்தியசாலையில் விபத்துப்பிரிவு ஸ்தம்பித்தது

கொழும்பு,ஒக்.6

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்துச்சேவைப்பிரிவு நடவடிக்கைகள் நேற்று மாலைவரை பாதிக்கப்பட்டிருந்தன.

விபத்துச்சேவைப் பிரிவின் தாதிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாகவே சேவைகள் பாதிக்கப்பட்டன.

விபத்துச்சேவைப் பிரிவைச் சேர்ந்த தாதி அதிகாரி ஒருவரை அதிதீவிர சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் ஒருவர் தாக்கினார் எனக் கூறப்படுகின்றது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. (க-3)

# சுங்க அதிகாரிகள் எட்டுப்பேர் ஈராக்கில் எரித்துக் கொலை!

## புராதன கலைப் பொருள்களும் கொள்ளை

வாஷிங்ரன்,ஒக்.6

ஈராக் நாட்டில் பணியாற்றும் இனம்தெரியாத நபர்கள் சிலர் சுங்க அதிகாரிகள் 8 பேரை எரித்துக்கொன்றுள்ளனர்.

சுங்க அதிகாரிகள் கொண்டு சென்ற புராதன கலைப்பொருள்களையும் அவர்கள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர் என்றும் கூறப்பட்டது.

5ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய சுமேரிய காலத்தைச் சேர்ந்த இந்த அரிய கலைப் பொருள்களைத் திருட்டுக் கும்பல் ஒன்றிடமிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஈராக்கில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இத்தாலியப் பொலீஸாரும் ஈராக் சுங்க அதிகாரிகள் எட்டுப் பேரும் கூட்டாகக் கைப்பற்றியிருந்தனர்.

ஆனால் திருட்டுக் கும்பல் தப்பியோடிவிட்டது. இந்தக் கலைப் பொருள்களின் புராதன நாணயங்கள், வேலைப்பாடு மிகுந்த ஆபரணங்கள், கலைநயம் மிகுந்த பண்டைக்கால பூச்சாடிகள் உள்ளிட்டவை அடங்கும்.

கைப்பற்றப்பட்ட இந்தக் கலைப்பொருள்களை உரிய இடத்தில் சேர்ப்பதற்காக சுங்க அதிகாரிகள் எட்டுப்பேரும் இவற்றை வாகனங்களில் எடுத்துச்சென்றனர். அப்போது இனம் தெரியாத நபர்கள் அவர்கள் சென்ற வாகனங்களை வழிமறித்து கலைப்பொருள்களை எடுத்துச்சென்றுவிட்டனர். சுங்க அதிகாரிகள் எட்டுப்பேருடைய உடலும் எரிந்த நிலையில் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை பொலீஸாரிடம் கலைப் பொருள்களை விட்டுவிட்டுத் தப்பியோடிய திருட்டுக் கும்பல்தான் இப்படுகொலையைச் செய்திருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (க-8)

## பாக். உளவு அமைப்புக்கு புதிய தலைவர் நியமனம்

இஸ்லாமாபாத்,ஒக்.6

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயின் புதிய தலைவராக அஷ்பக் பெர்வேஸ் கியானி நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் அதிக அதிகாரம் படைத்த ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு, இந்தியாவுக்கு எதிராகப் பல்வேறு தீவிரவாத அமைப்புகளுக்கு இரகசிய ஆயுதப் பயிற்சி கொடுத்து வருகிறது என இந்தியாவால் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த அமைப்பின் தலைவராக இருந்த ஹசன் உல் ஹக், முப்படைகளின் இராணுவ அதிகாரியாகக் கடந்த வாரம் பதவி உயர்வு பெற்றார். இதைத் தொடர்ந்து ஐ.எஸ்.ஐயின் புதிய தலைவராக அஷ்பக் பெர்வேஸ் கியானி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, ஏழு இராணுவ உயர் அதிகாரிகளுக்கு லெப்டினன்ட் ஜெனரலாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இப்பதவி உயர்வு பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் நேரடித் தலையீட்டால் இடம்பெற்றது. (க-8)

## இஸ்லாமியத் தலைவரை விடுவிக்க இந்தோனேஷிய அரசு மறுப்பு!

ஜகார்த்தா,ஒக்.6

'ஜெம்மா இஸ்லாமியா' இயக்கத்தின் தலைவர் பஷீரை விடுதலை செய்யுமாறு இந்தோனேஷிய அரசுக்குத் தீவிரவாதிகள் விடுத்த நிபந்தனையை அந்நாட்டு அரசு வழக்கறிஞர் ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் வேலைபார்த்த 2 இந்தோனேஷியப் பெண்களை ஈராக் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துவைத்திருக்கிறார்கள். அவர்களை விடுவிக்கவேண்டுமானால் இந்தோனேஷியாவிலுள்ள தீவிரவாத இயக்கமான 'ஜெம்மா இஸ்லாமியாவின்' தலைவரான அபூ பக்கர் பஷீர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படவேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்.

இதை ஏற்று பஷீரை விடுதலை செய்ய இந்தோனேஷிய அரசு மறுத்துவிட்டது.

இதுகுறித்து இந்தோனேஷிய அரசு வழக்கறிஞர் கூறுகையில்:-

இது இந்தோனேஷிய சட்டம் தொடர்பான விவகாரம். இதில் அந்நிய சக்திகள் தலையிட அனுமதிக்கமாட்டோம் - என்றார்.

பஷீரே, தீவிரவாதிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். இஸ்லாமியப் போராளிகள் பெண்களைக் கடத்தினார்கள் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இச்செற்பாடு இஸ்லாமிய நெறிகளுக்கு எதிரானது.

அமெரிக்காவின் தூண்டுதலின்பேரில் இது நடந்திருக்கலாம் என்று பஷீர் கூறியதாக அவரது வழக்கறிஞர் அஹமது மிச்டன் கூறினார்.

உலக அரங்கில்

## காஸாப் பகுதியில் ஏழாவது நாளாக இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை!

காஸாவின் வடக்குப் பகுதி மீது நடைபெற்ற இஸ்ரேலிய வான் தாக்குதலில் குறைந்தபட்சம் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஏழாவது நாளாகவும் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது.

இந்த நான்கு பேரும் குண்டு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே அவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றதாக இஸ்ரேல் கூறுகின்றது.

சென்ற புதன்கிழமை தொடங்கிய இஸ்ரேலிய இராணுவ ஊடுருவலில் இதுவரை அறுபதிற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்களும், ஐந்து இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய நகரங்கள் மீது பலஸ்தீன ரொக்கெட் தாக்குதல் நிறுத்தப்படும் வரையிலும் இஸ்ரேலியப் படைகள் காஸாப் பகுதியில் இருக்கும் என இஸ்ரேலிய அரசு தெரிவித்துள்ளது. காஸாப்பகுதியில் பெருமளவு இஸ்ரேலியப் படைகள் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையிலும், பலஸ்தீன ஆயுததாரிகள் உள்ளூரில் வடிவமைக்கப்பட்ட இரு ரொக்கெட்டுக்களை நேற்று முன்தினம் இஸ்ரேலை நோக்கி ஏவினர். இத் தாக்குதலில் எஸ்தெரோ நகரில் ஒருவருக்கு லேசான காயமேற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-8)



இப்போதெல்லாம் வித்தியாசமான போட்டிகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. ஸ்பெயின் நாட்டின் ெராங்கோனா பகுதியில் மனித கோபுரங்கள் அமைக்கும் போட்டி நடைபெற்றது. ஏராளமான அணிகள் இதில் கலந்துகொண்டன. லா கோலா என்ற அணியினர் 40 அடிக்கும் உயரமான மனித கோபுரத்தை அமைத்துக் காட்டினார்கள். இந்த அணியில் 250 பேர் இடம்பெற்றிருந்தனர்.

## தேர்தலில் தில்லுமுல்லு; சிக்கினார் பெரு அதிபர்!

லிமா,ஒக்.6

பெருநாட்டில் நடைபெற்ற தேர்தலில் அந்நாட்டு அதிபர் போலி கையெழுத்துக்களிலும் தில்லுமுல்லு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதைத் தொலைக்காட்சிச் சேவையொன்று ஒளிபரப்பிய வீடியோக் காட்சியொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெருநாட்டின் தேர்தல் தில்லுமுல்லுகளை வெளிப்படுத்திய தொலைக்காட்சி நிறுவனத்தின் மீது அந்நாட்டு அதிபர் எரிச்சலை வெளிப்படுத்தினார். பெருநாட்டின் அதிபர் அலிஜண்ட்ரோ டோலிடோ, தேர்தல் வெற்றிக்காக வேண்டி அவர் போலி கையெழுத்துப் போட்டார் என அவர் மீது குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.

அவரது சகோதரி மார்கரிட்டா இதற்கு உடந்தையாக இருந்தார் எனவும் கூறப்படுகிறது. இவரைப் பற்றி அமெரிக்கத் தொலைக் காட்சியில் இரு காட்சிகள் ஒளிபரப்பாகின. முதல் காட்சியில் தேர்தல் அதிகாரிகளிடம் அதிபர், சில பத்திரிகைகளை ஒப்டைப்பது இடம்பெற்றது. அடுத்த காட்சியில் அவர் தனது மனைவி மற்றும் சகோதரியுடன் தேர்தல் வெற்றியை ஓர் உணவு விடுதியில் கொண்டாடுவது ஒளிபரப்பானது.

அந்த நிறுவனத்தைத் தொடர்புகொண்ட அதிபர் "இந்தக் காட்சிகளை ஒளிபரப்பும் முன் யாரும் என்னிடம் இதற்கு அனுமதி பெறவில்லை. பாதி உண்மையை மட்டும் சொல்வது பொய் சொல்வதற்கு நிகரானது. மக்களை அவமதிப்பது போன்றது. நான் இதை அனுமதிக்கமாட்டேன். இதற்கு மேல் நான் எதுவும் சொல்லமாட்டேன். இது கோழைத்தனமான செயல்" - என்று திட்டித் தீர்த்தார்.

அதிபர் டோலிடோ ஊழலற்ற ஆட்சிக்கு உத்தரவாதம் அளித்தார். ஆனால், லட்சக்கணக்கில் போலிக் கையெழுத்துக்களைப் போட்டுத் தேர்தலின் வெற்றிக்கு வழிவகுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால்தான் தொடர்ந்து மூன்றாவது முறையாக அவரால் வெற்றிபெற முடிந்தது என்ற குற்றச்சாட்டு அவர் மீது சாட்டப்பட்டுள்ளது. (க-8)

## பிரபல நடிகை மரணம்!



பழம்பெரும் தயாரிப்பாளர் ஆர்பர்ட் ஹிட்ச்சாக்கின் 'சைக்கோ' திகில் படம் முன்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தப் படத்தில் நடித்த நடிகை ஜேனட் லீ, குளியல் அறையில் அவர் கொடூரமாகக் கொலை செய்யப்படும் காட்சி தத்ரூபமாக இருந்தது. அந்த நடிகை ஜேனட் லீ இப்போது மரணம் அடைந்துவிட்டார்.

அமெரிக்காவின் பிவர்லி ஹில்ஸ் பகுதியில் உள்ள அவரது வீட்டில் மரணமானார். அவருக்கு வயது 77. உயிர் பிரியும்போது அவரது கணவர் ராபர்ட் பிரண்ட் மற்றும் மகள் கெல்லி கர்டிகம் ஆகியோர் உடன் இருந்தனர். கெல்லிஸ் கர்டிகம் ஒரு நடிகைதான். 'சைக்கோ' நடிகை ஜேனட் லீ துணை நடிகைக்கான ஒஸ்கார் விருது பெற்றவர்.(8)

## அமெரிக்காவைச் சேர்ந்த இருவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு!

அமெரிக்காவைச் சேர்ந்த ரிச்சர்ட் ஆக்ஸல், லிண்டா ப.பக் ஆகியோர் மருந்துவத்திற்கான நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சுவீடனில் ஸ்டாக்ஹோம் நகரிலுள்ள 'கரோலின்ஸ்கா நிறுவனத்தில் அமைந்துள்ள நோபல் குழு 2004ஆம் ஆண்டுக்கான மருத்துவ நோபல் பரிசு பெற்றவர்களின் விவரங்களை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

மனிதர்களின் நுகரும் சக்தி குறித்த மரபணுச் சோதனைக்காக நியூயோர்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ஹாவர்டு ஹியூகிஸ் மருத்துவ மையத்தில் பணியாற்றும் ரீச்சர்டு ஆக்சல் (வயது 58) மற்றும் வாஷிங்ரனிலுள்ள சியாட்டில் நகரில் பிரட் ஹிட்சின்சன் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் பணிபுரியும் லிண்டா பபக் (வயது 57) ஆகிய இருவருக்கும் மருத்துவத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் நுண்வேதியியல், மூலக்கூறு நுண் இயற்பியல் துறை மற்றும் நோயியல்துறையின் பேராசிரியராக ரிச்சர்ட் ஆக்ஸல் பணியாற்றுகிறார்.

உணர்வு பற்றிய தகவல்கள் எப்படி பெறப்படுகின்றன. அவை வடிகட்டப்பட்டு மனித மூளையால் எப்படி புரிந்துகொள்ளப்படுகின்றன என்ற ஆராய்ச்சித்துறையில் சிச்சர்ட் சிறப்பு நிபுணத்துவம் பெற்றுள்ளவர்.

அமெரிக்கத் தேசிய அறிவியல் நிறுவனத்தின் உறுப்பினரான லிண்டா ப.பக்., குட்டிபோட்டு பாலூட்டும் விலங்கினங்கள் எப்படி தமது குட்டிகளைக் கண்டுபிடிக்கின்றன. பல்வேறுபட்ட நறுமணங்களை எப்படி வேறுபடுத்திப் பார்க்கின்றன. அவற்றைப் பெறும் விலங்கினங்களின் மூளை எவ்வாறு கருத்தைப் பெற்றுக்கொண்டு செயற்படுகின்றது என்பது தொடர்பான ஆராய்ச்சியில் சிறப்பான சாதனை படைத்தவர்.

மருத்துவத்திற்கான நோபல் பரிசுக்குச் சுமார் 12 கோடியே 22 லட்சம் ரூபா (இலங்கை நாணயப்படி) வழங்கப்படும்.

மேலும் 1991 ஆம் ஆண்டு இரண்டு பேரும் இணைந்து வெளியிட்ட கட்டுரைக்குச் சிறப்பு அந்தஸ்தும் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (க-8)

யாழ்.மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை, இளவாலை

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை மாணவனும்
சிவலிங்கம் - லூக்கலிஸ்ரா
தம்பதிகளின் புதல்வனுமாகிய
செல்வன் டெறிக்றொஷான்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
தையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்

(37239)(39-13-14-26)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



தவசிகுளம், கொடிகாமத்தைச் சேர்ந்த
வேலும்மயிலும் - ஜெகதீஸ்வரி
தம்பதிகளின் புத்திரியும்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.
மாணவியுமான
செல்வி வே. லதுஷா

*2004 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவரது கல்விக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் கொடிகாமம் தமிழ் ஸ்ரார் அக்கடமி ஆசிரியர் திரு.சிறிபவன அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

80/08, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(37237) (26-13-14)

பெரியப்பா பெரியம்மா குடும்பத்தினர்,
காந்தரூபன் சுகிதா குடும்பத்தினர்,
ஜெகநாதன் விஜயா குடும்பத்தினர்.



வெள்ளி விழாக் காணும்
ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சேவையில் 25 வருடங்களைப் பூர்த்திசெய்த
எமது கல்லூரி ஆசிரியர்களான
திருமதி சு.திருச்செல்வம்
திருமதி லி.வைத்தியகுமார்
திரு.சி.சரவணபவானந்தன்
திரு.ஜெ.குமாரதேவன்
ஆகியோரை சர்வதேச ஆசிரியர் தினமாகிய இன்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

06-10-2004. (சி-38023) (39-13-14-26)



Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6445921 முதல் 6457942 வரை
சீட்டிழுப்பு இல. 73 திகதி 04-10-2004

வெற்றி எண்கள் 7 5 3 2 5 0 சுப்பர் எண் 14

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,08,25,300/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,08,25,300/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 5,000/- | 5,30,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,059 | 500/- | 5,29,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,577 | 50/- | 5,28,850/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 104,827 | 10/- | 10,48,270/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 1,000/- | 1,09,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,062 | 100/- | 1,06,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,474 | 20/- | 2,09,480/- |
| மொத்தம் | 1,28,235 | | 46,56,300/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 46,56,300/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,11,19,425/-

தொடர் இல. 7414998 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 07 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

6449985-3-97
6449376-1-61
6448149-9-19
6446779-5-80
6452316-6-80



**கையடக்கத் தொலைபேசி இணைப்புக்கள் தொடர்பாக**

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் பல்கலைக்கழக சமூகத்தினருக்கு 303 கையடக்கத் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை பதிவுசெய்தோரும், செய்யாதோரும் 08.10.2004 இற்கு முன் தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர். (37240)
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.


## ஆசிரியர் தினவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.6

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் ஆசிரியர் தினவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்குக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.கிழக்குத் தென்பகுதி ப.நோ.கூ. சங்கத் தலைவர் அ.க.த. கிருஸ்ணராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மரநடுகையும் இடம்பெறவுள்ளது. (10-202)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஒக்.6

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தினவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்குக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் ச.செல்வப்பிரகாசம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (10-204)

✦ ✦ ✦

மாதகல்,ஒக்.6

இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையில் ஆசிரியர் தினவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குப் பாடசாலை அதிபர் என்.எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மாரீசன்கூடல் பங்குத்தந்தை ஜே.பி.அன்ரனிதாஸ் கலந்துகொள்வார். (10-95)

✦ ✦ ✦

மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் தினவிழா இன்று முற்பகல் 11 மணிக்குப் பாடசாலை அதிபர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மாதகல் பங்குத்தந்தை ஜே.வி.கிறிஸ்தோப்பர் கலந்துகொள்ளவுள்ளார். (10-95)

✦ ✦ ✦

வலி.கிழக்கு,ஒக்.6

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் தினவிழா இன்று காலை 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் மாணவத் தலைவர் செல்வன் மு.கதிர்காமதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்துகலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் கலந்துகொள்வார்.

பாடசாலை முதல்வர் சு.யோகராசா ஆசியுரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் ஆசிரியர்களைக் கௌரவித்துப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (10-180)

## அபராதம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் யாழ்.நீதிமன்றம் நபர் ஒருவருக்கு 55ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

மாவடி றோட், நாவாந்துறையைச் சேர்ந்த சீனியர் இராசதுரை என்பவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இவர் 16 ட்ராம்ஸ் கசிப்பினை வைத்திருந்த குற்றத்திற்காக யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 5ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்தவேண்டும் எனவும் செலுத்தத் தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். (10-5-ரி)


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும்
மீளிணக்கத்துக்கான அமைச்சினால்
யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்துக்கு
வழங்கப்படும் நாட்டரிசி
(புழுங்கல்) வழங்கலுக்கான

## கேள்வி கோரல்

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 யூன், யூலை, ஓகஸ்ட் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களிடமிருந்து (வரைவுள்ளது) கீழ்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென கீழ்த்தரப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | யூன் (MT) | யூலை (MT) | ஓகஸ்ட் (MT) |
| 01 | சாவகச்சேரி | 190 | 190 | 190 |
| 02 | கைதடி | 70 | 70 | 70 |
| 03 | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 04 | உடுப்பிட்டி | 32 | 32 | 32 |
| 05 | கட்டைவேலி - நெல்லியடி | 45 | 45 | 45 |
| 06 | பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 07 | புலோலி | 27 | 27 | 27 |
| 08 | மருதங்கேணி | 80 | 80 | 80 |
| 09 | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 | 90 | 90 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16 | தெல்லிப்பழை | 150 | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 | 30 |
| | மொத்தம் | 2500 | 2500 | 2500 |

02. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= யை யாழ். மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004-10-06 ஆம் திகதி தொடக்கம் 2004-10-21ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
03. மீளளிக்க முடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500/=யை அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
05. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை *தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)* என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004-10-22 பி.ப 2.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல்வேண்டும். அன்றையதினம் பி.ப.3.00 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.
06. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் *"புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி"* என எழுதப்படல் வேண்டும்.
07. கேளவிகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்குத் தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடைவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
08. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாகச் செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
09. கேள்விகள் பாசலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
10. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாள்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
*தலைவர்/அரச அதிபர்,*
*மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்,*
*யாழ்ப்பாணம்.* 05-10-2004

(சி-38020) (26-13-14)

உதயன்

## ஜனாதிபதி சந்திரிகாவின் வேடிக்கைப் பேச்சு

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகள் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக சாத்தியப்படாமல் - வெற்றியளிக்காமல் - போனதற்குக் காரணம் என்ன?

இதற்கான விளக்கத்தைப் பகிரங்கமாக வெளியிட்டிருக்கின்றார் - வெளியிட்டிருக்கின்றார் என்பதிலும் பார்க்க ஒப்புக்கொண்டிருக்கின்றார் - இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அதை ஒப்புக் கொள்வதற்குக் கூட, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தினத்தில் அடித்துக் கூறிய உரை ஒன்றைத் தான் மேற்கோள் காட்ட வேண்டியவராக இருந்திருக்கின்றார் ஜனாதிபதி.

*"முடிவில்லாத ஒரு துன்பியல் நாடகமாகத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்கிறது.*

*"எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆளுங்கட்சி முயற்சிப்பதும் எதிர்க்கட்சி எதிர்ப்பதும், பின்பு எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறி மீண்டும் அதே முயற்சியும் அதே எதிர்ப்புமாக இந்தச் சிங்கள வரலாற்று அரசியல் நாடகம் தொடர்ச்சியாக ஒரே பாணியில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக மேடையேறி வருகிறது. இலங்கையில் மாறிமாறி ஆட்சிப்பீடம் ஏறும் இரு பெரும் சிங்கள அரசியல் கட்சிகளுமே தமிழர்களுக்கு விரோதமான இந்த விபரீத நாடகத்தின் இயக்குநர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்துக்குக் காலம் மாறிய போதும் கதையின் கருப் பொருள் மாறவேயில்லை. தற்போது கொழும்பில் உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடியும் இந்த அபத்த நாடகத்தின் அப்பட்டமான வெளிப்பாடு தான். தமிழர்களைப் பகடைக் காய்களாகப் பாவித்து ஆடப்படும் இந்த சதுரங்க விளையாட்டின் எதிர் விளைவாக எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக்கப்பட்டன; எத்தனையோ பேச்சுக்கள் முறிந்து போயின; எத்தனையோ உடன்பாடுகள் கிழித் தெறியப்பட்டன; எத்தனையோ ஒப்பந்தங்கள் செயலிழந்து செத்துப் போயின. இதனால், தமிழரின் பிரச்சினை தீர்வின்றித் தொடர்கின்றது. காலத்தால் மோச மாகித் தமிழரின் அவல வாழ்க்கை தொடர்கின்றது"*

- இப்படி தனது கடந்த வருட மாவீரர் தின உரைக்கு முத்தாய்ப்பு வைத்திருந்தார் தலைவர் பிரபாகரன்.

அதனைத் தமது அழகிய ஆங்கில வார்த்தைகளில் அப்படியே மொழியுருவம் கொடுத்து, வெளிப்படுத்தினார் ஜனாதிபதி குமாரதுங்க.

தாம் அமைக்கும் 'சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆணைக்குழுவின்' அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தான் இதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி.

இந்தக் கட்டத்திலாவது இந்த உண்மையைச் சிங்களத் தலைமை ஒப்புக்கொள்ள முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்லவிடயம்தான்.

ஆனால், இதைக் கூட எதிர்க்கட்சிகளுக்கு சேறு பூசும் ஒரு முயற்சிக்குத் தான் ஜனாதிபதி பயன்படுத்தியிருக்கின்றார் என்பது தான் வேதனைக்குரியது.

மேற்படி ஜனாதிபதி சுட்டிக்காட்டிய - தலைவர் பிரபாகரனின் உரையின் கருத்துப் பகுதியில் - என்ன விவகாரம் அம்பலப்படுத்தப்பட்டதோ அதையே தாமும் செய்வதற்கு அந்த உரையையே ஜனாதிபதி பயன்படுத்த முயன்றிருக்கிறார் என்பதுதான் விசனத்துக்கும் வேடிக்கைக்கும் உரியது.

இன்றைய நிலையில் அமைதிப் பேச்சுக்களை ஜனாதிபதியின் ஆளும் ஐ.ம.சு.கூட்டமைப்பு ஆரம்பிப்பதற்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவும் தந்துவிட்டு - வெறும் காசோலையில் கையெழுத்திட்டுக் கொடுப்பது போல வழங்கிவிட்டு - விலகி நிற்கிறது பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.முன்னணி.

அதுமட்டுமல்ல, விரைந்து பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என்று ஆளும் தரப்பை அது நெருக்கக் கொண்டும் நிற்கிறது.

இது கடந்த காலத்தில் இல்லாத ஒரு புதிய நிலைமை, நேற்றுமுன்தினம் மாலை ஜெனீவாவில் இருந்து கொணடு பி.பி.ஸி.தமிழ்ச்சேவைக்குத் தாம் வழங்கிய பேட்டியில் இதனைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூட சுட்டிக்காட்டியிருந்தார்.

இன்றைய எதிர்கட்சி - முன்னைய எதிர்க்கட்சிகளின் வழமையான பாணியைப் போலல்லாமல், தமிழரோடு பேசி அமைதித் தீர்வைக் காணுங்கள் என்று ஆளும் தரப்பை முட்டித் தள்ளி, நெருக்குதல் கொடுத்துக் கொண்டு நிற்கின்றது.

ஆனால், ஆளும் தரப்போ சிங்களப் பேரினவாதத்துடன் கைகோர்த்துக் கொண்டு அமைதி முயற்சிகளைக் குழப்பி, மீண்டும் இனவாதப் போருக்கு வெற்றிலை வைத்து, போர்ச்சன்னதம் பூண்டு நிற்கிறது.

ஆளும் தரப்பினரும், அதன் தலைவியுமான ஜனாதிபதியும், அமைதி முயற்சிகளை ஆரம்பிக்காமல் இழுத்தடிப்பதற்கு, முன்னர் எதிர்க்கட்சிகள் கையாண்ட - தமது தரப்பு எதிரணியில் இருந்த காலத்தில் பின்பற்றிய - அந்த நடைமுறைப் போக்கைத்தான் இப்போது ஆளும் தரப்பில் இருக்கும் போது கையில் எடுத்துப் பின்பற்றிக் கொண்டு, அந்த வேடத்துக்கான பொறுப்பை தற்போதைய எதிர்க்கட்சி மீது போர்த்த முயல்வது வேடிக்கையிலும் வேடிக்கை. இதற்கு உவமை சொல்வதற்கு அனைத்துலக நாடுகளில் ஏதாவது ஒன்றில் இத்தகைய அரசியல் நாடகம் நடந்திருக்கிறதா? என்று பல பெரிய நூல்நிலையங்களில் பல வருடங்களுக்கு படித்துப் பார்க்க வேண்டிய பரிதாப நிலை!

# போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க முருங்கனில் விசேட அதிரடிப்படை முகாம்

## புதிய பொலீஸ்மா அதிபர் நடவடிக்கை

கொழும்பு,ஒக்.6

அதிகரித்து வரும் ஹெரோயின் கடத்தலைத்தடுப்பதற்காக மன்னார் மற்றும் முருங்கனில் விஷேட அதிரடிப்படைப் பொலீஸ் முகாம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

பொலீஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதிய பொலீஸ்மா அதிபர் ஏற்பாடு செய்த முதலாவது செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

மன்னார், தலைமன்னார், முருங்கன் ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக ஹெரோயின் கடத்தல் அதிகரித்துள்ளன. நாட்டுக்குள் ஹெரோயின் கடத்தலைத் தடுக்க வேண்டிய கட்டாயமும், கடப்பாடும் பொலீஸாருக்கு உண்டு.

அத்துடன், அண்மையில் தலைமன்னார் கரிசல் பகுதியில் ஏற்பட்ட திடீர் பதற்ற நிலையைத் தணிக்க அதிரடிப்படை பொலீஸாரை வவுனியாவில் இருந்து அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த அவசர நிலைமைகளைக் கருத்தில் கொண்டும், ஹெரோயின் கடத்தலைத் தடைசெய்யும் நோக்கிலும் முருங்கன் பகுதியில் விசேட அதிரடிப்படை பொலீஸ் முகாம் அமைக்கப்பட்டு அதிரடிப்படையினர் நிலை கொண்டுள்ளனர். இன்னும் ஒரு மாத காலத்தில் முருங்கனில் புதிய முகாம் அமைக்கப்பட்டு விடும் என்று தெரிவித்தார். *(மற்றொரு செய்தி 13 ஆம் பக்கத்தில்)*(ஐ-202)

# மது வழங்க மறுத்த கடைக்காரர் பொலீஸாரால் அடித்துக் கொலை!

## உலக மதுவிலக்குத் தினத்தில் சம்பவம்!!

உலக மதுவிலக்குத் தினத்தில் மதுபானக் கடை முகாமையாளர் ஒருவர் மது வழங்க மறுத்ததால் கோபமடைந்த பொலீஸ் கோஷ்டியொன்று அவரை அடித்துக் கொன்றதுடன், அங்கிருந்த ஏனையவர்களையும் காயப்படுத்தி, கடைக்கும் சேதம் விளைவித்து விட்டு அங்கிருந்த மதுபானப் போத்தல்கள் பலவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளது.

பொலனறுவைப் பிரதேசத்தில் இச் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடை உரிமையாளரான வசந்த குணரத்ன என்பவர் சம்பவம் பற்றிக் கூறியிருப்பதாவது:-

உலக மதுவிலக்குத் தினத்தை அனுஷ்டிப்பதற்காக அரச அறிவித்தலொன்றுக்கு அமைவாக மதுபானக்கடை கடந்த 3 ஆம திகதி மூடப்பட்டிருந்தது. அன்றைய தினம மாலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு பொலீஸ்காரர்கள் கடை முகாமையாளரான குவின்ரஸிடம் ஒருபோத்தல் சாராயம் தரும்படி கேட்டிருக்கிறார்கள்.

மதுவிலக்குத்தினம் என்பதால் மதுபானக் கடை மூடப்பட்டிருப்பதாகவும் மது விற்கப்படமாட்டாதெனவும் அவர் பொலீஸாரிடம் தெளிவாகக்கூறியுள்ளார்.

இதனால், கோபமடைந்த பொலீஸ்காரர்கள் அவரை இழிவான வார்த்தைகளால் பேசிவிட்டுச் சென்றுள்ளனர்.

பின்னர் மேலும் பலரைச் சேர்த்துக் கொண்டு ஜீப்பில் வந்துள்ளனர். அவர்கள் கடையில் இருந்த ஊழியர்களையும் கடை முகாமையாளர்களையும் தாக்கி, கடையை உடைத்துத் திறந்து வெளியில் இருந்த மது பானங்கள் முழுவதையும் குடித்துவிட்டு அங்கிருந்த மதுபானப் போத்தல்களை ஜீப்பில் ஏற்றியதுடன் முகாமையாளரையும் ஏனைய ஊழியர்களையும் பொலீஸ் நிலையத்திற்கு கொண்டுசென்றுள்ளனர்.

பின்னர் முகாமையாளரின் உதவியாளர் நிலைமையை அவதானிக்கப் பொலீஸ் நிலையம் சென்றபோது குவின்ரஸ் இறந்து போனதாகவும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டுள்ளதாகவும் அறிந்தார்.

குவின்ரஸ் சட்டத்தை மீறி மது விற்க மறுத்ததால் பொலீஸாரால் அடித்துக் கொலைப்பட்டுள்ளார் என்று குணரத்ன கூறியுள்ளார்.

இந்த விடயம் பற்றிப் புதிய பொலீஸ்மா அதிபரிடம் வினவியபோது சம்பவம் உண்மையானால் விசாரணை நடத்தப்பட்டு குற்றம்புரிந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார். (ப)

# கோப்பாய் பிரதேச செயலகத்தின் சிறுவர், முதியோர் தினவிழா

வலி.கிழக்கு,ஒக்.6

கோப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் ஆர்.இராசதுரை, டாக்டர் வை.தியாராஜா, கோப்பாய் அரிமா சங்கத் தலைவர் ஜி.ரி.ஞானசேகரவேல் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் 103 வயதான கோப்பாயைச் சேர்ந்த திருமதி வள்ளியம்மைப்பிள்ளைக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தலும், 31 முதியோர்களைக் கௌரவித்துப் பரிசில்கள் வழங்கலும் இடம்பெறும்.

இதேவேளை, முதியோர் தினப் போட்டியில் வெற்றிபெற்ற கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான பரிசளிப்பு இவ்வாண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 42 மாணவர்களைக் கௌரவித்துப் பரிசில வழங்கல் ஆகியனவும் இடம்பெறுமென சமூகசேவை உத்தியோகஸ்தர் வ.செல்வம் தெரிவித்துள்ளார். (10-180)

# நெடுந்தீவில் படகு திருத்தும் தளம் அமைக்க நடவடிக்கை

நல்லூர்,ஒக்.6

நெடுந்தீவில் படகுகள் திருத்தும் தளம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் எஸ்.கோபால சிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்போது அமைக்கப்படவிருக்கும் தளத்திற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்துள்ளதை அடுத்து இந்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இங்கு நிரந்தரமான தளமொன்று இல்லாமையால் பழுதடையும்படகுகளைத் திருத்துவதற்கு நீண்ட காலம் காத்திருக்கவேண்டி ஏற்படுகின்றது.

தற்போது அமைக்கப்படவுள்ள இத்தளத்தில் தீவுப் பகுதியில் உள்ள அனைத்துப படகுகளையும் விரைவில் திருத்திக் கொள்ள முடியும் எனவும், இதற்கான ஒழுங்குகளை நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் மேற்கொள்ளும எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10-111-204)

# மூதாட்டியின் இல்லத்துக்கு பிரமுகர்கள் நேரில் விஜயம்

வலி.கிழக்கு,ஒக்.6

யாழ். மாவட்டத்தில் வயதில் மூத்தவர் என்று இனங்காணப்பட்டிருக்கும் கோப்பாயைச் சேர்ந்த மூதாட்டியை பலரும் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

கோப்பாய் மத்தி முதலியார் வளவைச சேர்ந்த நூற்று மூன்று வயதுடைய திருமதி சுவாமிநாதன் வள்ளியம்மைப்பிள்ளையே மாவட்டத்தில் வயதில் மிகவும் கூடிய மூதாட்டி என்று அண்மையில் அடையாளம் காணப்பட்டார்.

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தால் அந்தப் பிரிவில் முதியோர் தினத்துக்குக் கௌரவிப்பதற்காக முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

**உதயனில் வெளியான செவ்வி**

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் வயோதிபர்களில் மிகவும் வயதில் கூடியவர் இவரே என்பதை அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனர். இவரை விசேட செவ்வி கண்டு உதயன் சிறப்பம்சம் ஒன்றை வெளியிட்டிருந்தது. அவரது வாழ்க்கை முறையையும் ஏனைய விவரஙகளையும் வாசித்தவர்கள் இந்த மூதாட்டியை ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் அவரது இல்லத்துக்குச் சென்று வருகின்றனர். பிரமுகர்கள், சமயப் பெரியோர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் மூதாட்டியை நேரில் சந்தித்து நலம் விசாரித்துள்ளனர்.(ஐ-180)

## நாளை

புரட்டாதி 21
வியாழக்கிழமை
(07.10.2004)
திதி : நவமி
முழுவதும்
நட்சத்திரம் : புனர்பூசம்
முன்னிரவு 7.21
சுபநேரம்: 7.32 - 9.02
ராகுகாலம்: 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

# இராமநாதன் கல்லூரியில் 'சிசு உதான' வங்கி அலகு

வலிகாமம்தெற்கு,ஒக்.6

மக்கள் வங்கியின் 'சிசு உதான' வங்கி அலகின் (மாணவர் மலர்ச்சி) 20ஆவது கிளை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராசா வங்கிக் கிளையினை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

மக்கள் வங்கியின் 'சிசு உதான' வங்கி அலகின் மூலம் மாணவர்களின் சேமிப்புப பழக்கம் அதிகரிப்பதுடன் ஆசிரியர்களும் தமது கடன் தேவைகளுக்கும் பிறதேவைகளுக்குமாக மக்கள் வங்கிகளுக்குச் சென்று காலதாமதம் செய்யாமல் இந்த அலகின் மூலமே தமது தேவைகளை, நிறைவு செய்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராசா கிளையை திறந்துவைத்த பின் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் யாழ்ப்பாண மாவட்ட 'சிசுஉதான' அலகின் இணைப்பாளர் வசிவச் சந்திரதேவன், மக்கள் வங்கிகளை நாடிச சென்ற காலம்மாறி மக்களை தேடி வங்கிகள் வரும் இக்காலத்தில் மாணவர்கள் தமது தேவைகளைச் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் உட்பட வங்கி உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

'சிசுஉதான' வங்கிக் கணக்கில் பல மாணவர்கள் வைப்புச் செய்தனர். வைப்புச் செய்த மாணவர்களுக்குரிய சான்றிதழகளும் அன்பளிப்புப் பொருள்களும் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராசாவினால் வழங்கப்பட்டன. (ஐ-152)

## உதயவாக்கு

குறுகிய நேரத்தை அற்பமாகக் கருதாதீர்கள். அந்நேரத்திலும் மிக அற்புதமான சாதனை படைத்துவிடலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

13 SRI தொடர் இலக்கமுடைய HONDA CIVIC கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 23, உடுவில் றோட், மானிப்பாய். T.P.: 0776134537 (37228)

## காணி விற்பனைக்கு

மல்லாகம் K.K.S. வீதிக்கு அண்மையில் 2½ பரப்புக் காணி தனிக்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 242198, 0777 116560. (37231)

## புதிய வீணை விற்பனைக்கு

புதிய வீணையும் பாவித்த வீணையும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.P.பாலகிருஷ்ணன், No. 692, K.K.S. வீதி, பூநாறி மரத்தடி, கொக்குவில். T.P.No.: 222 2940. (37220)

## வாடகைக்கு

273, கே.கே.எஸ். வீதியில் அமைந்த கடை வாடகைக்கு விடப்படும். தேவையானோர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு:திருமதி க.மங்கையர்க்கரசி, 320, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 4590516. (37166)

## மணமகள் தேவை

யாழ்: இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974இல் பிறந்த, விசாக நட்சத்திரமும், 4ஆம் பாதம், 2இல் செவ்வாய் மொத்தக் கிரக பாவம் 55½, கனடாவில் கம்பியூட்டர் சயன்ஸ் கல்விகற்றுத் தற்போது கொழும்பில் Computer Programmer ஆக வேலை செய்யும் மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 235/13, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (37199)

## மணமகன் தேவை

யாழ். கௌரவ குடும்ப அழகான, சுத்த போசன, 35வயது பெண்ணுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. சீதனம் உண்டு. தாரம் இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விள.இல.: 2399, மே/பா உதயன். (37222)

## திருமண சேவை

1975ஆம் ஆண்டு, Canada இல் உயர் அரச தொழில் மணமகனிற்கு B.Sc. அல்லது அத்துறை சார்பான மணமகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பதிவுக்கட்டணம் யாவும் இலவசம்.
T.P.: 021 4591417 (37226)

**SAAMSTECH இன்**
**ஆங்கில, சிங்கள**
**நேரடி வகுப்பு**

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.
**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna
Phone: 0773068968
(சி-37511)

**இணையத்தளம்**

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## தவறிவிட்டது

கொழும்புத்துறையைச் சேர்ந்த திருநாவுக்கரசு விக்கினேஸ்வரன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.822992358V), விசேட அ.அட்டை (இல.0101018833) என்பன கொழும்புத்துறைக்கும் சுண்டுக்குளி, காட்டுக்கந்தோர் ஒழுங்கைக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வி.ஆறுமுகம, 36/4, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி. T.P.: 7451 என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும். (37222)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/-, பேட்டுக்குஞ்சு 50/-. 11.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (37062)

பகிரா புறொயிலர் குஞ்சுகள் இன்று (06-10-04) புதன்கிழமை மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, றஞ்சீத், 517, ஸ்ரான்லி றோட், தாரகை, கால்நடைத் தீவன விற்பனை நிலையம், முதலாம் கட்டை, பருத்தித்துறை. ராதா - மாவடி, வட்டுக்கோட்டை. (37159)

மிகவும் தரமான இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/-, பேட்டுக் குஞ்சுகள் 50/- 11.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். சிவகலை, கோப்பாய், சந்நிதி Farm தொண்டைமானாறு ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37225)

## விண்ணப்பம் கோரல்

பொது எழுதுநர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை, கணக்குப் பதிவாளர் சேவை ஆகியவற்றின் வகுப்பு I இற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இச்சேவைகளில் வகுப்பு II 'அ' பிரிவில பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்கள் நவம்பர் மூன்றாம் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்கமுடியும் எனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் இதற்கான போட்டிப் பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (8-117)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தலைமையில் நடைபெறவுள்ளது. (10-135)

## பாராட்டி வாழ்த்தி அக மகிழ்கின்றோம்



சிவபாதம் - தேவகுமாரி *தம்பதிகளின் புத்திரி*
**செல்வி சாம்பவி**
*(யாழ்..புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)*

2004. தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 137 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன். இவரது பெறுபேற்றுக்கு உறுதுணையாக இருந்த அதிபர். ஆசிரியர் சமூகத்தினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இவர் மேலும் கல்விச் சிறப்புப்பெற அச்சுவேலி தீர்த்தகுளம் விநாயகரின் திருவருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
*சந்நிதி வீதி, அச்சுவேலி.* (சி-38015) (34-24-16-45) செல்விகள் **க.ராதிகா, க.ரேணுகா**

## பாராட்டுகின்றோம்

யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும்
இன்றைய ஆசிரியர் தினத்தில்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யா/கனகரத்தினம் ம.ம.வித்தி.**

வாழ்த்துவோர்:
பாடசாலை மாணவர்கள்.
அபிவிருத்திச் சங்கம்.
பழைய மாணவர்கள்
மற்றும் ஊழியர்கள்.

(37227)(42-16-45-24)

**LONDON ENGLISH COLLEGE**
No:105, Arasady Road, Jaffna. Ph.:021-222 5889

G.C.E. O/L
2004 December
**ENGLISH LITERATURE**
**Revision Classes.**
**October and November**
**Commence on Sunday**
**10th Oct. 2004 at 4p.m.**
Registrations on....
- Principal -
(சி-38012)(34-16-45-24)

## எழுத்துத் தேர்வு

தமிழீழ வைப்பகத்திற்கு உத்தியோக உதவியாளர் தரம் 03இல் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துத் தேர்வு எதிர்வரும் 09.10.2004 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00 மணிவரை, கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறும். உரிய பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளையில் தங்களது பெயர் விவரங்களைப் பார்வையிடலாம்.

மேலாளர்,
ஆளுகைப் பகுதி,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.
(சி-38017) (24-16-45)

## சேவை நலன் பாராட்டுவிழா

திருமதி சாட்சாயினி சச்சிதானந்தபிள்ளை
B.A. (Dip. in Edu.), Dip. in Hindu Civilazation)



**சேவைக்காலம்** - 1976.11.01 - 2004.06.02
ஆசிரியர் பணியில் தனது நிறைவான சேவையை ஆற்றி
ஓய்வுபெறும் எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சாட்சாயினி சச்சிதானந்தபிள்ளை
அவர்கள் தமது ஓய்வுகாலத்தில் பல சிறப்புக்களையும் பெற்று
வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மாணவர் சமூகம்.
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தி.
(37230) (24-46-45)

## சேவை நலன் பாராட்டுவிழா

திருமதி **சந்திராவதி லோககுகதாசன்**
Sp. Trd. (Ho.Eco.)



சேவைக்காலம் - 1971.09.01 - 2004.09.09
ஆசிரியர் பணியில் தனது நிறைவான சேவையை ஆற்றி
ஓய்வுபெறும் எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சந்திராவதி லோககுகதாசன்
அவர்கள் தமது ஓய்வுகாலத்தில் பல சிறப்புக்களையும் பெற்று
வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மாணவர் சமூகம்.
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தி.
(37229) (24-16-)



## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

15 . 10 . 2004
செல்வி **இராஜகணபதி அபிநயா**

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

06.10.2004



செல்வி **இராஜகணபதி திலக்சனா**

திரு.திருமதி இராஜகணபதி ஜெயவனிதா தம்பதிகளின்
செல்வப் புதல்விகள் இருவரும் தங்கள் முதலாவது, மூன்றாவது பிறந்த தினத்தை
இன்று (06.10.2004) புதன்கிழமை வடமராட்சியில் உள்ள தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.
இவர்கள் இருவரையும் கனடாவில் இருக்கும் அப்பா, துன்னாலையில் இருக்கும் அம்மா, அம்மப்பா,
அம்மம்மா லண்டனில் இருக்கும் மாமா, அல்வாயில் இருக்கும் அப்பம்மா, அம்மம்மாமார், அம்மப்பாமார்,
பாட்டா, பாட்டிமார், அப்பம்மாமார், அப்பப்பாமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமாமார், மாமிமார்,
அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்
விநாயகர் அருள்பெற்று பல்கலைகளும் கற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**[illegible] சந்தி, கரவெட்டி.** **தகவல்: அப்பா, அம்மா.**

# ஆசிரிய சமூகம் மீதான அழுத்தங்கள் அதிகரித்து வருவது கவலைக்குரியதே

உலக ஆசிரியர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

ஆசிரியத்தொழில் உலகளாவிய ரீதியில் வாண்மைத்துவத் தொழில்களில் ஒன்றாக உள்வாங்கப்படும் சிந்தனை வலுப்பெற்று வருகின்றது. அந்தவகையில், ஆசிரிய தின நிகழ்வு வாண்மைத்துவத் தொழிலாக ஆசிரியத் தொழிலைப் படிஉயர்த்த முக்கியத்துவம் பெற்றுவிளங்குகிறது எனலாம்.

ஒரு தனிமனிதனதும், சமூகத்தினதும், நாட்டினதும் விருத்திக்கு ஆசிரியர் மையத்தளமாக இயக்கம் பெறுகிறார். ஆசிரியரின் வகிபாகம் இன்று பழைமைச் சிந்தனையில் இருந்து மாறுபட்டதாக அமைவதைக் காணலாம். ஆசிரியர் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும், வழிகாட்டியாகவும், ஆலோசனை வழங்குபவராகவும், இடர்படும்போது சிக்கல் தன்மைகளில் இருந்து விடுவிப்பவராகவும், நண்பனாகவும், புதியன படைப்பவராகவும், ஆய்வாளராகவும், செயற்றிட்ட முகாமையாளராகவும், செயற்பரிமாணம் பெற்று வருவதை அவதானிக்கமுடிகிறது.

## ஆசிரியர்சேவை சமூகத்துக்குத் தேவை

பொதுவாகச் சமூகத்தினது சேவை சார்ந்த தொழில்முறையாகவும் பொறுப்பும் முன்மாதிரியுமான தொழில் முறைமையாக ஏனைய தொழில்முறைகளில் இருந்து வேறுபட்டதாக ஆசிரியர் தொழில் அமைகின்றது. ஆசிரியர் குறிப்பிட்ட நபரினது அல்லது சமூகத்தினது அபிவிருத்தியைத் தன்னுடைய ஆளுமை ஒருங்கிணைப்பு ஊடாக இருந்த மட்டத்தில் இருந்து உயர்வடையச்செய்யும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்.

இச்செயல்நிலைகளின் போது சாதக, பாதக விளைவுகள் ஏற்படுவது இயல்பு. உளவியல் அணுகுமுறையின்படி ஒரு செயலின் வெற்றிக்கும், முழுமைக்கும் நிறைவான மனமே மிகவும் அவசியமாகிறது.

அந்தவகையில், ஆசிரியரின் செயற்றிறன் வினைத்திறனுடையதாகவும், சமூகத்தின் விருத்திக்குப் பயனுறுதி வாய்ந்ததாகவும் அமைய அவர்களுடைய தொழில்சார் இடர்பாடுகள் நீக்கப்படுதல் அவசியமாகின்றது. ஆசிரியரின் சுதந்திரம், உரிமை, தேவைப்பாடுகள், நிவர்த்தி செய்கின்றபொழுது சாதகமான விளைவைப் பெறமுடியும்.

எமது பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் அதாவது வடக்கு - கிழக்குப் பிரதேசம் நாட்டின் ஏனைய பிரதேசத்தைவிட கல்விசார் இடர்பாடுகளை எதிர்கொள்வதில் மிக உயர்வாக உள்ளது. கல்விசார் இடர்பாடுகளில் ஒன்றான ஆசிரிய சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அளவிட முடியாதவை.

எமது பிரதேச ஆசிரியரின் உரிமை எந்தளவுக்குப் பேணப்படுகிறது என்பது கேள்விக்குறியே. ஆசிரிய சமூகம் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட இடர்பாடுகளினால் கல்வித்தரம் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைவதை யாரும் உணர்வதாக இல்லை.

வடக்கு - கிழக்குப் பிரதேசக் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து விட்டதாகக் குறைகூறும் கல்வி நிர்வாக உயர்அதிகாரிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள், ஆசிரியரின் நலன், உரிமை பேணப்படுகின்றதா என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதனடிப்படையில், உலக ஆசிரிய தினத்திலாவது இவர்கள் உணரவேண்டும் என்பதறகாகப் பல்வேறு பிரச்சினைகள் ஆசிரிய சமூகத்தினால் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

## ஆசிரியர்கள் எதிர்நோக்கும் ஏராளம் பிரச்சினைகள்

இவ்வாறான நிலைமை ஆசிரிய சமூகத்தின் மத்தியில் நிலவுகின்றபொழுது, ஆசிரியத் தொழிலை வாண்மைத்துவ தொழிலாக மாற்றுதல் என்ற செயற்பாடு கேள்விக்குறியாகின்றது.

ஆகவே, ஆசிரியத்தொழில் வாண்மைத்துவ தொழிலாக மாற்றம்பெறவும், கல்வித்தர மேம்பாடு உயர்நிலை நோக்கிய அடைவுமட்டத்தை அடைவதற்கும் தனிமனித, சமூக மேம்பாடு ஏற்படவும் பின்வரும் ஆசிரியர் தொடர்பான பிரச்சினைகளைக் கல்விநிர்வாக சமூகம் உள்வாங்கி அதற்கான பரிகாரமுறைகளைக் கையாளுதல் அவசியமாகின்றது.

★ ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்திசெய்த பின்னர் அவர்களை பாடசாலைகளில் நியமிக்கும்பொழுது அவர்களின் தொழில்சார் தகைமை, கல்வித் தகைமையைக் கருத்தில் கொள்ளாத நிலையும், பாடசாலை மாணவர்களின் மட்டத்திற்குக் குறித்த ஆசிரியர் எந்தளவுக்கு பொருத்தப்பாடு உள்ளவர் என்பதைக் கருத்தில் கொள்ளாது நியமனம் வழங்குதல், ஆசிரியர், மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு பின்னடைவாகவே அமைவதுடன், இருவருக்கும் இடையில் பொருத்தப்பாடின்மையான சூழல் ஏற்பட வாய்ப்பாகின்றது. உதாரணம் - விஞ்ஞானப் பட்டதாரியை ஆரம்பக்கல்வி உள்ள பாடசாலைக்கு நியமிக்கும் முறையை எடுத்துக் கூறலாம்.

★ எமது பிரதேசத்தில் ஆசிரிய இடமாற்றத்தைப் பொறுத்தமட்டில் ஓர் ஒழுங்கான முறைமை கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதனால், குறிப்பிட்ட ஆசிரிய சமூகம் சாதகமான பலனை அனுபவிக்கக் குறிப்பிட்ட ஆசிரிய சமூகம் கஷ்டநிலையை அனுபவிக்கின்ற இருவேறுபட்ட நிலை தோற்றம்பெறுவதால் ஆசிரிய சமூகம் விரக்தி நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

★ கஷ்டப் பிரதேசங்களில் சேவைசெய்யும் ஆசிரியர்களுக்குக் கஷ்டப்பிரதேச ஊக்குவிபபுப் பணம் வழங்கப்படுவதில்லை. இதனால், பொருளாதாரநிலையில் ஆசிரியர் பாதிப்படைகின்றார். உதாரணமாக, வடமராட்சி கிழக்குப் பகுதி, தீவகக் கல்வி வலயத்தின் சில பாடசாலை ஆசிரியர்களுக்கும் இக்கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

★ ஆசிரியர்கள் தமது சேவையில் குறிப்பிட்ட வருடங்களைப் பூர்த்திசெய்த பின்னர் அவர்களுக்கான தரமுயர்த்தல் செயற்பாடு மற்றும் அதற்கான சம்பள உயர்வு உடனடியாக வழங்கப்படாதமை அநேக ஆசிரியர்களின் பெரும் பிரச்சினையாக உள்ளது. இது கல்வி நிர்வாக ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் முரண்நிலை தோன்றக் காரணமாகவும் அமைந்துவிடுகிறது.

★ அரசினால் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படுகின்ற பொழுது கஷ்டப் பிரதேச நியமனம் என்றே வழங்கப்படுகின்றது. ஆனால், அப்பிரதேசங்கள் சட்டமுறைப்படியாக கஷ்டப் பிரதேச வரையறைக்குள் உணமையாக உள்வாங்கப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. இதனால், ஓர் ஆசிரியர் மீண்டும் மீண்டும் கஷ்டப் பிரதேச சேவையைச் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றமை ஆசிரியர் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

★ குடும்பத்தில் இருவரும் ஆசிரியராக இருக்கும் சந்தர்ப்பங்களில் ஒரே பிரதேசத்தில் இருவரும் வேலைசெய்யாத காரணங்களினால் குடும்ப ரீதியான பல பிரச்சினைகள் ஏற்படவும், குடும்ப உறவு பேணப்படுவதில் சிக்கல் தன்மை ஏற்பட்டு, அவர்களின் மனதில் பாதிப்பை ஏற்படுத்துவதால் தொழில்சார் ரீதியில் அவை தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது.

★ கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் சேவைபுரியும் ஆசிரியர்கள் போக்குவரத்து வசதி, தங்குமிடவசதி, உணவைப்பெறலில் உள்ள இடர்பாடுகளினால் பல்வேறு சவால்களை முகம்கொடுப்பதாக ஆசிரியசமூகம் உள்ளதை இன்றும் அவதானிக்கலாம். உதாரணமாக வன்னிப் பிரதேசத்தில், கரையோரப் பாடசாலைகளில் இந்தநிலை அதிகளவில் காணப்படுகின்றது.

★ வகுப்பறையில் அளவுக்கு அதிகமான மாணவர்கள் காணப்படுகின்றமை ஆசிரியரை கற்றல், கற்பித்தல் ரீதியில் பின்னடைவை விளைவிப்பதாக அமைகின்றது. உதாரணமாக நகர்ப்புறப் பாடசாலைகளில் ஒரு வகுப்பில் 45 மாணவர்கள் காணப்படுகின்ற நிலையும் உண்டு.

★ ஆசிரியர்கள் மீது அதிபர், ஏனைய ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர், கல்விப் பணிப்பாளர்களினால் பல்வேறு அழுத்தங்கள், பழிவாங்கல்கள் இடம்பெறுகின்றமை ஆசிரியரை மனரீதியில் பாதிப்படையச் செய்வதாகக் காணப்படுகின்றது.

★ குறித்த ஆசிரியர் மீது தண்டனை, இடமாற்றம் காரணங்கள் எவையுமின்றி வழங்கப்படுதல் ஆசிரிய சமூகத்தையே பாதிக்கும் செயற்பாடாக அது அமைகின்றது.

★ ஆசிரியர் இருக்கை மற்றும் மேசை, வகுப்பறை அமைப்பு முறை, பௌதிகவளம் சார் பற்றாக்குறை என்பவற்றால் ஆசிரியரின் தேவைகள், செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் பல்வேறு சவால்களை முகங்கொடுக்க வேண்டியநிலை காணப்படுகின்றது.

★ ஆசிரியர்களுக்குரிய விடுமுறை நாள்களில் வாண்மைத்துவம் சார்பான செயலமர்வுகளை நடத்துவது ஆசிரியரின் தொழில்சார்பான அடிப்படை உரிமையை மீறும் செயற்பாடாகவும், விடுமுறை நாள்கள் வேலை நாள்களாக மாறுகின்ற பொழுது ஆசிரியருக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் இடையிலான உறவல் விரிசல் ஏற்படவும் காரணமாக அமைகிறது.

★ தனியார் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியால் குறிப்பிட்ட ஆசிரிய சமூகம் உயர்நிலையும், ஏனைய ஆசிரிய சமூகம் ஒதுக்கப்படும் நிலையும் உருவாகக் காரணமாகிறது. தனியார் கல்வி நிறுவன ஆசிரியரை நம்பியுள்ள பிள்ளை பாடசாலையில் ஆசிரியரைக் கணக்கில் எடுக்காத நிலையைத் தற்போது அவதானிக்கமுடிகிறது.

★ ஆசிரிய வழிகாட்டல் நூல், மாணவர்களுக்குரிய பாடநூல்கள், தர உள்ளீட்டு பொருள்கள் உடனுக்குடன் கிடைக்காத தன்மையும், போதியதாக இன்மையும் கற்றல் செயற்பாட்டைப் பெருமளவில் பிரதேச ரீதியில் ஏற்படுத்துவதாக அமைகிறது. அரசினால் அனுப்பப்படும் சுற்றறிக்கைகள் உரியமுறையில் பாடசாலைக்குச் சேர்க்கப்படுகின்றனவா என்பதில் சந்தேகநிலையே தோன்றுகின்றது. சில சுற்றறிக்கைகளைத் திட்டமிட்ட ரீதியில் கல்வி அதிகாரிகள் மறைத்து வருவது ஆசிரியர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்துகின்றது.

★ ஆசிரியருக்கும் பாடசாலை மற்றும் பாடசாலை அயற்சமூகத்தினது உறவுநிலை உரிய வகையில் பேணப்படாமை ஆசிரியர்களுக்குப் பல்வேறு பிரச்சினை சமூகத்தினால் தோற்றுவிக்கின்றது.

★ ஆசிரியர்கள் குறித்த பாடசாலையில் உள்ள மாணவர்களின் விசேட தேவைகள், ஆபத்தின் விளிம்பில் உள்ள பிள்ளைகள் ஆகியோரை இனங்காண்பதில் உள்ள இடர்பாடுகளினால் ஆசிரியர் பல்வேறு தடைகளை எதிர்கொள்கிறார்.

★ கிராமப்புறப் பாடசாலையை விட்டு மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளை நாட்டம் கொள்ளுதல் கிராமப்புற ஆசிரியர் மத்தியில் தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்த அதேவேளை, நகர்ப்புறப் பாடசாலைகளில் அளவுக்கதிகமான பிள்ளைகளை முகாமைசெய்வதிலும் ஆசிரியர்களுக்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன.

★ ஆசிரியரின் பொருளாதாரத் தேவையை நிறைவுசெய்யும்வகையில் ஆசிரிய நலத் திட்டமோ, கடனுதவித் திட்டமோ அரசினால் அமைக்கப்படாமை பொருளாதார ரீதியில் ஆசிரிய சமூகத்தைப் பாதிப்பதாக அமைகிறது.

★ ஆசிரியர்களுக்கான தொடர்கல்வி வாய்ப்புகள், புலமைப் பரிசில் திட்டம் பற்றிய தகுந்த வழிகாட்டல் என்பன இல்லாததால் ஆசிரிய வாண்மைத்துவத்தைப் பாதிப்பதாக அமைகிறது.

★ நாட்டினது அரசியல், சமூகம் மற்றும் அடிக்கடி மாற்றம்பெறும் கல்வித் திட்ட நடைமுறையினால் ஆசிரியர் தன்னைத் தயார்ப்படுத்துவதிலும் பொருத்தப்பாடு அடைவதிலும் சிக்கல் தன்மையை எதிர்கொள்ளுதல்

## ஆரோக்கியமான தீர்வுகள்

எமது பிரதேசத்தில் நிலவும் ஆசிரியர் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த வரையிலான அமைப்புமுறையினூடாகத் தீர்வுகாண முயலுதல் அவசியமாகிறது. இதனை கல்விநிர்வாக அதிகாரிகள் கவனத்திற்கொண்டு செயற்படுவார்கள் ஆயின், ஆசிரிய சமூகம் ஓர் ஆரோக்கியமான சூழலைப் பெறவாய்ப்பு அதிகரிக்கும்.

ஆசிரியர் நியமனம் மற்றும் இடமாற்றத்தின்போது ஆசிரியர் நலன், மாணவர் நலனை அவாகளைக்கொண்டு செயற்படும்போது தவறுகள் ஏற்படுவது குறைவடையும்.

ஆசிரிய இடமாற்றத்தைக் குறிப்பிட்ட வருடத்துக்கு ஒருமுறை பொதுவான திட்ட ஒழுங்கமைப்பில் இடம்பெறச்செய்வதன் ஊடாகவும் கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குரிய உரிய சம்பளப்படியை வழங்குவதனூடாகவும் பிரச்சினையைக் குறைக்கமுடியும்.

ஆசிரியர் தொழில்சார் தரமுயர்த்தல் மற்றும் அதற்குரிய சம்பளத்திட்டத்தைக் குறித்த கல்விவலயம் துரிதமாக வழங்குதல் ஊடாகவும், மாணவர் எண்ணிக்கையை வகுப்பறையில் வரையறுத்துக் கொள்வதனூடாகவும், ஆசிரியர் மீதான பல்வேறுபட்ட அழுத்தங்களைத் தவிர்ப்பதனூடாகவும், செயலமர்வுகளை திட்டமிட்டமுறையில் இடம்பெறச்செய்வதனூடாகவும் ஆசிரியர் மத்தியில் முரண்நிலையைத் தோற்றுவிக்காது.

கல்வித் திணைக்களம் உரிய காலப்பகுதியினுள் பாடநூல், கைந்நூல்களைப் பெறச்செய்தலும், ஆசிரியர் பாடசாலை மற்றும் அயற் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதனூடாகவும், ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்துவதனூடாகவும், ஆசிரிய சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளமுடியும்.

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்,
சரவணை சின்னமடு
றோ.க.த.க.பாடசாலை

மேற்கூறப்பட்ட செயல்நிலைகளை ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஏற்ப முன்னெடுக்கின்றபோது ஆசிரிய சமூகம் சார்பாக இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடமுடியும்.

இதனை ஆசிரியர் தினமாகிய இன்று கல்வி நிர்வாக அதிகாரிகள் கவனத்தில் கொண்டு செயற்படுவது எமது பிரதேச கல்வி தர உயர்வுக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் செய்யும் சேவையாக அமையும். ▲

## அள்ளிடக் குறையாச் செல்வம்

எடுத்தாளும் கல்வி தனை
ஏற்றமுடன் ஊட்டு கின்ற
வடுவற்ற ஆற்ற லென்றும்
வையத்தே வாழு மையா!

அப்பழுக் கற் றுயர்ந்த
அரிய 'ஆ' சிரிய சேவை
இப்புவி தனிலே யாற்றும்
இனியவர் இதயங் கொள்வோம்!

அள்ளிடக் குறையாச் செல்வம்
அன்புடன் ஊட்டுவோர் தம்
தெள்ளிய சிந்தை எம்முள்
தெய்வமாய்த் திகழு மன்றோ!

- கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## நல் ஆசான் யார்?

★ கல்வியறிவில் நிறைவுபெற்று, கற்பித்தலில் நன்கு பயிற்சியோடு தன்னிடமுள்ள ஆற்றல்களை யறிந்து அவற்றை வளர்த்துக் கொண்டு பூரண அர்ப்பணிப்போடு மாணவர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★ கண்டபடி அடிக்கடி விடுப்பு எடுப்பதை விடுத்து, தினமும் காலக்கிரமத்தை வரையறையாகக் கடைப்பிடித்துக்கொண்டு பள்ளிக்குச்சென்று சகோதர ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் ஒன்றிணைந்து வகுப்பறைகளையும் ஏனைய தேவைகளையும் ஆயத்தஞ்செய்யும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★ தான் கற்பிக்கவேண்டிய பாடங்களை முன்னிரவே நன்கு ஆயத்தஞ்செய்து பொருத்தமான உபகரணங்களுடன், மாணவர்கள் விடயங்களை எளிதாகக் கிரகிக்கக் கூடியவகையில், அவற்றைத் தெளிவாக விளக்கி மாணவர்களின் ஐயங்களைத் தெளிவுபடுத்தும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★"பிறர் பிள்ளையை ஊட்டி வளர்க்கத் தன் பிள்ளை தானே வளரும்" என்னும் விருது வாக்கியத்தை மனதிலிருத்தி மாணவர்கள் அனைவரையும் உயர்வுதாழ்வின்றி சமத்துவமாகப் பராமரிக்கும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★ கல்வியில் மட்டுமன்றி அழகியல்கலைகளிலும் நன்கு தேர்ச்சிபெற்று அவற்றை மாணவர்களுக்கிடையில் பயிற்றி விருத்திசெய்யும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★ மாணவர்களை வகுப்பறைக்குள் மட்டும் கட்டுப்படுத்தாது கல்விச் சுற்றுலாக்களிலும் அவர்களை ஈடுபடச்செய்து வெளியுலகக்காட்சிகளிலும் அவர்களின் சிந்தனைகளை வளர்க்கும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★ மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உடலுறுதி அவசியமென்பதை நன்குணர்ந்து உடற்பயிற்சிகளிலும் விளையாட்டுத்துறைகளிலும் போதிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★மாணவர்களுக்கு எதிர்பாராதவகையில் உடலூறு நேருமிடத்து உடனடியாக, விரைவாக, விவேகமாக உரிய நடவடிக்கை எடுத்து மருத்துவ சிகிச்சையை மேற்கொண்டு அவர்களின் பெற்றோருடன் தொடர்புகொள்பவனே நல்லாசான் ஆவான்.

★ சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து சமதர்மக் கோட்பாடுகளுடன் மாணவர்களை வழிநடத்தி ஏற்றத்தாழ்வற்ற மாணவச் சமுதாயத்தை வளர்க்கும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★தினமும பாடசாலைகள் ஆரம்பமாகும்போதும், முடிவுறும்போதும் மாணவர்களை இறைவழிபாடுகளில் ஈடுபடச்செய்து அவர்களை ஆன்மநெறியில் வழிநடத்தும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

★ நற்குண, நற்செயல்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் மாணவருக்கு மேல்வரிச் சட்டமாக, உதாரண புருஷனாக விளங்கும் உத்தம ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

- மாரீசன் -

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதரம்)

விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்
பகுதி II

# மாதிரிப்பரீட்சை - 2004

ஆசிரியர் வெ.ஜெகதீஸ்வரன்

3 மணித்தியாலம்


(நீர் விரும்பிய எட்டுவினாக்களுக்கு விடை அளிக்குக.

01. உயிர்க்கோளத்தின் பல்வேறு சூழல் தொகுதிகள் காணப்படுவதுடன் காட்டுச்சாகியம், குளச்சாகியம் போன்ற சாகியங்களும் காணப்படுகின்றது. இந்த உயிர்க்கோளத்தில் பல்வேறு குடித்தொகைகள், இனங்கள் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் அங்கிகளில் சந்ததிக்குச் சந்ததி கூர்ப்பு நிகழ்வதுடன் மாறல் விகாரம் போன்றனவும் ஏற்படுகின்றன. அங்கிகளில் நடைபெறும் இக்கூர்ப்பினைப்பற்றி சாள்ஸ் டார்வின் இயற்கைத் தேர்வுக் கொள்கை மூலம் விளக்கினார்.

I. a) இனம், குடித்தொகை, சாகியம் என்பனவற்றை வரையறுக்க?
b) ஒரு நாட்டின் குடித்தொகையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
c) சூழல் தொகுதியில் காணப்படும் கூம்பகங்கள் எவை?
d) இதில் தலைகீழ் எண்ணாக் கூம்பகத்திற்கு உதாரணம் தருக?
e) நைதரசன் சக்கரத்துடன் தொடர்புடைய 3 பக்ரீரியாக்களையும் அதன் தொழிற்பாடுகளையும் தருக.

II. a) தலைமுறையுரிமை என்றால் என்ன?
b) இயற்கைத் தேர்வுக் கொள்கை சாள்ஸ் டார்வினினால் எவற்றினைக் கொண்டு விளக்கப்படுகின்றது?
c) மெண்டல் தனது பரிசோதனைக்காக பட்டாணித் தாவரத்தைத் தெரிந்தெடுத்தமைக்கான காரணங்கள் எவை?
d) மெண்டலின் பரிசோதனையை கோட்டுப்படம் மூலம் விளக்குக?
e) பரம்பரை ரீதியாக ஏற்படும் நோய்கள் 3 தருக?

02. உலகின் அங்கிகளின் நிலவுகைக்கு தாவரங்கள் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.




★ மாணவன் ஒருவனால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அமைப்புப் படத்தில் தரப்பட்டுள்ளது.

I. a) இப்பரிசோதனை எதற்காக மேற்கொள்ளப்படுகின்றது?
b) இங்கு இடப்பட்ட பதார்த்தம் X இனைப் பெயரிடுக?
c) இதைத் தொடர்ந்து மாணவனால் மேற்கொள்ளப்படும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக
d) இங்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனை தவிர்ந்த ஒளித்தொகுப்பிற்கு அவசியமான காரணிகள் எவை?


II தாவரங்களில் இனப்பெருக்கம், சாற்றேற்றம் போன்ற செயற்பாடுகள் நடைபெறுகின்றன.
a) தன்மகரந்தச் செயற்கை, அயன்மகரந்தச் செயற்கைகளை வரையறுக்க
b) தன்மகரந்தச் செயற்கையைத் தடுக்க தாவரம் கொண்டுள்ள இசைவாக்கங்கள் எவை?
c) இரட்டைக் கருக்கட்டல் என்றால் என்ன?
d) சாற்றேற்றத்திற்கு உதவும் காரணிகள் எவை?
e) ஒருவித்திலைத் தாவரத்தில் ஒட்டுமுறை காணப்படாமைக்கான காரணம் யாது?

03.
I. இலங்கையில் பல்வேறு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் காணப்படுகின்றன.
a) இலங்கையில் கிடைக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் எவை?
b) அவை கிடைக்கப்பெறும் இடங்கள் எவை?
c) அவற்றின் பயன்பாடுகள் ஒன்றினைத் தருக?
d) காபனின் புறதிருப்பங்களான காரீயத்திற்கும் வைரத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?
e) பௌதிக வானிலையால் அழிதல் எவ்வாறு நிகழ்கின்றது?

II. சுண்ணாம்பினைப் பயன்படுத்தி சிமெந்து தயாரிக்கப்படுகின்றது.
a) சிமெந்தினைத் தயாரிக்கத் தேவையான ஏனைய காரணிகள் எவை?
b) ஐதான HCl இனுள் சுண்ணாம்புக்கல்லினை இடும்போது தோன்றும் அவதானங்கள் எவை?
c) இங்கு தாக்க வீதத்தை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
d) 180g HCL உடன் தாக்கமடையத் தேவையான சுண்ணாம்புக் கல்லின் திணிவு யாது?
e) இங்கு உருவாகும் வாயுவின் பயன்பாடு யாது?
(Ca=40, C=12, O-16, H=1, Cl=35.5)

04.
I. ஒளி ஒரு சக்தியின் வடிவமாகும். இந்த ஒளி கடத்தப்படுவதற்கு ஊடகம் அவசியம்.
a) ஒளி முறிவு என்றால் என்ன?
b) எளிய நுணுக்குக்காட்டியாகப் பயன்படும் வில்லை எது? அதற்கான கதிர்ப்படத்தினையும் தருக.
c) அவதிக் கோணம் என்றால் என்ன?
d) முழு உட்தெறிப்பின் தோற்றப்பாடுகள் எவை?

II. படத்தில் ஒரு சுரமானி காட்டப்பட்டுள்ளது.





a) சுரமானியின் அதிரும் இழையின் நீளம், இழுவை எவ்வாறு மாற்றப்படும்?
b) அதிரும் இழையின் அதிர்வெண் எவற்றினைப் பொறுத்து மாறுபடும்?
c) இழையின் மீது ஒரு கடதாசி எரியினை வைத்து அதிரும் இசைக்கவை ஒன்றினை அருகில் கொண்டு வரும் போது உமது அவதானங்களும் அதற்கான காரணங்களும் எவை?

III. மழைநாள் ஒன்றில் மாணவன் ஒருவன் மின்னலினை அவதானித்து 8 Se இன் பின்னர் இடியோசையினை உணர்ந்தான் எனின்,
a) மாணவனிலிருந்து மின்னல் தோன்றிய தூரம் யாது?
(வளியில் ஒலியின் வேகம் 340ms)
b) மாணவனின் செவியில் விழும் இடியோசையானது மூளையினைச் சென்றடையும் பாதை யாது?
c) இம்மாணவனுடன் நின்ற அவனது நண்பனிற்கு இடியோசை சிறிதாக உணரப்படின் அவனது காதில் காணப்படக்கூடிய கேட்டல் குறைப்பாடுகள் எவை?

05.
I. ஓர் அங்கியானது பல்வேறு தொகுதிகளால் ஆக்கப்பட்டது.
a) மனித உடலில் காணப்படும் தொகுதிகளுக்கு 4 உதாரணம் தருக.
b) நரம்பிழையத்தின் அடிப்படை அலகு எது?
c) ஒரு நியூரோனில் மயலின் கவசம் காணப்படுவதால் ஏற்படும் அநுகூலங்கள் எவை?

II) மனிதன் உடலில் பல்வேறு அகஞ்சுரக்கும் சுரப்பிகளும் காணப்படுகின்றன.
a) அகஞ்சுரப்பிகளுக்கும், புறஞ்சுரப்பிகளுக்கும் 3 உதாரணம் தருக.
b) பின்வரும் ஓமோன்களின் தொழிற்பாட்டினைத் தருக?
1) S.T.H 2) L.H. 3) ACTH 4) ADH
c) மனித உடலில் வெல்லச் செறிவுடன் தொடர்புடைய ஓமோன்கள் எவை?
d) நீரிழிவு நோயாளி ஒருவருக்கு Insulin ஊசி பயன்படுத்தப்படுகிறது எனின் அவரில் பாதிப்படைந்திருக்கக் கூடிய உறுப்பு எது?
e) Insulin வாயு மூலம் கொடுக்கப்படாது ஊசி மூலம் கொடுக்கப்படுவது ஏன்?

06.
I. மின்னானது பல்வேறு சக்தி முதல்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.
a) மின் உற்பத்திக்கு பயன்படும் சக்தி முதல்கள் எவை?
b) படத்தில் காட்டப்பட்ட மின்சுற்றில் விளையுள் தடையாது?
c) $A_1, A_2, A_3, A_4$ மானி வாசிப்புக்கள் எவை?
d) $V_1, V_2$, மானி வாசிப்புக்கள் யாவை?




II. உப்புக் கரைசலானது இரும்பு, காபன் மின்வாய்களைக் கொண்டு மின்பகுப்புச் செய்யப்படுகிறது.
a) மின்பகுப்பிற்கான அமைப்பினைக் கோட்டுப்படம் மூலம் காட்டுக.
b) இங்கு நடக்கும் அயனாக்கங்கள் யாவை?
c) இங்கு அனோட்டு, கதோட்டு மின்வாய்கள் யாவை? அவற்றில் நடைபெறும் தாக்கங்களையும் தருக.
d) மின்பகுப்பு விளைவுகளும் அவற்றின் பயன்பாடுகளும் யாவை?


07)
I. தொழிற்பாட்டுத் தொடரை அடிப்படையாகக் கொண்டு உலோகப் பிரித்தெடுப்பு போன்றனவும் மேற்கொள்ளப்படுகின்றன.
a) தொழிற்பாட்டுத் தொடர் எக்காரணிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது?
b) தொழிற்பாட்டுத் தொடரின் பயன்பாடு 2 தருக.
c) $A^+B^- + C^+ \rightarrow CB + A$ இது எவ்வகையான தாக்கம் ஆகும்?
d) இங்கு A,C இன் தாக்கம் பற்றி யாது கூறுவீர்?
e) தாக்க வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

II. அணுக்களானது உறுதி நிலையைப் பெறும் பொருட்டு இலத்திரனை இழக்கின்றன or ஏற்கின்றன or பங்கீடு செய்கின்றன.
a) Cl அயனின் $e^{n1}$ நிலையமைப்பைத் தருக.
b) இக்குளோரின் ஆனது Na உடனும் C உடனும் எவ்வாறான பிணைப்புக்களை ஏற்படுத்தும்?
c) ஈதல் பங்கீட்டு வலுப் பிணைப்பு என்றால் என்ன?
d) இதற்கு உதாரணத்தை புள்ளிதரவடிவில் தருக.

III.
a) உலோகங்கள் பிரித்தெடுக்கும் முறைகள் எவை?
b) இரும்பு பிரிந்தெடுப்பில் பயன்படும் மூலப் பொருள்கள் எவை?
c) ஈயம் எவ்வாறு பிரித்தெடுக்கப்படுகின்றது?

08)
I. இலத்திரனியல் சுற்றுக்களில் இருவாயி மூலம் ஆடலோட்டங்கள் சீராக்கப்படுகின்றன.
a) சீராக்கம் என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது?
b) நான்கு இரு வாயிகளைக் கொண்டு ஆடலோட்டத்தைச் சீராக்குவதற்கான சுற்றின் வரிப்படத்தை வரைக.
c) இங்கு கொள்ளளவி பயன்படுத்தப்படுவதன் நன்மை யாது?
d) ஒரு மூவாயியில் புறத்தோற்றத்தில் இருந்து பெறக்கூடிய தகவல்கள் எவை?

II.




a) இங்கு திரான்சிஸ்ரனின் எத்தொழிற்பாடுகள் காணப்படுகின்றது?
b) $S_1 S_2$ ஆளிகளை மூடும்போது MA, A மானி வாசிப்பினைக் காட்டாதிருப்பின் நீர் மேற்கொள்ள வேண்டியது யாது?
c) தொகையிடுஞ் சுற்றின் (IC) இன் வகைகள் எவை?

(09ஆம் பக்கம் பார்க்க)

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை - 2004

## மாதிரி வினாத்தாள்

22 T III

3 மணித்தியாலம் **தமிழ்மொழியும் இலக்கியமும் III** ஆசிரியர் க.ஈஸ்வரன்

1) பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைதருக.

அ) "இணையிலாதாரை ஈண்ட அமுது செய்விப்போம்"
- I. இக்கூற்று இடம் பெறும் நூல் யாது?
- II. இக்கூற்றைக் கூறியவர் யார்?
- III. யாருக்கு கூறினார்?
- IV. இணையிலாதார் யார்?

ஆ) "சாதுரியம் நிறைந்தவர்கள் பெண்கள். நீங்கள் அதனை நிரூபித்து விட்டீர்களே. குயில் **அதன் குஞ்சுகளை எவ்வாறு வளர்க்கிறது என்பது** இந்தக் குவலயம் அறிந்ததே"
- I. இக்கூற்றைக் கூறியவர் யார்?
- II. யார் யாருக்கு இக்கூற்றுக் கூறப்பட்டது?
- III. இக்கூற்று கூறப்பட்ட சந்தர்ப்பம் யாது?
- IV. குயில் எப்படி குஞ்சுகளை வளர்க்கிறது?

இ) "இல்லாட்டிப் போனா ஒரு தொந்தரவுமில்லாமே அந்த ஊருக்குப் போயி தாயி புள்ளைக மொகத்தைக் கண்ணால பாத்துட்டாச்சும் நிம்மதியாச் சாவலாமே"
- I. இக்கூற்று இடம் பெற்ற பாடம் யாது?
- II. இக்கூற்றுக்குரியவர் யார்?
- III. யாருக்குக் கூறப்பட்டது?
- IV. இக்கூற்றுக் கூறப்பட்ட சந்தர்ப்பம் யாது?

ஈ) "தாதையைக் கொன்றான் பின்னே
தலை சுமந்(து) இருகை நாற்றிப்
பேதையன் என்ன வாழ்ந்தாய்...."
- I. இக்கூற்று இடம் பெற்ற நூல் யாது?
- II. யாருக்குக் கூறப்படுகிறது?
- III. யாரால் கூறப்படுகிறது?
- IV. தாதை, பேதை என்பவற்றின் பொருளைத் தருக?

உ) "அவசரமாய்த் தந்தி வந்து போறதாக உன் மகன் உன்னட்டச் சொல லச் சொன்னார் ஆச்சி"
- I. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
- II. யாருக்குக் கூறப்பட்டது?
- III. எப்போது கூறப்பட்டது?
- IV. இக்கூற்று இடம் பெறும் பாடம் யாது?

(20 புள்ளிகள்)

2) பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் **தடித்த** எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்பினை விளக்கி எழுதுக.

அ) 'பாவியேன் மகனே **என்பள் பதைப்பள் மேன்முகத்தில் மோதித்**
தாவியே விழுவள் நின்று தயங்கியே மயங்கி வீழ்வள்
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள் பதறி ஏங்கி
**ஆவியைத் தேடித் தேடி அலமரும் உடலம் ஒத்தாள**"

ஆ) "நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனி இனிதே
**மன்றக் கொடும்பாடுரையாத மாண்பினிதே**
அன்றறிவார் யாரென் றடைக்கலம் வெள வாத
நன்றியின் நன்கினிய தில்"

இ) மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதியாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான் மகிழ்ந்தே
**ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்**
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி

ஈ) அயில் கடந்(து) எரியநோக்கும்
அரக்கரைக் கடக்க அழித்
துயில் கடந்(து) அயோத்தி வந்தான்
சொற்கட வாத தூதன்
**வெயில் கடந் திலாத காவல்**
**மேருவின் மேலும் நீண்ட**
எயில் கடந்(து) இலங்கை எய்தி
அரக்கனது இருக்கை புக்கான்

உ) **தன்னனி தயங்கிய முகத்துத் தாமரைக்**
**கண்ணினை மல்கிய** கருணை காட்டிட
உண்ணிறை யன்பு மிக்கொழுகிற் றென்னவே
வண்ணவான் மொழிச்சுவை யமிர்து வார்ந்துக.

(20 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடைதருக.
- அ) நீதிப்பாடல்களில் இன்னாதவை பற்றியும் இனியவை பற்றியும் வரும் கருத்துக்களைத் தொகுத்துத் தருக.
- ஆ) நமுறூது மன்னனுக்கும் இப்ராகீம் நழியவர்களுக்குமிடையே நடந்த உரையாடலைக் கொண்டு அவ்விருவரதும் குணநலங்களை விளக்குக.
- இ) இராமதூதனாகச் சென்ற அங்கதன் இராவணனிடம் கூறியவற்றைத் தொகுத்துத்தருக.

(15 புள்ளிகள்)

4) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடைதருக.
- அ) 'தேவகிருபையை முன்னிட்டு வாழும்....' என்ற பாடப்பரப்பில் சங் கரப்பிள்ளை என்ற பாத்திரத்தின் குணவியல்புகள் சித்திரிக்கப்படுமாற் றினைத் தொகுத்துத்தருக.
- ஆ) மழைப் பாட்டில் புலவர் கையாண்ட உவமைகளைக் கூறி அவற்றின் பொருத்தப்பாட்டினையும் ஆராய்க.
- இ) காவியத் தலைவி கதீஜா முகம்மதுவுக்கு எத்தகைய பணிவிடைகளைச் செய்தார் என்பதை ஆராய்க.

(15 புள்ளிகள்)

✲ 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு விடைதருக

5) அ) இளையான் குடிமாறனார் செல்வநிலையில் மட்டுமன்றி வறுமை நிலையிலும் விருந்தோம்ப வல்லார் என்பது எவ்வாறு கூறப்படுகிறது என்பதை விளக்குக.

ஆ) மாறனாரின் பத்தினியாரின் விருந்தோம்பல் பண்பு எவ்வாறு வர்ணிக் கப்படுகிறது என்பதை விபரிக்க

06.அ) லோகிதாசன் இறந்த செய்தியறிந்த சந்திரமதி எவ்வாறு வருந்தினாள் என்பதை ஆராய்க?

ஆ) லோகிதாசன் இறந்ததை அறிந்த அரிச்சந்திரனின் துயரத்தையும் எடுத்துக் கூறுக.

07. 'வள்ளுவரும் பாரதியாரும்' என்ற கட்டுரையில் பின்வரும் விடயங் கள் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றன என்பதை ஆராய்க.
- அ) சினம் என்னும் சேந்தாரைக் கொல்லி
- ஆ) ஏழை அழுத கண்ணீர்


(10 புள்ளிகள்)

## தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி I விடைகள்

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 3 | 21 | 4 | 31 | 1 |
| 2 | 1 | 12 | 1 | 22 | 1 | 32 | 3 |
| 3 | 3 | 13 | 2 | 23 | 2 | 33 | 2 |
| 4 | 4 | 14 | 1 | 24 | 2 | 34 | 3 |
| 5 | 2 | 15 | 3 | 25 | 1 | 35 | 2 |
| 6 | 3 | 16 | 3 | 26 | 3 | 36 | 2 |
| 7 | 1 | 17 | 2 | 27 | 1 | 37 | 3 |
| 8 | 2 | 18 | 3 | 28 | 2 | 38 | 2 |
| 9 | 4 | 19 | 2 | 29 | 2 | 39 | 4 |
| 10 | 2 | 20 | 4 | 30 | 2 | 40 | 4 |

விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பகுதி II தொடர்ச்சி)

III.




- a) இக்குற்றிப்படமானது எதனைக் காட்டுகின்றது?
- b) இங்கு நுணுக்குப்பன்னி, மின்னலையம், மட்டிசைப்பான், விரியலாக்கி ஆகியவற்றின் தொழிற்பாடுகள் யாவை?
- c) மட்டிசைப்பின் வகைகள் எவை?

09.

பின்வருவனவற்றில் ஐந்தினை விஞ்ஞான ரீதியில் விளக்குக
- a) தோடம்பழச்சாற்றுப் பானம் தயாரிக்கும்போது நீரின் அடியில் காணப்படும் வித்துக்கள சீனி சேர்க்கும் போது நீரின் மேல் மிதத்தல்.
- b) குருதிச்சோகை நோயுடைய ஒருவர் சிறு தூரம் ஓடுதல், சிறு வேலைகளைச் செய்யும் போது களைப்படைதல்.
- c) மழைக்காலங்களில் துவிச்சக்கரவண்டிகளின் நிறுத்திகள் (stand) தரையில் புதையாதிருக்க பலகைத்துண்டு வைக்கப்படும்.
- d) இரத்தினக்கல் பட்டை தீட்டுவதன் மூலம் அதன் பெறுமதி மேலும் அதிகரிக்கப்படும்.
- e) காலில் சிறுகாயம் ஏற்பட்டு சில நாள்களில் தொடைப் பகுதியில் நெறி காணப்படல்.
- f) தேசிப்பழத்துடன் வைக்கப்படும் வெண்டிக்காய் முதிர்ச்சியடைதல்.

10)

இலங்கையில் மலேரியா, டெங்கு, யாணைக்கால் போன்ற நோய்கள் பாரிய அளவில் ஏற்படல் ஒரு முக்கிய சுகாதாரப் பிரச்சினையாகும்.

I.
- a) மலேரியாவினை ஏற்படுத்தும் நுளம்பின் பெயர் யாது?
- b) நுளம்புப் பெருக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவீர்?
- c) மலேரியா, டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை எவ்வாறு மக்களிற்கு ஏற்படுத்துவீர்?
- d) நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளக்கூடிய ஓர் உயிரினவியல் கட்டுப்பாட்டு முறையாது?

II. நுளம்புத் தொல்லையை கட்டுப்படுத்த நுளம்புச் சுருள்கள் பயன்படுத்தப்படுகின்றன
- a) இந் நுளம்புச் சுருள் பயன்படுத்தும்போது அதில் இருக்க வேண்டும் என நீர் எதிர்பார்க்கும் 3 இயல்புகள் எவை?
- b) உடலிற்கு "சித்தாலேபா" பூசுவதன் மூலம் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபட லாம் என நம்பப்படுகிறது. இதனை நீர் எவ்வாறு விஞ்ஞான ரீதியில் பரிசோதிப்பீர் என விளக்குக.
- c) இங்கு நீ கவனம் செலுத்த வேண்டிய காரணிகள் எவை?

# யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பு: மானிப்பாயில் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு,ஒக்.6

படித்துவிட்டு வேலையற்று இருக்கும் யுவதிகள் சுயமாகத் தொழில் வாய்ப்புகளைத் தேடிக் கொள்ளக்கூடிய வகையிலான இலவச கருத்தரங்கு இம்மாதம் 11ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு வலிகாமம் தென்மேற்கு - மானிப்பாய் - பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் யுவதிகளும் ஏனைய விரும்பிய அனைத்துப் பெண்களும் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேக் - ஐசிங் அலங்காரங்கள், சேலைகளுக்கான அலங்காரங்கள், மட்பாண்டப் பொருள்களுக்கான அலங்காரங்கள், அன்பளிப்புப் பொருள்களுக்கான கைப்பணிப் பயிற்சிகள் போன்ற பல்வேறு அலங்காரப் பயிற்சிகள் தொடர்பான விளக்கங்கள் இக்கருத்தரங்கில் அளிக்கப்படவுள்ளன.

(ஐ-152)

# துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பொலீஸார் காயம்

தென்மராட்சி,ஒக்.6

நதிமன்ற காவல் கடமையிலிருந்த பொலீஸ்காரரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் மற்றொரு பொலீஸார் காயமடைந்த சம்பவம் கடந்த 3ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் சாவகச்சேரியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த நுவன் மித்ர (வயது-23) என்பவரே இந்தச் சம்பவத்தில் காலில் காயமடைந்தார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.


(4-117)

## சிறுவர் உரிமை குறித்த பயிற்சிச் செயலமர்வு

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோருக்கான முழுநாள் பயிற்சிச் செய லமர்வு இன்று புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது. இந்தச செயலமர்வை சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் ஏற்பாடு செய்துள்ளார். இதில் சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் எனபன பற்றி விளக்கம் அளிக்கப்படவிருக்கின்றது. (4-ரி-180)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 - 02 - 1933



உதிர்வு 06 - 10 - 2003

**அமரர் துரையப்பா ஞானசேகரம் (கனடா)**

(சுன்னாகம் ஞானம்ஸ் லைட் உரிமையாளர்)

அரங்கேறிய வாழ்க்கை நாடகம்
முடிவுக்கு வரும்....
நியதியை அறிந்திருந்தும்....
தெரிந்திருக்கவில்லை - உங்கள்
பிரிவின் துயர் இன்னதென்று....

ஆறாத நினைவுகளோடு...
**மனைவி, பிள்ளைகள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள்**
(கனடா, சுவிஸ்).

தகவல்:
**கருணா** - மருமகன் (சுவிஸ்)
T.P.: 021 6469559

(37132)(42-17-19)

## சாரதி பயிற்றுநர் தேவை

எமது சாரதி பயிற்சிப் பாடசாலைக்கு சாரதிப் பயிற்றுநர் தேவை. தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஒரு நாள் சம்பளம் 500/-
தொடர்பு: 0777 761576

சிற்றி டிறைவிங் ஸ்கூல்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6

(37204)(42)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலய அதிபர், உபஅதிபர் மற்றும் ஆசிரியர்கள் அனைவரையும் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து சேவைகள் பல புரிந்து நலன் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உதயரட்ணம் - லக்ஷ்மன் குடும்பத்தினர்,
மாணவன் ஆண்டு - 1.

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.(37161)

## கருணா கிளினிக்

**தாதியர் - பயிலுநர் தேவை**

எமது மேற்படி கிளினிக்கில் கடமை புரிவதற்கு தாதியர் - பயிலுநர் தேவை.
*அண்மையில் வசிப்பவர்கள் நேரில் சந்திக்கவும்.*

பிரதான வீதி,
சங்கானை.

- உரிமையாளர்.

(37145)

## கலையாத நினைவுகளுடன் ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 12 - 01 - 1956



மறைவு 04 - 10 - 2003

**அமரர் வெள்ளைத்தம்பி துரைராசா (துரை)**

(முன்னாள் உரிமையாளர், நவிண்டில் சாண்டாசந்தை வீதி, அம்பாள் ஸ்ரோர்ஸ்)

திதி: 06.10.2004

ஆண்டு ஒன்று சென்றதையா ஆனால்,
உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வு போல் இனிவருமா?
அன்பாய் அரவணைத்து ஆதரவுமொழி பேசி
உங்கள் மீது நாம் கொண்ட பாசமும் நேசமும்
உங்களையே நிதம் எண்ணி கலங்க வைக்கிறதே!
எங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த - தெய்வமே!
நீங்கள் இல்லாமல் நாங்கள் யாவரும் தனிமரமாய் நிற்கின்றோம்
என்றும் உங்கள் நினைவு நெஞ்சில் நிலைக்கிறதே - எங்கள்
தெய்வமே மங்காத மணிவிளக்காய் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்
உங்கள் திருமுகத்தை மறக்கமுடியாதய்யா மறக்க முடியாது!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*என்றும் ஈரவிழிகளுடன் சோகம் சுமக்கும்:*
**தந்தை, தாய், மனைவி, சகோதரிகள், சகோதரர்மார், மச்சான்மார், மச்சாள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*நாச்சிமார் கோயிலடி,
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை.
(37189)(42-19-17)*




# அமெரிக்காவில் கல்வியைத் தொடருங்கள்!

## நாம் யாழ்ப்பாணத்தில்

– உங்கள் காலடியில் – இருந்தும் சேவையாற்ற இருக்கின்றோம்.

* 6,00,000 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் தற்பொழுது வருடாந்தம் அமெரிக்காவில் தங்களது உயர் கல்வியினைக் கற்றுவருகின்றார்கள். இதில் 30,000 மாணவர்கள் ஐக்கிய இராச்சியம், மற்றும் அவுஸ்திரேலியா நாட்டினைச் சேர்ந்தவர்கள். இதன் மூலமாக அமெரிக்கா உலக பல்கலைக்கழக உயர் கல்வியில் முதலாமிடத்தில் திகழ்கிறது.

* நீங்கள் பெற்ற ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேற்றுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். எனினும் இலங்கைப் பல்கலைக்கழக அனுமதிக்காக சுமார் ஒரு வருடத்திற்கும் கூடுதலாகக் காத்திருக்க வேண்டும்.
* இலங்கையில் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கான எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது. இவ்வரையறையானது அதிகமானோரை வெளியில் வைக்கிறது. வெளியில் நிற்பதால் பட்டம் பெற தகுதியற்றவர்கள் என்று முத்திரை குத்துவது தகுதியானதல்ல. இல்லாவிடினும் அனுமதிக்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டும். காத்திருப்பும் காலத்தைக் கடத்துகிறது.
* ஏன் இவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? அமெரிக்கப்பட்டம் பெற நாம் உதவத்தயார். இந்தப்பட்டம் சர்வதேச அங்கீகாரம் உடையது.
* உங்களின் வசதிக்கு ஏற்ப கற்கையைத் தொடரலாம். இலங்கையில் முதல் இரு வருடங்களும், மீதி இரண்டு வருடங்களை அமெரிக்காவிலும்; அல்லது மூன்று வருடங்கள் நாட்டிலும், மீதி ஒரு வருடத்தை வெளிநாடான அமெரிக்காவிலும்; அல்லது நான்கு வருடங்களையும் இங்கு இருந்தவாறு கற்றுப் பட்டம் பெறலாம்.
* விஷேடமான வியாபாரக் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் நாம் வழிகாட்டுகிறோம். உங்கள் ஆற்றல்களை இனம் கண்டு நாம் வழிப்படுத்துகிறோம்.
* சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்தப்பட்டப்படிப்பினை அமெரிக்கா, கனடா அல்லது வேறு எந்த நாட்டிலேனும் இருந்தவாறு கற்றுத்தேறவும் முடியும்.
* சர்வதேச அங்கீகாரமிக்க அமெரிக்கப் பல்கலைக்கழகப்பட்டம் பெறும் ஆர்வம் கொண்ட ஒருவர் வெற்றிப்பாதையை தேர்ந்தெடுத்துவிட்டார். இனி அவர் எல்லையற்ற வெற்றிப்பயணத்தின் தெளிவான பாதையில் உள்ளார்.
* நாம் அடுத்து வரும் வாரங்களில் யாழ்ப்பாணத்தில் உங்களுக்காக காத்திருப்போம்.

இதைப்பற்றி மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள இப்திக்கார் மரிக்கார் அவர்களை, பிள்ளையார் இன், இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சந்தித்து அறிந்துகொள்ளலாம்.

**சந்திக்கும் நேரங்கள்**

7 ஆம் திகதி ஒக்டோபர் – வியாழக்கிழமை – 10.30 மு.ப. – 5.30 பி.ப.
8 ஆம் திகதி ஒக்டோபர் – வெள்ளிக்கிழமை – 9.00 மு.ப. – 12.00 ந.ப., 2.30 பி.ப. – 6.30 பி.ப.
9ஆம் திகதி ஒக்டோபர் – சனிக்கிழமை – 9.00 மு.ப. – 1.00 பி.ப.

அமெரிக்க தேசிய கல்லூரி அதற்கு உங்களுக்கு உதவும்! வழிகாட்டும்!!

**AMERICAN NATIONAL COLLEGE**
A Member of Ceylinco Consolidated

No. 308, 310, R.A.De Mel Mw, Colombo 03.
Tel: 4514415
Hotline, 0777 484 484, 0777 712 059.
E-mail: ifthikar@ancedu.com

# புலிகள் மட்டும்தான் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஏற்கமுடியாது

## தேசிய ஆலோசனைச் சபை அங்குரார்ப்பண நிகழ்வில் டக்ளஸ்

கொழும்பு,ஒக்.6

புலிகள் மட்டும்தான் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனைய அமைப்புகளும் சமாதானப் பேச்சில் உள்ளடக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

தேசிய ஆலோசனைச் சபையின் அங்குரார்ப்பண வைபவம் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவ்வாறு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு இரண்டாகப் பிரிவதை நாம் வரவேற்கவில்லை. ஆனால், வடக்கும் - கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்பட்ட ஒரு நிர்வாகம் தேவை. இப்பிராந்திய அமைப்புக்கு பொலீஸ், நீதிமன்ற அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

இப்பிராந்தியத்தை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டினருடன் தொடர்புகொண்டு அபிவிருத்திக்கான உதவிகளைப் பெறுவதற்கான அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும்.

ஜனாதிபதி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார். இந்த நல்ல சந்தர்ப்பத்தை புலிகள் தவறவிட்டுவிடாமல் சமாதானப் பேச்சுக்களில் மீண்டும் கலந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்கள் மீது உண்மையாகவே அக்கறை உள்ளவர்களானால், புலிகள் மீண்டும் தாமதம் ஏற்படுத்தாமல் பேச்சுக்களில் கலந்துகொண்டால், புலிகளால் கொல்லப்பட்டவர்களும் குறிப்பாக அமிர்தலிங்கமும் கூட - புலிகளை மன்னித்து விடுவார்கள்" என்றார் டக்ளஸ் தேவானந்தா.

### இ.தொ.கா.தலைவர் ஆறுமுகன் தொண்டமான்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகள் விட்ட இடத்தில் இருந்து தொடரப்படவேண்டும்.

அரசும், புலிகளும் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகசபை ஆலோசனைகளின் அடிப்படையிலேயே பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே இ.தொ.காவின் நிலைப்பாடு. அதற்காகவே அரசுக்கு ஆதரவு வழங்கினோம்.

எனது பாட்டனாரும், இ.தொ.கா. முன்னாள் தலைவருமான சௌமியமூர்த்தி தொண்டமான் நிர்வாகப் பொறுப்பை ஐந்து வருடங்களுக்கு புலிகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கூறினார். அன்று எவரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இன்று அது அவசியமாகிவிட்டது. இடைக்கால நிர்வாகசபை ஆலோசனைகளின் அடிப்படையில் ஏன் பேச்சை ஆரம்பிக்க முடியாது? - என்று ஆறுமுகன் தொண்டமான் கேள்வி எழுப்பினார்.

### பேரியல் அஷ்ரப்

'நுஆ' கட்சித்தலைவியும், அமைச்சருமான பேரியல் அஷ்ரப் தனது உரையில் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்களை ஒதுக்கிவிட்டு இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் காணமுடியாது. முஸ்லிம் மக்களுக்கும் உரிய அந்தஸ்துடன் கூடிய ஒரு தீர்வு கிட்டவேண்டும். பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போது முஸ்லிம்களின் பிரச்சினைகளும் அதில் உள்ளடக்கப்பட்டு தீர்வுகாணவேண்டும் - என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உப தலைவர் என்.எம்.சஹீட் பேசும் போது கூறியதாவது:-

தலைவர் ரவூப் ஹக்கீம் கொழும்புக்கு அப்பால் இருப்பதால் நான் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்தேன். குறுகிய நேரத்தில் எனக்கு கிடைத்த வேண்டுகோளுக்கு அமைய நான் இங்கு வந்தமையால் பேசுவதற்கு ஆயத்தமாக வரவில்லை. இருப்பினும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த தேசிய ஆலோசனைச்சபையை வரவேற்கின்றது. அதே சமயம் பேச்சுக்களின்போது முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படல் வேண்டும் என்பதை முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்துகின்றது - என்றார்.

(க-8)

# சமாதானப் பேச்சைக் குழப்பி, தாமதப்படுத்தி முட்டுகட்டைபோடவே இந்தக் கவுன்ஸில்!

## சீறுகின்றார் இரா.சம்பந்தன்

கொழும்பு,ஒக்.6

"சமாதானப் பேச்சைக் குழப்புவதற்கும், தாமதப்படுத்துவதற்கும், முட்டுக்கட்டை போடுவதற்கும்தான் இந்தத் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில்."

- இப்படித் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன்.

ஜனாதிபதியின் இஷ்டப்படி நேற்றுமுன்தினம் அவரே அங்குரார்ப்பணம் செய்துவைத்த சமாதானத்துக்கும், நல்லிணக்கத்திற்குமான தேசிய கவுன்ஸில் கூட்டத்தில் பங்குகொள்ளாது தமிழ்த் தேசியக் கூட்டணி ஒதுங்கிகொண்டமை சம்பந்தமாகக் கேட்டபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பந்தன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:- தேசிய சமாதானக் கவுன்ஸிலின் அமைப்பும், செயற்பாடும் எப்படி இருக்கும் என்று தெரியாது. சமாதானம் தொடர்பான விடயங்களை அது எவ்வாறு கையாளும் என்றும் தெரியவில்லை.

தேங்கிப்போயுள்ள பேச்சை மேலும் மோசமாக்கி, குழப்பிவிடவே இந்தப்பிரயத்தனம் நடைபெறுகிறது. இது இப்போதைக்கு தேவையில்லாத ஒரு விடயம்.

இப்படியான கவுன்ஸில் எவ்வித நல்ல பலாபலனையும் ஏற்படுத்தாது. மேலும் மேலும் பேச்சையும், சமாதான முயற்சியையும் குழப்புவதற்கான முயற்சி இது.

இதற்கு முன்னரும் இதுபோன்று கவுன்ஸில்கள் ஆரம்பிக்கப்பட்டன. 84 ஆம் ஆண்டும் இது மாதிரி சபை ஆரம்பிக்கப்பட்டது. அதனால் நடந்தது ஒன்றும் இல்லை. காலத்தை விரயப்படுத்தியது மட்டும்தான் மிச்சம்.

தற்போதைய ஜனாதிபதி இரண்டாம் முறையாகவும் ஆட்சியைக் கைப்பற்றியபோதும் இதே மாதிரியாக - சர்வகட்சிகளையும், மதத்தலைவர்களையும் உள்ளடக்கிய ஆலோசனைச் சபையை ஆரம்பித்திருந்தார். ஆனால், நடந்தது ஒன்றுமில்லை.

இதைவிடுத்து ஜனாதிபதி முன்னர் எம்மிடம் உறுதியளித்ததுபோல் புலிகளுடன் நேரடியாகப் பேச்சை ஆரம்பிக்கவேண்டும் - என்று தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் சம்பந்தன்.(க-8)

# தேசிய ஆலோசனை கவுன்ஸிலில் மு.கா. உத்தியோகபூர்வமாகப் பங்கேற்கவில்லை

## சதிமுயற்சி அரங்கேறுகிறது என்கிறார் பாயிஸ் எம்.பி.

கொழும்பு,ஒக்.6

ஜனாதிபதி நேற்று முன்தினம் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைத்த தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் வைபவத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உத்தியோகபூர்வமாகப் பங்குபற்றவில்லை என அக்கட்சி தெரிவித்துள்ளது.

அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கட்சியின் உப தலைவர் ஷஹீத் கலந்துகொண்டதும், அவரைப் பங்குகொள்ள வைத்ததும் சதி முயற்சியே. முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஷஹீத் மூலம் குழப்பங்களை விளைவிக்கும் சதித்திட்டம் ஒன்று அரங்கேறுகின்றது" - எனத் தெரிவித்தார் மு.காவின் தேசிய அமைப்பாளரும், தேசியப்பட்டியல் எம்.பியுமான கே.எம்.பாயிஸ்.

பாயிஸ் எம்.பி. தொடர்ந்தும் தெரிவித்ததாவது:-

தேசிய ஆலோசனைக்கவுன்ஸிலில் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் முஸ்லிம்காங்கிரஸ் பங்கேற்பதாக இருக்கவில்லை. கவுன்ஸில் தொடர்பாக எமக்கு இருந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக ஜனாதிபதியுடனான சந்திப்பு ஒன்றுக்கு நேரம் கோரியிருந்தோம்; அதற்கான பதிலை ஜனாதிபதியிடம் இருந்து எதிர்பார்த்திருந்தோம்.

அதற்கிடையில் ஜனாதிபதியோ - அவருக்கு நெருக்கமானவரோ - ஷஹீத்துடன் தொடர்பு கொண்டு அவரைக் கூட்டத்திற்கு அழைத்துள்ளனர். இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் பங்கேற்றது எனக்காட்ட முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஆகையால் இதயசுத்தியுடன் சமாதான முயற்சியில் ஜனாதிபதி ஈடுபடுகின்றார் என்பதில் நம்பிக்கை எமக்குக் குறைந்து வருகின்றது. இந்த லட்சணத்தில் அவர் சமாதானத்தைக கொண்டு வருவார் என்றும் கூறமுடியாது.

ஷஹீதும், கட்சிக்குள் இருந்து கொண்டே இந்தச்சதிக்குத் துணைபோயிருக்கிறார். கூட்டத்தில் அவர் மு.கா. தம்மைத் தலைவருக்குப் பதிலாக அனுப்பிவைத்தது என்றும் தெரிவித்துள்ளார் என நாம் அறிகிறோம்.

தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலின் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஷஹீத்தை மு.கா. அனுப்பிவைக்கவில்லை. கட்சிக்குள் உள்ள ஐந்து பிரதித்தலைவர்களுள் ஒருவர் அவ்வளவுதான். அவர் கட்சியின் கட்டுக்கோப்பை மீறிச் செயற்பட்டுள்ளார். அவருக்கு எதிராக மிக விரைவில் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்.

- எனத் தெரிவித்தார் பாயிஸ் எம்.பி.

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.6

நேற்றைய உதயன் பத்திரிகை நான்காம் பக்கத்தில் [illegible]லும் சில பாடசாலைகளின் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் என்ற தலைப்பில் வெளியான செய்தியில் வதிரி வடக்கு மெடிஸ்த மிஷன் த.க. பாடசாலையின் பரீட்சை முடிவுகளுக்குப் பதிலாக நெல்லியடி மெ.மி. த.க. பாடசாலையின் பரீட்சை முடிவுகள் வெளியாகிவிட்டன.

எனவே இரு பாடசாலைகளினதும் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

**நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை**
**சித்தியடைந்தோர் - 25**

பா.லக்சிப்பிரியா (151), தி.கலைவாணி (151) ம.ஜனனி (150), ப.பிரவீணா (149), சி.ஷாகிர்த்தியா (147), செ.நளினா (144), த.துஷ்யந்தன் (143), கு.கௌரிசங்கர் (140), ம.கஸ்தூரி (139), ச.பிருந்திகா (137), கி.பிரணவன் (130), நே.அங்கதன் (135), யோ.ஜிவாகன் (134), த.சிலம்பரசன் (133), ஞா.பிரவீணா (132), ப.கிருஷாந்தி (130), பா.பிரதீபராஜ் (129), யோ.சரண்ராஜ் (129), சி.திவாகர் (129), சு.சிந்து (129), க.தாரகா (129), க.சசிகலா (128), யோ.சாகித்தியன் (127), ச.சுகாஷன் (126), ச.அருண்பா (126).

**வதிரி வடக்கு மெடிஸ்த மிஷன்**
**த.க.பாடசாலை**
**சித்தியடைந்தோர் 03**

யோ.சௌமியா (159), க.துவாரகா (140), ச.கதீஸ் (129). (10-202)

## 3 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி,ஒக்.6

போயா தினத்தன்று அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்ததாகக் குற்றஞ்சாட்டி கொடிகாமம் பொலீஸார் மீசாலை வடக்கைச் சேர்ந்த வேலும் மயிலும் சந்திரசேகரன் என்பவரையும் சாவகச்சேரி பொலீஸார் தச்சந்தோப்பைச் சேர்ந்த சண்முகம் பாலசுப்பிரமணியம் என்பவரையும் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ்விருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (10-117)

## செயற்றிட்ட மதிப்பீட்டுப் பரீட்சை 16 ஆம் திகதியன்று

தென்மராட்சி,ஒக்.6

'யுனிசெவ்' நிறுவனத்தினால் தரம் எட்டில் கற்கும் மாணவர்களுக்கான தமிழ், கணிதம் ஆகிய பாடங்களின் செயற்றிட்ட மதிப்பீட்டுப் பரீட்சை இலக்கம் 2 எதிர்வரும் 16 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்களை 15 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10-117)

## ஊரெழுவில் பிரார்த்தனை மண்டபம்

கோப்பாய்,ஒக்.6

ஊரெழு ஸ்ரீசத்திய சாயி மண்டலிக்கு பத்து லட்சம் ரூபா செலவில் புதிய பிரார்த்தனை மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.


இந்த மண்டபம் எதிர்வரும் சாயிபாவாவின் பிறந்த தினத்தன்று எதிர்வரும் நவம்பர் மாதம் 23ஆம் திகதி வைபவ ரீதியாகத்திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-72)

## விருது வழங்கலும் நூல்கள் வெளியீடும்

லண்டன் தமிழினி மஞ்சரியும், சென்னை மணிமேகலைப் பிரசுரமும் இணைந்து நடத்தும் சமூக இலக்கிய மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்த 12 இலங்கையருக்கான விருது வழங்கலும், ஈழத்து எழுத்தாளர்களின் 21 நூல்களின் வெளியீடும் கொழும்புத் தமிழ் சங்கத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி மாலை 4 மணி தொடக்கம் இரு பகுதிகளாக நடைபெறவுள்ளன.

இந்த வைபவங்கள் இன்று 6 ஆம் திகதி நடைபெறும் என்று முன்னர் செய்தி வெளியாகியிருந்தது. (10-204)



நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 17 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் ஈகச்சுடரினை தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமையவன் ஏற்றுவதையும் பொதுச்சுடரினை வடபிராந்திய தொழிலாளர் தொழிற்சங்கத் தலைவர் எட்வின் ஏற்றுவதையும் அருகில் யாழ்.நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் மற்றும் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோர் நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:தீபன்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தும்பளை நெல்லண்டையில் வசிக்கும் **திரு.திருமதி.சுரேஸ்வரக்குருக்கள்** தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் **யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய** மாணவியுமான **செல்வி சுபஹரி** 5ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 124 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நெல்லண்டை,
தும்பளை,
பருத்தித்துறை.

*அம்மம்மா,மாமாமார்,மாமி*
*அன்ரிமார்,சித்தப்பாமார்*

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

*உரும்பிராய் வடக்கில், பலாலி வீதிக்கு அருகில் அக்குபஞ்சர் வைத்திய நிலையத்தின் அருகாகச் செல்லும் மடத்தடி ஒழுங்கையில் 2 அறை கொண்ட வீடு, கிணற்றுடன் கூடிய 4¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கூடிய விலை தருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

தொடர்பு:
இராசையா பாலசுப்பிரமணியம் (சுப்புறுமாமா)
உரும்பிராய் வடக்கு.
அல்லது
இரா.ஜெயக்குமார் (ஆசிரியர்)
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.

(சி-38011)

## தீவக கல்வி வலய ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

தவக வலயப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக முக்கிய தீர்மானம் எடுக்கும் கூட்டம் நாளை வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(10-13)

## கண்ணீர்ப் பூக்கள்



எமது துறை மாணவி
**சிவஞானம் சிவரஞ்சினியின்** அன்புத் தாயார்
அமரர் **பூமணி சிவஞானம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(37234)(34-14-17)

## துயர் பகிர்கின்றோம்

*எமது சக மாணவி* **சிவஞானம் சிவரஞ்சினியின்**
அன்புத் தாயார்
அமரர் **பூமணி சிவஞானம்**
**அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**



**சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.** (37233)(34-14-17) 3 ஆம் வருடம் 18 ஆம் அணியினர்.


# YOGI BEAUTY PARLOUR

*(Academy of Beauty Culture & Hair Dressing*

# HOME SCIENCE ACADEMY

*குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 9ஆம், 10ஆம் திகதிகள் (சனி,ஞாயிறு) முதல் ஆரம்பமாகவுள்ளன.*

- கேக்ஐசிங், மேலைத்தேய ஐசிங் அலங்காரம் , மாச்சீனி மலர் அலங்காரம் (Fondant structures & sugar flowers)
- முகஒப்பனை, தலை அலங்காரங்கள் , மணப்பெண்அலங்காரம்
- அழகுக்கலையும் மூலிகை சிகிச்சை முறைகளும் (Facial classes) (Beauty culture and Herbal therapy)

**இதில் பாடக் குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும். சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.**

(37232)(30-34-14)

75. அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
T.P.: 222 2796


## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஒக்.6

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 97ஆவதுதொடர் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கடவுள் வணக்கம், தலைமையுரையைத் தொடர்ந்து, வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ம.சுதர்சன் "இந்துதத்துவம்" என்னும பொருள் பற்றிச் சிறபபுச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(10-5-204)

## வரணிப் பிரதேசத்தில் மணல் அகழ்வு

தென்மராட்சி,ஒக்.6

வரணிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றுவோரினால் பொதுமககள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, தம்பான் ஆகிய பகுதிகளிலேயே இரவு வேளைகளில் வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உவர்நீர்த் தடுப்பு அணையின் பெரும் பகுதியிலும், தரவைப் பகுதியிலும் மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதால் உவர்நீர் இப் பகுதிக்குள் வரும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியிலிருந்து உழவு இயந்திரங்களில் எடுத்துவரப்படும் மணல் கனரக வாகனங்களில் ஏறறப்பட்டுக் செல்லப்படுவதாகவும் கனரக வாகனங்கள் செல்வதால் பல வீதிகள் சேதமடைந்து போககுவரத்துச் செய்ய முடியாதுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கினறனர்.

(10-117)


O/L மற்றும் A/L
பரீட்சை பெறுபேறுகளின் பின்

# சென்னை பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பற்றிய கருத்தரங்கு

- 147 Years old University
- 68 University Departments
- 232 Affiliated Colleges
- 2 Lakhs Student Capacity

# UNIVERSITY OF MADRAS

Institute of Distance Education

***Flexible Learning in Sri Lanka***

**Career Guidance**
**SEMINAR (Degree Studies)**
**9-10-2004 சனிக்கிழமை**

நேரம் : 11 a.m. - 12.30 p.m. & 4.00 p.m. - 5.30 p.m.
இடம் : வேம்படி மகளிர் கல்லூரி மண்டபம்

மேலதிக விபரங்களுக்கு
**ASIAN COMPUTER SYSTEMS**
2 G, (முதலாம் மாடி) ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி :021-222 5677



ACHIEVERS • சாதனையாளர்கள்

# திறமையானவர்கள் மத்தியில் சாதனையாளர் ஆகுங்கள்

**விளையாட்டு, நாட்டியம், நடனம், பாடல், ஓவியக்கலை, சூழல் பாதுகாப்பு, கணனி தொழில்நுட்பம் மற்றும் பேச்சாற்றல் போன்ற ஏதாவதொரு துறையில் நீங்கள் விசேட திறமைகள் உள்ளவர் என்றால் "சிசு உதான சாதனையாளர்கள்" திட்டத்தின் மூலம் சாதனையாளராக மக்கள் வங்கி உங்களை அழைக்கின்றது.**

### சிசு உதான சாதனையாளர்கள் எதற்காக ?

இலங்கை முழுவதிலும் உள்ள திறமைவாய்ந்த பிள்ளைகளின் திறமைகளை தேசிய மட்டத்திற்கு கொண்டுவரும் நோக்கில் மக்கள் வங்கி "சிசு உதான சாதனையாளர்கள்" திட்டத்தினை மேற்கொள்கின்றது. இத்திட்டம் மாணவர்களை உற்சாகப்படுத்துவதுடன் அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும்.

### "சிசு உதான சாதனையாளர்கள்" திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தேவைப்படும் தகுதிகள்

- மேலே குறிப்பிட்ட ஏதாவதொரு பிரிவில் விசேட திறமைகளைக்கொண்டிருத்தல்.
- 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு 20 வயதுக்குட்பட்டிருத்தல்.
- கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்பவராக இருத்தல்.
- இலங்கை பிரஜையாக இருத்தல்.

### வெற்றியாளர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுவார்கள்

- புத்திசாதுர்யமிக்க நடுவர்கள் குழுவினால் மிகவும் நிதானமாகவும், சுயாதீனமாகவும் சிசு உதான சாதனையாளராக விண்ணப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
- நடுவர்கள் குழுவினை மக்கள் வங்கியே நியமிக்கும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

### எத்தனை வெற்றியாளர்கள்

- ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தலா 5 பேர் வீதம் 25 மாவட்டங்களில் இருந்து 125 பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.
- அவ் வெற்றியாளர்கள் மத்தியில் இருந்து தேசிய மட்ட வெற்றியாளர்கள் 10 பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

### வழங்கப்படும் பணப்பரிசில்கள்

- மாவட்ட மட்ட வெற்றியாளர்களுக்கு - ஒவ்வொருவருக்கும் ரூபா 10,000 (125 வெற்றியாளர்கள்)
- தேசிய மட்ட வெற்றியாளர்களுக்கு - ஒவ்வொருவருக்கும் ரூபா 25,000 (10 வெற்றியாளர்கள்)
- சாதனையாளர்களை தோற்றுவித்த வசதி குறைந்த 10 பாடசாலைகளுக்கு - தலா ரூபா 50,000

இதற்கு மேலதிகமாக வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படும்.

### வெற்றியாளர்களின் பாடசாலைகளுக்கும் பரிசில்கள்

- மாவட்டரீதியாக தெரிவு செய்யப்பட்ட 125 வெற்றியாளர்களின் பாடசாலைகளில் வசதி குறைந்த 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

**பாடசாலையில் சிசு உதான வங்கிப் பிரிவொன்று இருந்தால் பரிசுப்பணம் இரட்டிப்பாகும். வெற்றியாளர்களுக்கு சிசு உதான வங்கிக் கணக்கொன்று இருந்தால் பரிசுப்பணம் இரட்டிப்பாகும்.** வங்கிக் கணக்கு அல்லது வங்கிப் பிரிவு 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் திறக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அருகிலுள்ள மக்கள் வங்கி கிளைகளிலும் உங்கள் பாடசாலையிலும் பெற்றுக் கொள்ள முடியும்.
**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி தினம் 2004 ஒக்டோபர் 15 ஆகும்.**

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

*"சிசு உதான சாதனையாளர்கள்" - நீங்களே எமது எதிர்காலம்*


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### வளர்மதி கல்விக் கழகம்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

எமது கல்விக்கழகத்தில் கல்விபயின்று 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

| பெயர் | புள்ளி |
|---|---|
| 1. செல்வி ஜெயக்குமார் நிதுஷா | 151 |
| 2. செல்வி தயாபரன் நிஜுஜா | 144 |
| 3. செல்வி தனபாலசிங்கம் தாரகா | 143 |
| 4. செல்வி இந்திரகுமார் பிரதீபா | 136 |
| 5. செல்வன் வேலாயுதபிள்ளை மிதிலன் | 134 |
| 6. செல்வி லிங்கேஸ்வரன் சாயிதா | 132 |
| 7. செல்வன் தர்மராசா தர்சிகன் | 131 |
| 8. செல்வன் ராதாகிருஷ்ணன் யசிகரன் | 131 |
| 9. செல்வன் வீரபாகு ராஜ்குமார் | 130 |
| 10.செல்வி நித்தியானந்தன் மிருணிகா | 129 |
| 11.செல்வி குணரத்தினம் வினோஜா | 128 |
| 12.செல்வி கிருஷ்ணன் நிவேதிகா | 127 |
| 13.செல்வன் தேவராசா பானுகோபன் | 127 |
| 14.செல்வன் சிவபாதசுந்தரம் வாகீசன் | 124 |

இவர்களையும் இவர்களிற்குக் கல்வி கற்பித்த எமது கல்விக் கழக ஆசிரியர்களையும் விசேடமாகப் புலமைப்பரிசில் வகுப்புகளை எடுத்த ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களையும் வெட்டுப்புள்ளிக்கு மிக அண்மிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் மற்றும் சித்திபெற்ற மட்டுவில் வாழ் மாணவர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வளர்மதி கல்விக் கழகம்,**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(சி-38016) (26-14-34)

# மாகாண இணைந்த சேவைகள் அலுவலர் இடமாற்றப் பட்டியல்

தம்பலகாமம்,ஒக்.6

திருகோணமலையில் நேற்று முன்தினம் வெளியான வடக்கு - கிழக்கு இணைந்த சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்றப் பட்டியலின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியானது.

அதன் எஞ்சிய பகுதி வருமாறு:

செல்வி சி.ஸ்ரீப்பிரியா - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம், செல்வி வே. ஜெயவதனி - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம், செல்வி க.மதிவதனி - வலயக் கலவி அலுவலகம் யாழ்ப்பாணம் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழப்பாணம், சோ.சிவசுந்தரம் - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம் - மாகாண கணக்காய்வுத் திணைக்களம் யாழ்ப்பாணம், செல்வி சோ.அஜந்திகா - வலயக்கல்வி அலுவலகம் வடமராட்சி - பிரதேசசபை கரவெட்டி, செல்வி ம.செல்வநிலா - வலயக் கல்வி அலுவலகம் வலிகாமம் - பிரதேச சபை வலி.வடக்கு, திருமதி ச.சுதாஜினி - பிரதம பொறியியலாளர் அலுவலகம் (கட்டடங்கள்) யாழ்ப்பாணம் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்.

செல்வி ம.இந்துசசி - பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - பிரதேசசபை பளை, செல்வி த.ஜீவகுமாரி - வலயக் கல்வி அலுவலகம் வேலணை - வலயக் கல்வி அலுவலகம் வலிகாமம், நா.ஸ்ரீரங்கன் - வலயக் கல்வி அலுவலகம், வேலணை - வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம், திருமதி யூ.விஜேந்திரன் - மாநகரசபை யாழ்ப்பாணம் - பிரதேசசபை வலி. வடக்கு, திருமதி நி.அருட்செல்வி - மாநகரசபை யாழ்ப்பாணம் - பிரதேச சபை வலி.வடக்கு, செல்வி பே.டொறத்தி - மாநகரசபை யாழ்ப்பாணம் - பிரதேசசபை வலி. தெற்கு மேற்கு, செல்வி ச.மைதிலி - மாநகர சபை யாழ்ப்பாணம் - பிரதேசசபை வலி. தெற்கு மேற்கு, திருமதி அ.யு.சுபைந்தினி மாநகரசபை, யாழ்ப்பாணம் - பிரதேசசபை வலி.வடக்கு, செல்வி சி.திருவருட்செல்வி - பிரதேசசபை வலிகாமம் தென்மேற்த - மாநகரசபை யாழ்ப்பாணம், செல்வி கி.மலர்விழி - பிரதேசசபை வலிகாமம் தென்மேற்கு - மாநகரசபை யாழ்ப்பாணம், செல்வி பா.வாமினி - பிரதேசசபை, வலி.வடக்கு - மாநகர சபை, யாழ்ப்பாணம், திருமதி அ.அ.நிரோஜினி - பிரதேசசபை வலி.வடக்கு - வலயக் கல்வி அலுவலகம் வலிகாமம், க. பழனிமலைநாதன் - மாகாண கணக்காய்வு அலுவலகம் யாழ்ப்பாணம் - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம், வை.விமசா - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - மாகாண கணக்காய்வுத் திணைக்களம் யாழ்பாணம், திருமதி த.ஜெயலட்சுமி - பி.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்.

அ.தயாளன் - மாகாண கணக்காய்வு அலுவலகம் யாழ்ப்பாண்ம் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம, ச.மயூரதன் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம், செல்வி இ.ரஜனி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு, செல்வி இ.நந்தினி - பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - பிரதம பொறியியலாளர் அலுவலகம் (கட்டடங்கள்) யாழ்ப்பாணம், செல்வி ச.நாகேஸ்வரி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம் - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம், திருமதி சுமதி சிவகுமார் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம், செல்வி கு.அருள்நிதி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம், இ.யோகராசா - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் - பிரதேசசபை வலி. கிழக்கு, கு.செல்வன் - மாநகரசபை யாழ்ப்பாணம் - நகரசபை வவுனியா, திருமதி வி. நிறைஞ்சனி - மாநகர சபை யாழ்ப்பாணம் - வலய கல்வி அலுவலகம யாழ்ப்பாணம், சி.தயானந்தன் - மாநகர சபை யாழ்ப்பாணம் - பிரதேச சபை வலி. கிழக்கு, செல்வி அ.நாகேஸ்வரி - பிரதேசசபை வலிகாமம் தென்மேற்கு - பிரதேசசபை வலி.வடக்கு, திருமதி த.துஷ்யந்தினி - பிரதேசசபை வலி.கிழக்கு - மாநகரசபை யாழ்ப்பாணம், செல்வி ஆ.சுதர்ஷினி - பிரதேசசபை வலி.கிழக்கு - பிரதிமாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்.

ச.சுதர்சன் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம யாழ்ப்பாணம் - வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம், செல்வி எஸ். தயாளினி வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் - பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம், செ.கிருபாகரன் - வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி - கட்டடங்கள் திணைக்களம், திருகோணமலை, கொ.ஜக்சீல் - மாநகரசபை, யாழ்ப்பாணம - வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம், சு.பாஸ்கரன் - வீதிஅபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம் - மாநகரசபை, யாழ்ப்பாணம, சி.கனகராஜா - கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் - வலயக்கல்வி அலுவலகம், சாவகச்சேரி, க.பாலசுப்பிரமணியம் - விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம் - வலயக்கல்வி அலுவலகம், வேலணை, தி.பஞ்சாட்சரநாதன் - வலயக கல்வி அலுவலகம், வேலணை - விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம், க.இராஜேந்திரா - பிரதேசசபை வடமராட்சி தெற்குமேற்கு கரவெட்டி - பிரதேசசபை பருத்தித்துறை, சிறிமகாதேவன் - பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் - கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம், மு.கணேசநாயகம் - பிரதேசசெயலகம், வலி,மேறகு சங்கானை - பிரதேசசபை, ஊர்காவற்றுறை, வே.அருட்செல்வம் - பிரதேசசபை பருத்தித்துறை - பிரதேசசபை வடமராட்சி தெற்குமேற்கு கரவெட்டி, திருமதி வி.நித்தியவாணி - கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் - பிரதேச செயலகம் யாழ்ப்பாணம், சி.தங்கராஜா பிரதேச செயலகம் வலி.கிழக்கு கோப்பாய் - மாநகர சபை யாழ்ப்பாணம், ஞா.சோதிலிங்கம் - பிரதேச சபை ஊர்காவற்றுறை - பிரதேச செயலகம், வலி.மேற்கு சங்கானை, இ.தயாபரன் - பிரதேச செயலகம், வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலகம். வலி.கிழக்கு கோப்பாய், ந.சிவகுமாரன் - மாநகரசபை, யாழ்ப்பாணம் - பிரதேச செயலகம் வலி. கிழக்கு கோப்பாய், வே.ரவீந்திரன் - பிரதேச செயலகம், வலி.கிழக்கு கோப்பாய் - பிரதேச செயலகம், வலி.தெற்கு உடுவில்,

**கிளிநொச்சி**

ப.தேசோரூபன் - பிரதேசசபை, பச்சிலைப் பள்ளி - பி/உள்ளூராட்சித் திணைக்களம், கிளிநொச்சி, கி.நாஜல் - பி/உள்ளூராட்சித் திணைக்களம், கிளிநொச்சி - பிரதேசசபை பச்சிலைப் பள்ளி

**மன்னார்**

லா.செ.குரூல் - பிரதேச செயலகம், முசலி - வலயக் கல்வி அலுவலகம் மடு, ஏ.ஏ.செல்வக்குமார் துரம் - வலயக்கல்வி அலுவலகம், மடு - பிரதேசபை, மன்னார், கா.சிவதாசன் பிரதேசசபை மன்னார் - பிரதேச செயலகம், முசலி, திருமதி சி.திரேசம்மா - நிறைவேற்று எந்திரி அலுவலகம் - கட்டடங்கள் யாழ்ப்பாணம் - வலயககல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்,

**மொழி - தமிழ்**

செலவி ச.கலாஜோதி - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம் - வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம், திருமதி த.மாலினி - வீதிஅபிவிருத்தித் திணைக்களம் பருத்தித்துறை - நகரபை பருத்தித்துறை, தா.நாகலிங்கம் - நகரசபை பருத்தித்துறை - வீதி அபிவிருத்தித் திணைக்களம் பருத்தித்துறை,

**பதவி - தட்டெழுத்தாளர்**

திருமதி செ.கி.திருமகள் - நிறைவேற்று எந்திரி அலுவலகம் (கட்டடங்கள்) யாழ்ப்பாணம் - பிரதி மாகாண சுகாதாரப்பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம், திருமதி ப.பாலாம்பிகை - பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம், பொ.சிவநேசதுரை - நிறைவேற்று எந்திரி அலுவலகம் (கட்டடங்கள்) யாழ்ப்பாணம் - பிரதேசசபை, ஊர்காவற்றுறை.

**கிளிநொச்சி மாவட்டம்**

மா.கதிரமலைப்பிள்ளை - வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி - பிரதி மாகாண சுாகதார சேவைகள் பணிப்பாளர்அலுவலகம், கிளிநொச்சி, திருமதி இ.அருள்மலர் - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி, செல்வி த.மனோறாணி - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி, திருமதி ப.சாரதா - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி, திருமதி அ.யூ.றே.மக்னமாரா - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி, சோ.மாலெமாறன் - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி, திருமதி பு.தாட்சாயிணி - உதவி விவசாய திணைக்களம், கிளிநொச்சி - வலயக்கல்வி அலுவலகம, கிளிநொச்சி, திருமதி ப.விஜிதா - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி - நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி, செல்வி அ.பகிரதி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி - உதவி விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி, த.ஜெயக்குமார் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி - வலயக்கல்வி அலுவலகம, கிளிநொச்சி, செல்வி செ.கோமதி - நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி - வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி, திருமதி ஜெசலோமையம்மா - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி, இ.செல்வநாதன் - பிரதேசசபை, பளை - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம், செல்வி சி.கலையமுதா - பிரதேச சபை கரைசசி - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி, ந.கணேசலிங்கம் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி - வலயக்கல்வி அலவலகம், வேலணை, திருமதி ம.இ.சுபாசினி - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி, செல்வி செ.கிரிஜா - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி - வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி, த.ஸ்ரீதரன் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி - பிரதேச சபை கரைச்சி, திருமதி மோ.வளமதி - கூட்டுறவு அபிவிருததி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி, திருமதி மோ.அருள்சோதி - பிரதேசசபை கரைச்சி - வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி, திருமதி ந.நகுலாம்பிகை - வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி - வலயக் கல்வி அலுவலகம் துணுக்காய்.

**முல்லைத்தீவு மாவட்டம்**

திருமதி இ.பிறேமலதா - உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு - பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை,

**மொழி - தமிழ்**

செல்வி அ.ய.ரா.வசந்தமலர் - பிரதேச செயலகம, மாந்தை கிழக்கு - பிரதேசசபை பருத்தித்துறை, திருமதி இ.பாஸ்கரதேவி - வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய் - பிரதேச சபை, கிளிநொச்சி, ந.தயாளன் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், முல்லைத்தீவு - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா.

# தமிழ் மொழி மூல ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுங்கள்

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழ் ஆசிரியர் சங்கம் அறிக்கை

காரைதீவு,ஒக்.6

"ஆசிரியர்களுக்கான உரிமைகள், சலுகைகள் வழங்கிவிட்டு கல்வி அபிவிருத்தியை எதிர்பாருங்கள் இந்த நாட்டில் உள்ள ஆசிரியர்களுக்கு குறிப்பாக தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கு ஏகப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தீர்க்காமல் எந்த திட்டத்தையும் முன்னெடுக்க முடியாது."

- இவ்வாறு சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு போரின் நிமித்தம் 150 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அவை இநத இருவருட காலத்தின் போது திருத்தப்படவுமில்லை; படையினரிடமிருந்து மீள ஒப்படைக்கப்படவுமில்லை. வடக்கு - கிழக்கு ஆசிரியர்களின் சம்பள நிலுவையாக சுமார் 32½கோடி ரூபா வழங்கப்படவேண்டும். ஏனைய மாகாணங்களைப்போல வடக்கு-கிழக்கு மாகாணத்தை அரசு கவனிப்பதில்லை

கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கான விசேட கொடுப்பனவு இன்னும் பல பகுதிகளுக்கு வழங்கப்படாமலுள்ளன. ஆசிரியரின் இடமாற்றங்கள் பாரிய பிரச்சினையாக உள்ளன. பாடசாலைத் தவணை மத்தியில் ஆசிரிய இடமாற்றத்தை ஆசிரியர், அதிபர் பதவி உயர்வு, சம்பள மாற்றம் என்பனவற்றில் திணைக்களம் பாராமுகமாக இருக்கிறது. ஆசிரியர் சேவை 1இற்குச் செல்ல வயதெல்லை நீடிப்பது (40ஆக) தொடர்பாக இன்னும் முடிவு எதுவும் இல்லை.

ஏனைய துறைகளுக்கு வழங்குகின்ற சிரத்தையைக் கல்வித்துறையில் காட்டுவதில்லை. இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைகள் இரண்டு நடைபெற்றன. இன்னும் முடிவிலலை. ஆனால் வெற்றிடங்களோ நூற்றுக் கணக்கில் உள்ளன. கல்வி மேற்பார்வை செய்வது யார்?

ஆசிரியர்களுக்கான நடைமுறைகள், உரிமைகள வலயத்துக்கு வலயம் மாறுபடுகிறது. வருடாந்த சம்பள உயர்ச்சிக்கு பல வரையறைகள பல மட்டங்களில் அமுல்படுத்துவது தெரிய வந்துள்ளது ஆசிரியர் தினத்தில் மாலை போடுவதும ஆசிரியர் பெருமை பற்றிப் பேசுவது, லீவு எடுக்காத ஆசிரியரை கௌரவிப்பது மட்டும் போதாது. அவர்களுக்கான உரிமைகளை வழங்க அரசு உடனடிக் கவனம் செலுத்த வேணடும் -

இவ்வாறு அச் செய்தியில குறிப்பிடபட்டுள்ளது.

(க-3)

# பாதாள உலகக் கொட்டத்தை அடக்க புதிய பொலீஸ்மா அதிபர் கங்கணம்

கொழும்பு,ஒக்.6

"பாதாள உலகத்தினரின் கொட்டத்தை அடக்குவதற்குப் பொலீஸாருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பாதாள உலக நபர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் பொலீஸாரிடம் உள்ளபோதும் உரிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் பொலீஸார் உள்ளனர்."

- இப்படிக் கூறுகிறார் புதிய பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ.

நேற்று முன்தினம் சர்வமத சடங்குகளுக்குப் பின்னர் உத்தியோகபூர்வமாக பொலீஸ்மா அதிபர் பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட சந்திரா பெர்ணாண்டோ, அதன் பின்னர் செய்தியாளர்களின கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பொலீஸ் திணைக்களத்தில் புதிதாக எதையும் செய்வதற்கு இல்லை. அதன் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தவேண்டும்.

படைகளில் இருந்து தப்பிவந்த நபர்கள் பாதாள உலகத்தினர் என்று கூறப்படும் நபர்களுடன் இணைந்து சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனைத் தடுக்கப் பொலீஸார் விசேட திட்டங்களை வகுத்துச் செயற்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் அண்மைக்காலமாக விரும்பத்தகாத செயல்கள் இடம்பெற்று வருகின்றன. பொலீஸார் இவறறைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமூகத்தில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கும் ஒரு சமூகத்தினர் அல்லர் பொலீஸார். அவர்களும் இந்தச் சமூகத்திலிருந்தே மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வந்தவர்கள்.

பொதுமக்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

எனது பிரதான வேலைத்திட்டமாக வீதிப் போக்குவரத்தில் ஏற்படும் விபத்துக்களைத் தடுத்து நிறுத்தும் ஒரு யோசனையை முன் வைத்துள்ளேன்.

வேகமாக வாகனம் செலுத்துபவர்களைத் தடுப்பது, மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பது போன்ற - உடனடியாக செயற்படுத்தக் கூடிய - சில திட்டங்களை வகுத்துள்ளோம் - என்று அவர் கூறினார்.

(க-3)

# சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம்

தென்மராட்சி,ஒக்.6

வரணி வலய சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக் கட்டடம் அமைப்பதற்குரிய காணியை அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சமுர்த்தி அதிகார சபையினர் இக் கட்டடத்திற்கான நிதியினை வழங்கியுள்ளனர்.

கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(8-117)

# வேலைக்கு ஆள் தேவை

சமைக்கத் தெரிந்த, வீட்டுவேலைகள் செய்யக்கூடிய (பெண்) ஒருவர் ஒரு சிறிய குடும்பத்தை பராமரிக்கத் தேவை. வீட்டில் தங்கியிருந்தோ அல்லது காலையில் வந்து வேலை முடிய மாலையில் செல்வதாக இருந்தாலும் சரி. நல்ல சம்பளம் வழங்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

14/2, கோயில் வீதி, (ஆச்சிரமத்திற்கு முன் ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-222 5472 (மாலை 6 மணிக்குப் பின்னர்)

நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

(37219)(34-19-26)


## கைதடிப் பாலத்துக்கருகில் புதிய பாதை

தென்மராட்சி,ஒக்.6

யுத்தத்தினால் சேதமடைந்த கைதடி பாலம் புனரமைப்பதற்காக அருகில் அமைக்கப்பட்ட தற்காலிக பாதை நேற்று முன்தினம் பாவனைக்கு விடப்பட்டது. இப்பாதையில் 80இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் முகமாலை நோக்கி வந்த பேருந்தின் முன் சில்லு புதையுண்டதால் பாதை போக்குவரத்துக்குத் தடைப்பட்டது.

புனரமைப்புக்கு மூடப்பட்ட வீதி திறக்கப்பட்டு வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டது

பதினைந்து தினங்களுக்கு முன்னர் இப்பாதை போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டு கிடுகு ஏற்றி வநத மாட்டு வண்டில் புதையுண்டு தடைப்பட்டதால் பின்னர் செப்பனிடப்பட்டு நேற்று முன்தினம் மீண்டும் வாகனப் பாவனைக்கு திறந்து விடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(3-117)


# ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் (வரையறுக்கப்பட்டது)

# பதவி வெற்றிடம்

## களஞ்சியப் பொறுப்பாளர்

1. சம்பள குறியீட்டு இல.: 202/13
2. சம்பளத் திட்டம்: 4000 - 75 10-80 10-5550/-
3. வயது எல்லை: 25 தொடக்கம் 45 வரை
4. விண்ணப்ப முடிவு திகதி: 15-10-2004
5. பிணை: ரொக்கம் ரூ.15000/-
   ஆதனம் ரூ. 25000 அல்லது
   ரொக்கம் ரூ.15000/-
6. 1. சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
   3. வேறு சங்கங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
7. தகைமைகள்:
   1. கூட்டுறவுப் பணியாளர் 202/14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் 2வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 202/15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

   *அல்லது*

   கூட்டுறவுப் பணியாளர் சா.தரம் சித்தி அல்லது க.பொ.த. (சா.தர.) தமிழ், கணிதம்/வர்த்தக கணிதம்/எண்கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6பாடங்களில் சித்தியும் மேற்குறித்த பதவியில் 2வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.
8. விண்ணப்பங்கள் யாவும் *"பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை, ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை"* என்ற முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபாலிலோ 15-10-2004ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பொது முகாமையாளர்,**
**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை.**

(சி-38001) (26-19-17)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி சங்கத்தானை,
தட்டாதெருவில் வசிக்கும்
**மச்சேந்திரகுமார் - விமலாதேவி**
தம்பதிகளின்
செல்வப் புதல்வி

## செல்வி பிரியங்கா

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப
பாடசாலை மாணவி
**பிரியங்கா**

2004ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் (133) பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டுவதுடன், அவரைச் சித்திபெற ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துவதுடன் அவர் கல்வியில் தொடர்ந்தும் வெற்றிபெற நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி. (37217) (26-19)

அப்பா, அம்மா,
தம்பி - தனுக்ஷன்.


## பிறந்தநாள் சிறப்பு மலர்

வலிகாமம்தெற்கு,ஒக்.6

சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80ஆவது பிறந்தநாள் விழாவை யொட்டி சிறப்புமலர் ஒன்றை வெளியிடுவதற்கு விழா ஏற்பாட்டாளர்கள் ஒழுங்குகள் செய்து வருகின்றனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு 80வயது பூர்த்தியடைகின்றது.

இதனை முன்னிட்டு பிறநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

லண்டன், கனடா, ஆஸ்திரேலியா, ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்கள் விசேட நிகழ்ச்சிகளை நடத்தவும் சிறப்புமலர் வெளியிடவும் ஒழுங்குகள் செய்து வருகின்றனர்.

தெல்லிப்பழையில் உள்ள தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அறநிதிய சபையினரும் இவ்விழா குறித்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

(ஐ-152)


# யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்

# மனங்கனிந்த வாழ்த்துக்கள்

எமது பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2004இல் சித்தியடைந்த மாணவர்களாகிய -

| | | |
|---|---|---|
| ★ | செல்வன் பவளகுமாரன் ஜீவிதன் | 162 |
| ★ | செல்வன் சிவத்துரை றஜிந்தன் | 151 |
| ★ | செல்வன் சிவசுப்பிரமணியம் செந்தூர்க்குமரன் | 150 |
| ★ | செல்வி யோகநாதன் வசந்தா | 150 |
| ★ | செல்வன் பாலசுப்பிரமணியம் சாரங்கன் | 124 |

ஆகியோருடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களாகிய -

| | | |
|---|---|---|
| ★ | கனகரெத்தினம் வசீகரன் | 118 |
| ★ | நாகராசா நதீசன் | 109 |
| ★ | சிவரெட்ணராஜா தாட்சாயினி | 109 |
| ★ | முத்துராமலிங்கம் கபில்ராஜ் | 102 |
| ★ | றஞ்சித் ரவிஷ்டன் | 102 |
| ★ | பஞ்சலிங்கம் தேனுகன் | 101 |
| ★ | சின்னத்துரை மதீசன் | 100 |

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதுடன், இவர்களுக்கு அர்ப்பணிப்புடன் கற்பித்த திருமதி மைதிலி ஜெயபவான் அவர்களையும், அவருக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டிய ஆரம்பப் பிரிவுப் பகுதித் தலைவர் அவர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**அதிபர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

(37216) (24-26-17-19)



# PILLAIYAR INN GARDEN RESTAURANT

## பிள்ளையார் காடின் றெஸ்றோறன்ஸ்

உங்களை வரவேற்கிறது.

காலை உணவு - தண்டூரி சிக்கின்
மதிய உணவு - ஆட்டா/குரக்கன் பிட்டு
இரவு உணவு - கடல் உணவு வகைகள்

சிக்கின் புரியாணி நாவுக்கினிய இனிப்புப் பண்டங்கள்

மேற்கூறிய உணவுவகைகள் ஆகக் குறைந்தது 3 அல்லது 4 மணித்தியாலயங்களுக்கு முன் ஓடர் செய்யவேண்டும். முன்கூட்டியே ஓடர்களைப் பதிவுசெய்தால் தாமதமில்லாமல் உணவுகளை வழங்க முடியும்.

உங்கள் விசேட வைபவங்கள், திருமணம், பிறந்தநாள் விழா, வியாபாரக் கூட்டங்கள் மற்றும் வைபவங்களைக் கொண்டாட குளிரூட்டப்பட்ட மண்டபங்களுண்டு.

★ உணவுகள் பார்சலாகத் தரப்படும். குறைந்தது 3 மணித்தியாலங்களுக்கு முன்ஓடர் கொடுத்தவர்களுக்கு மட்டும் தரமுடியும்.

குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், குளிரூட்டப்பட்ட வாகனங்கள் லயன் ஏயர் (Lion Air) Expo Aviation (எக்ஸ்போ) விமானப் பயணச் சீட்டுக்கள், Expo Gas இவைகளுக்கு ஒரே இடத்தில் தொடர்புகொள்ள வேண்டிய இடம்:

**பிள்ளையார் இன**
**(Stores)**
*31, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Tel: 021 222 5595, Tel: 021 222 2829
Fax: 021 222 5595
E-mail: Pillaiyar inn 2004 @yahoo.co.in.
web:www.Pillaiyar inn.com.

(37221)(34-19-26)


# பெண்களுக்கான புற்றுநோய் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஒக்.6

வடக்கு - கிழக்கு புற்றுநோயாளர் உதவி மையத்தின் (CANE UK) ஏற்பாட்டில் பெண்களுக்கான இலவச மருத்துவ முகாம் நாளை வியாழக்கிழமை காலை 10மணி முதல் கந்தர்மடத்திலுள்ள 'கேன்' மையத்தில நடைபெறவுள்ளது.

புற்றுநோய் கண்ட மற்றும் சந்தேகம் கொண்ட பெண்கள் இம்மருத்துவ முகாமில், கலந்துகொண்டு பயனடையலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

'கேன்' அமைப்பு மாதந்தோறும் பெண்களுக்கான இலவச சிகிச்சை முகாம்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-204)


# மரண அறிவித்தல்

## சூசைப்பிள்ளை சாள்ஸ்

**(மண்டைதீவு - தம்புசாமி)**



மண்டைதீவைச் சேர்ந்த சூசைப்பிள்ளை - கிறிஸ்ரீனாப்பிள்ளை ஆகியோரின் மகனாகிய சாள்ஸ் (தம்புசாமி) அவர்கள் நேற்றுமுன்தினம் (04.10.2004) திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் காலமானார்.

அன்னார் மேரி எட்வீசம்மாவின் கணவரும் அன்ரனி அன்னதாஸ், பிலேந்திரவதனன், அருள்ஞானசீலன், கொன்சால்வே, அருட்தநதை ஜஸ்ரின் (உதவிப் பங்குத்தந்தை, புனித யாகப்பர் ஆலயம், குருநகர்), சென்கிறேசியன் மரியலதா, அமரர் அன்பரசன், மரிய கொன்சலா ஆகியோரின் தந்தையும் ஜெனி, றொயன்சி, வாணி, வரதன் ஆகியோரின் மாமனாரும் டியூரன், டினுசா, டிவின்சன், பிறின்சன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வு இன்று (06.10.2004) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் மண்டைதீவு புனித பேதுறுவானவர் சேமக்காலையில் நல்லடக்கத்திற்காக எடுததுச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*183, குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.* (37214)(30-17-19-26)

தகவல்:
அருட்தந்தை ஜஸ்ரின்
*(மகன்).*



**The Wardrobe**
*t-shirt showroom*



149/1 Kasturiyar Road,
Jaffna.
Tel: 077 77 55 037

The Wardrobe
Simply Amazing !
T-Shirt Showroom

ஏற்றுமதி தரம் வாய்ந்த T-Shirt தயாரிப்புகள் யாழ் மண்ணில் அறிமுகமாகின்றது

120 க்கும் மேற்பட்ட design கள், 10க்கு மேற்பட்ட showroom கள் உடன் இயங்கும் உலகத் தரம் வாய்ந்த Vilka நிறுவனத்தின் ஏக முகவர்கள்

**The Wardrobe**
*t-shirt showroom*

பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், நிறுவனங்களின் இலட்சினை பொறித்த T-Shirts & Caps குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்

முதல் முறை வருவது
~ எங்களால்
மறுமுறை வருவது
~ உங்களால்



# கோழிகள் விற்பனைக்கு

முட்டை இடும் 1000 கோழிகள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**126, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
T.P.0776 120070 (37207)(35)



# தையல் பயிற்சி ஆசிரியர் தேவை

எமது நிறுவனத்திற்கு தையல் பயிற்சிக்கான ஆசிரியர் (பெண்) தேவைப்படுகிறது. அவர்களுக்கான தங்குமிட வசதிகளும் செய்துகொடுக்கப்படும். தகுதியானவர்கள் 15-10-2004 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

**பெண்கள் அபிவிருத்தி**
**புனர்வாழ்வு நிறுவனம்**
மாவட்டச் செயலகம்,
பேரின்பநாயகம் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(372224)

# மக்கள் பங்களிப்பினால் புனரமைப்புச் செய்யப்பட்ட திருவையாறு கி.அ.சங்க மண்டபம் திறக்கப்பட்டது!

கிளிநொச்சி,ஒக்.6

முற்றுமுழுதாகக் கிராம மக்களின் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் மக்கள் பாவனைகாகத் திறந்துவைக்கப்பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை அரசியல்துறை வலயப்பொறுப்பாளர் கதிரேசு ஏற்றிவைத்தார்.

பிரதம விருந்தினராக வருகைதந்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அபிவிருத்திச் சங்க மண்டபத்தைத் திறநது வைத்தார். கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்ததுடன், கரைச்சி பிரதேச செயலாளர் செல்வி சுலோஜனா மண்டப அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

இந்த வைபவத்தில் அரச அதிபர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

எந்தவொரு நிதிநிறுவனத்தின் உதவியின்றி மண்டபம் அமைக்கப்பட்டது பாராட்டுக்குரியது. இரணைமடுக்குளத்திற்கும் அதன் கீழ் உள்ள இக்கிராம அபிவிருத்தித் திட்டத்திற்காக 1000 மில்லியன் ரூபாவை உலக வங்கி வழங்க உறுதியளித்துள்ளது. இதன் ஒருபகுதியாகக் திருவையாறு கிராமத்திற்கு ஏற்று நீர்ப்பாசனம் வழங்கப்படவுள்ளது. இதற்கு ஏற்படும் எரிபொருள் செலவைச் சமாளிக்க சிறிய நீர்மின்சார நிலையத்தை அமைத்து மின்சாரத்தைக் கிராமமக்களுக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருவாயைப் பயன்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது - என்றார்.

(8-393)



## கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்தின நிகழ்வு

கிளிநொச்சி,ஒக்.6

கிளிநொச்சி மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் இன்று மாவட்டம் தழுவிய வகையில் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற் பீடப் பேராசிரியர் க.சின்னத்தம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்த நிகழ்வு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(4-301)

★ ★ ★

கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்பள்ளி மேம்பாட்டு நிலையம், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்பள்ளிகளை நிர்வகிக்கின்ற ஏனைய அமைப்புகள் இணைந்து முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை கிளிநொச்சியில் இன்று கொண்டாடுகின்றன.

இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையக்கட்டடத்தில் இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

விருந்தினர்களும் ஆசிரியர்களும் கந்தசாமி கோவில் வளாகத்தில் இருந்து இணையக்கட்டடத்திற்கு அழைத்துவரப்படுவதுடன், அங்கு ஆசிரியர் கௌரவிப்பும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(8-392)

# சாட்டியில் 2000 ஆண்டுகளுக்கு முந்திய சுடுமண் கிணறு கண்டுபிடிக்கப்பட்டது!

## பல்கலைக்கழகக் குழுவின் ஆய்வுமூலம் வரலாற்றுச் சான்றுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.6

சாட்டியில் தொடர்ச்சியாகத் தொல்லியல் அகல் ஆய்வை மேற்கொண்டுவரும் கலாநிதி



சுடுமண் கிணற்றுக்கு மேல் அமைந்திருந்த குழியடக்க (Pit Barial) ஈமச்சின்னம்.

ப.புஷ்பரட்ணம் தலைமையிலான பல்கலைக் கழகத் தொல்லியல் கற்கைநெறி மாணவர்கள குழு 2000 வருடங்களுக்கு முற்பட்டதென்பதை நிச்சயப்படுத்தக்கூடிய சுடுமண்ணால் செய்யப் பட்ட மிகப்பெரிய கிணறு ஒன்றை 20 அடி ஆழம் கொண்ட தொல்லியல் அகழ்வாய்வுக் குழியிலருந்து மீட்டு எடுத்துள்ளனர். இக்கிணறு மீட்கப்பட்டபோது அதன் வடிவமைப்பையும் தொழில்நுட்பத்திறனையும் நேரில் பார்வையிட்ட அவ்வூர் பொதுமக்கள் இவ்வளவு நாகரிகம் படைத்த மக்கள் முன்னொரு காலத்தில் எமது பிரதேசத்தில் வாழ்ந்தார்கள் என்பதை அறியும் போது தமக்குப் பெருமையாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதாகக் கூறினார்கள்.

இக்கிணறு அமைக்கப்பட்டதன் நோக்கம், அதன் காலம் தொடர்பாகக் கலாநிதி புஷ்பரட்ணத்திடம் எமது செய்தியாளர் கேட்டபோது, இக்கிணறு கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் மையத்தில்தான் முதன்முதலில் இயற்கையான பாறையில் வட்டமாக வடிவமைக்கப்பட்ட மேடையில் அமைக்கப்பட்ட தாழியடக்க ஈமச்சின்னத்தைக் கண்டுபிடித்தோம். ஆனால், இம் மேடையைச் சுற்றி பரந்த அளவில் செயற்கையான வடிவம் கொண்ட பாறைத்தொடர்களும், மட்பாண்ட ஓடுகளும் காணப்பட்டதால் கடந்த மூன்று நாள்களாக அவ்விடத்தில் தொடர்ந்தும் அகழ்வை மேற்கொண்டு வந்தோம். அப்போது முன்பு தாழியடக்க ஈமச்சின்னம் காணப்பட்ட மேடைக்கு வடக்கே மிகச்சிறிய இடைவெளியில் இரண்டு அடிவிட்டமுடைய இன்னொரு குழியடக்க ஈமச்சின்னம் இருந்ததைக் கண்டு பிடித்தோம். அக்குழியடக்க ஈமச்சின்னம் **(Pit Burial)** இயற்கையான பாறையை வெட்டி அமைக்கப்பட்டிருந்தாலும் அக்குழி செயற்கையாக வடிவமைக்கப்பட்ட கற்களைக் கொண்டு வட்டவடிவில் மிக நேர்த்தியாக அமைக்கப் பட்டிருந்தது. இந்த ஆய்வின் போது ஐந்தடி ஆழத்தில் இரு கற்படுக்கைகளுக்கிடையே பூலவகை எலும்புக் கூடுகளையும் மட்பாண்டங்களையும் கண்டுபிடித்திருந்தோம். இதிலிருந்து இவ்விடம் ஒரு குடும்பத்தின் அல்லது குறிப் பிட்ட ஒரு சமூகத்தின் ஈமச்சின்னங்களாக இருந்துள்ளதை உறுதிப்படுத்த முடிகின்றது. இவ்வாறான ஈமச்சின்னங்கள் தமிழகத்தில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், இங்கிருந்த ஈமச்சின்னத்திற்குக் கீழே இயற்கை மண்ணை அடையாளம் காண்பதற்காகத் தொடர்ந்து அகழ்ந்த போதுதான் சுடுமண்ணால் செய்யப்பட்ட கிணறு ஒன்று இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டோம். பொதுவாக இற்றைக்கு 2 ஆயிரத்து 800 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்ந்த பெருங்கற்காலத் திராவிட மக்கள் தாம் வாழ்ந்த மணற்பாங்கான இடங்களில் நீரை எடுப்பதற்காக அமைக்கப்பட்ட கிணறுகள் மழை, காற்று போன்ற காரணங்களால் தூர்ந்து போகாதிருக்க அக்கிணறுகளைச் சுற்றி சுடுமண் வளையங்களைக் கொண்டு அமைத்திருந்திருந்தனர். இதற்கு தமிழகத்தில் வசவ சமுத்திரம், அதிரம்பாக்கம், வடஇலங்கையில் கிராஞ்சி போன்ற இடங்



சுடுமண் மீட்கப்பட்ட ஆய்வுக்குழி இடிந்த நிலையில்

களில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் கிணறுகள் சிறந்த சான்றுகளாகும். ஆனால், சாட்டியில் ஈமச்சின்னத்திற்குக் கீழே இச்சுடுமண் கிணறு காணப்பட்டமை பெருங்கற்காலப்பண்பாட்டு மக்களது வாழ்க்கை முறைக்கு முரண்பாடாகத் தெரிகின்றது. இதற்கு முன்பொரு காலத்தில் சுடுமண்ணால் வடிவமைக்கப்பட்ட கிணறு இருந்த இடம் பின்னர் ஏதோ ஒரு காரணத்தினால் கைவிடப்பட்டபோது அவ்விடம் பிற்காலத்தில் ஈமச்சின்னங்கள் அமைக்கும் மையமாக மாறியிருக்க வேண்டும். இதையே சாட்டி அகழ்வாய்வில் கிடைத்த சான்றுகள் உறுதிப படுத்தலாம்.

சாட்டியில் கண்டுபிடித்த சுடுமண் கிணறு ஏறத்தாழ 20 அடி ஆழத்தில் இருந்து மீட்கப் பட்டது. இது ஐந்து சுடுமண் வளையங்களைக கொண்டு அமைக்கப்பட்ட நான்கடி உயரமான கிணறாகும். இச்சுடுமண் வளையங்கள் ஒவ்வொன்றும் ஒன்றரையடி விட்டமும், இரண்டடித் தடிப்பும் ஓர் அடி உயரமும் கொண்டவை. இது போன்ற கிணறு ஒன்றை 1991 ஆம் ஆண்டு பூநகரியில் கிராஞ்சி என்ற இடத்தில் கண்டு பிடித்திருந்தோம். அது காபன்காலக் கணிப்பின் படி இற்றைக்கு 2 ஆயிரத்து 800 ஆண்டுகளுக்கு முற்பட்டதென உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் அதன் காலத்துடன் சாட்டியில் கிடைத்த சுடுமண்கிணற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சாட்டியில் நீரும் சேறும் நிறைந்த பகுதியில் நான்கு மண்வளையங்களை பல சிரமத்தின் மத்தியில் மீட்டெடுத்த நாம் அடியில் இருந்த இன்னொரு மண்வளையத்தை முழுமையாக எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது சுற்றிவர இருந்த பாறைகள் இடிந்து வீழ்ந்து, அதில் மூன்று மாணவர்கள் காயமடைந்ததால் எமது இறுதி முயற்சியைத் தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியேற்பட்டுள்ளது. ஆயினும், ஏனைய இடங்களில் தொடர்ந்தும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாய்வுகள் நடைபெறும் இடங்களை எமது துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சத்



மீட்கப்பட்ட சுடுமண் வளையற் கிணற்றின் மாதிரித் தோற்றம் .

தியசீலன், புவியியல் துறைத்தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள், பொது அமைப்புக்கள் அரச அதிகாரிகள் எனப் பலர் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருவது ஆய்வாளர்களுக்கு ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும கொடுப்பதாக உள்ளது.

- இவ்வாறு புஷ்பரட்ணம் தெரிவித்தார்.

(ஐ)



சுடுமண் வளையற் கிணறு மீட்கப்பட்ட ஆய்வுக்குழியை துணைவேந்தர், கலாநிதி புஷ்பரட்ணத்திடம் வினாவும் காட்சி.

# ஆசிரியர் தின சிறப்பு மலர் – 2004

## ஆசிரியத்துவத்தை மதிக்க ஆசிரியர்கள் முன்வரட்டும்!

இன்று சர்வதேச ஆசிரியர்தினம். ஏணிகள், தோணிகள், கலங்கரை விளக்குகள், திசை காட்டும் ஊசிகள், பிறர் வாழ்வில் ஒளியேற்றுவதற்காகத் தம்மை உருக்கி அழிக்கும் மெழுகு வர்த்திகள் என்று போற்றப்படுகின்ற ஆசிரியர்கள் பூமாலை சூடிப் புகழ்மாலை கேட்கின்ற நாள். பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா விரிவுரை வகுப்புகள் பாடசாலை மேடைகளில் மணித் தியாலக் கணக்காக நடத்தப்படுகின்ற நாள்.

மீண்டும் மீண்டும் கேட்டுக் கேட்டுக் காதுகளைப் புளிக்க வைக்கின்ற பாராட்டுரைகளும், புகழுரைகளும் உண்மையாக அடி மனதினில் இருந்து வருகின்றனவா அல்லது வெறும் உதட்டில் இருந்துதான் எழுகின்றனவா என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

### ஆசிரியர்களும் மாணவர்களும்

கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் ஆசிரியரிடம் படித்த மாணவர்களிடம் முற்போக்குச் சிந்தனைகளுடன் நகைச்சுவை உணர்வும் இருக்கும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையிடம் படித்த மாணவர்களிடம் பரந்த தமிழ் அறிவு, சைவநற்சிந்தனைகளுடன் பேச்சு ஆற்றலும் இருக்கும்.

இரசாயனவியல் மகாதேவன் ஆசிரியரிடம் படித்த மாணவர்களிடம் இரசாயனவியல் அறிவுடன் நல்லொழுக்கக் கட்டுப்பாடுகளும் இருக்கும்.

இயல் இசைவாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயரிடம் படித்த மாணவர்களிடம் கலைத்துவ ஆற்றலுடன் இயல்பான கவித்துவ ஆற்றலும் இருக்கும்.

ஆனால், இன்றைய மாணவர்களிடம் எந்த ஆசிரியரின் ஆற்றல்கள் இருக்கும்?

அன்று ஒரு மாணவனுக்கு ஒரு பாடத்தை ஒரு ஆசிரியர் மட்டுமே கற்பித்தார்.

எனவே, அந்த ஆசிரியரின் ஆற்றல்கள் இயல்பாகவே மாணவர்களின் மனத்தினில் குடிகொண்டு விடுவதை யாராலும் தடுக்கமுடியாது இருந்தது.

ஆனால், இன்று ஒரு மாணவனுக்கு ஒரு பாடத்தை எத்தனை ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர்? பாடசாலை ஆசிரியர், Paper class ஆசிரியர், Revision class ஆசிரியர், Theory class ஆசிரியர், special seminar ஆசிரியர் எனப் பல்வகை ஆசிரியர் கள். எனவே, யாருடைய ஆற்றலை மாணவர்கள் உள்வாங் குவது?

"ஒருவனுக்கு ஒருத்தி" என்ற கட்டுப்பாட்டை உயிரினும் மேலாக மதித்து நடப்பதனால்தான் உலகத்தை ஆட்டிப் படைக்கின்ற 'எய்ட்ஸ்' என்ற கொடியநோய் ஈழத்தமிழர்களை எட்டிப் பார்ப்பதற்குப் பயப்படுகின்றது.

இதேபோல் ஒரு மாணவனுக்கு ஒரு பாடத்தை ஓர் ஆசிரியர் கற்பிக்கும் போது மட்டுமே மாணவர்களின் மனதினில் ஆசிரியர்கள் வாழும் நிலை உருவாகும். இதனால், "பெரிதுவக்கும் தம் மாணவர்களைச் சான்றோர்" எனக் கேட்டு ஆனந்தக்கண்ணீர் வடிக்கும் ஆசிரியர்களின் உருவாக்கத்தில் மறுமலர்ச்சி ஏற்படும். மாணவர்கள் ஆசிரியர்களை என்றும் தம் மனத்தி னில் இருத்தி போற்றிக்கொண்டு இருப்பர். ஆசிரியர்களுக்குரிய கெளர வத்தை மாணவர்கள், வழங்கும் நிலை உருவாகும். முன்னுக்கு மாலை போட்டு விட்டுப் பின்னுக்குக் கல்லால் எறியும் நிலைக்கு கல்விச் சமூகத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

### ஆசிரியர்களும் ஆசிரியர்களும்

"என்னை மட்டும் காலில் வீழ்ந்து வணங்கு மற்றைய ஆசிரியர்களைக் கண்டால் கல்லால் எறிந்து விட்டு ஓடு" என்று ஏதும் அறியாதபிஞ்சு உள்ளங்களில் நஞ்சு விதையை விதைக்கும் நல்லாசிரிய ஆலோசனைகள் நிறுத்தப்பட வேண்டும்.

"நான் மட்டும்தான் மாணவர்களுக்குப் படிப்பிப்பதற்காகப் பாடசாலைக்கு வருகிறேன். மற்றய ஆசிரியர்கள் எல்லோரும் பேய்க்குப் பேன் பார்ப்பதற்குத்தான் பாடசாலைக்கு வருகிறார்கள்" என்ற பரந்த மனப்பான்மையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும்.

ஆசிரியர்களே ஆசிரியத்துவத்தை அவமதிக்கும்போது சமூகம் ஆசிரியர்களுக்குரிய கெளரவத்தை வழங்க வேண்டும் என்று நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

அன்று தெய்வ சேவையாகப்போற்றப்பட்ட ஆசிரிய சேவையானது இடைக்காலத்தில் ஆசிரியத் தொழிலாகமாறி இன்று ஆசிரிய வியாபாரமாக வளர்ந்து நிற்கின்றது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தநிலை தொடர்ந்தால் வருடத்தில் 365 நாள்களும் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடினாலும் சமூகத்தில் ஆசிரியர் களுக்குரிய மதிப்பு நிலையில் மறுமலர்ச்சி எதுவும் ஏற்படாது என்ப தையும் ஆசிரிய சமூகம் மறந்துவிடக்கூடாது.

### ஆசிரியர்களும் சமூகமும்

ஆசிரியர்கள் பாடசாலைகள் மூலம் நல் மனிதர்களை உருவாக்கிய பின்புதான் வைத்தியர் களையோ, பொறியியலாளர் களையோ உருவாக்க வேண்டும். அப்போதுதான் சமூகத்துக்கு நன்மை கிடைக்கும். மாணவர்களை கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்க வேண்டும். தண்டிக்க வேண்டிய நேரத்தில் தண்டிக்க வேண்டும் பாராட்டப் பட வேண்டிய நேரத்தில் பாராட்ட வேண்டும்.

ஆசிரியதினத்தில் ஆசிரிய சமூகம் சிந்திக்குமா?

**வடகோவை சிவநேசராசன்**


## சர்வதேச ஆசிரியர்களே! நீவிர் நீடூழி வாழ்க!!

எழுத்தறிவித்தவன்
இறைவனாவான் எனும் முது
மொழிக்கமைய எமக்கு
கல்விக்கண்களைத் திறந்து
அறிவூட்டி பல கலைகளையும்
கற்பித்த எம்மினிய அதிபர்,
ஆசிரியர்களையும் மற்றும்
சர்வதேச ஆசிரியர்களையும்
இந்நன்நாளில் நீடூழி
வாழ்கவென அகமகிழ்ந்து
வாழ்த்தும் உங்கள் அன்பான

யாழ்.புனிதஜோண் பொஸ்கோவின்
மாணவர்கள், பெற்றோர்,
பழைய மாணவர்கள்.

## உலக ஆசிரியர் தினம் - 2004

தேனீ போல தேடி நிதம் அறிவதனை
ஞானி போல தெளிவுடனே எமக்கருளி
ஏணியாய் இருந்தெம்மை ஏற்றிடவும்
தோணியாய் நல்லகரை சேர்த்திடவும்
இடரினும் தளரினும் எமக்காக வாழ்கின்ற
எங்கள் ஆசான்கள் என்றென்றும் வாழியவே!

FIAT LUX

மாணவர் சமூகம்
(C/37186)
யா/ஹாட்லிக் கல்லூரி. பருத்தித்துறை.

## யா/அருணோதயக் கல்லூரி அளவெட்டி

உலக ஆசிரியர் நாளான இன்று எமது கல்லூரியில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு ஆசிரியர் சேவையில் வெள்ளிவிழாக் கண்டு தொடர்ந்தும் இக் கல்லூரிக்குத் தமது சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளான

01. திரு.கி. மகேந்திரராசா – அதிபர்
02. திரு.வை. சிவராசா – பிரதி அதிபர்
03. திரு.த. நடராசா – பகுதித்தலைவர்
04. திருமதி ந். செல்வராசா – பகுதித்தலைவர்
05. திரு.வ.செல்லையா – இ.ஆ.சே.தரம் I
06. திருமதி சா.அமிர்தலிங்கம்– இ.ஆ.சே.தரம் 2-I

ஆகியோரைச் சிறப்பாக வீழ்த்துகின்றோம்.

"சமுதாயக் கலங்கரை விளக்குகளே வாழ்க
தொடர்க உம் பணி"

ஆசிரியர் கழகம்
யா/அருணோதயக் கல்லூரி, அளவெட்டி.
(C/38008)

## யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
### யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
### உலக ஆசிரியர் தினம் – ஒக்ரோபர் 6

எமது கல்லூரியின் அதிபர், உப அதிபர், ஆசிரியர்களின் அயராத உழைப்பினால்

★ கல்லூரியில் இருந்து இவ்வருடம் கணிதவிஞ்ஞானம் உட்பட 14 (பதினான்கு) மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

★. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய 68 மாணவர்களில் 63 மாணவர்கள் க.பொ.த. உயர்தரம் கற்பதற்குத் தகுதிபெற்றுள்ளனர்.

★. இணைப்பாட விதானத்துறையில்
வலைபந்தாட்ட அணியினரில் 17,19வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தினையும், 15வயதுக்குட்பட்ட அணி 3ஆம் இடத்தையும் பெற்று மாகாண மட்டத்தில் 19வயது அணி முதலாம் இடத்தையும், 17வயது அணி 2ஆம் இடத்தையும் பெற்று மாகாணத்தில் கூடிய இடங்களைப் பெற்ற அணியாகத் திகழ்கின்றது.

★. தமிழ்த் தினப்போட்டியில் மாகாண மட்டத்தில் மூன்று முதலிடங்களைப் பெற்று மாகாணத்தில் கூடிய இடங்களைப் பெற்ற கல்லூரியாக விளங்குகின்றது.

★. சிம்நயாமிசன் நடத்திய இந்து விழிப்புப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் வினாடிவினாப் போட்டியில் முதலாம் இடத்தையும், நாடகப்போட்டியில் 2ஆம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

மாணவர்களை வழிப்படுத்துகின்ற அர்ப்பணிப்புக்களைச் செய்யும் அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், ஊழியர்கள் அனைவரையும் இந்நாளில் வாழ்க வளர்க என மனமார வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம். பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யூனியன் கல்லூரி, தெல்லிப் பழை.
(C/38002)

## வாழ்த்தி வணங்குகிறோம்

இன்று
யாழ். மாவட்டத்தின் ஆரம்ப நிலையில் முதன்மைப் பாடசாலையாக,

### யாழ். இந்து ஆரம்ப பாடசாலையை

அர்ப்பணிப்புடன் உருவாக்கி உயர்ந்து நிற்கும் அதிபர்,
பிரதி அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியமணிகள் அனைவரையும்

### உலக ஆசிரியர் தினத்தில்

உவகையுடன் உள்ளம் மகிழ்ந்து சேவை பெருகவும் வாழ்வு சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

*மாணவர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,*
*பழைய மாணவர் சங்கம்.*

*யாழ். இந்து ஆரம்ப பாடசாலை*
(C/38007)

## வாழ்த்துகின்றோம்

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் தினவிழா - 2004

கசடறக் கல்வி தந்து கருத்திலே தெளிவைத் தந்து நாவிலே தமிழைத் தந்து நல்லாசி தந்து நண்பராய் அனபராய் அரவணைக்கும் அன்னையாய் எமைக் காத்து நிற்கும் எம் கல்வித் தெய்வங்களாம் நல்லாசான்களுக்கு எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

நன்றியுடன் பெற்றோர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவிகள். (38258)(38-14-18)

## ஓயாத ஓராண்டு நினைவுகளுடன்



தோற்றம் 06 - 07 - 1939 | மறைவு 17 - 10 - 2003

### திருமதி நடராஜா சீவரத்தினம்

அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்த அன்புத் தெய்வமே! நீர் மறைந்து இன்று ஆண்டு தான் ஒன்று சென்றாலும் என்மனம் ஆறவில்லை. உம் நினைவுகள் எம்மனதில்...

என்றும் உங்கள் நினைவுடன் வாடும் குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (c-38034)(38-14-18)

தகவல்: ப.பார்த்தபன்.
0777 721303, 0114 619730.

## ஓராண்டு அமைதித் துயிலில் எம் உதிரம்



அன்னை மடியில் 06 - 10 - 1982 | அரக்கரின் அழிப்பில் 06 - 10 - 2003

### செல்வன் யோகேஸ்வரன் அஜந்தீப்

அன்று நடந்தபோது எம் ஆவி துடித்தது!
இன்றும் நினைக்கையில் எம் நெஞ்சு வலிக்குது?
கூடப் பிறந்துவிட்ட எங்கள் உதிரமே-உனை
மறந்துவிட நினைப்போமா? மறுபடியும் வருவாயோ?
எத்தனை பிறவியெடுத்தாலும் எப்படிப் பிறந்தாலும்
நாம் ஒரு கொடியில் மலர உனைத்தான் பிரார்த்திக்கின்றோம்.

*உன்னைப் பெற்றவர்கள்,*
*உன்னுடன் பிறந்தவர்கள்,*
*உன்னுடன் வாழ்ந்தவர்கள்.*

*நாரந்தனை.* (37250)(38-14-18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூமணி சிவஞானம்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சிவஞானம் அவர்கள் 04.10.2004 திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் துரையப்பா - அன்னப்பிள்ளையின் அன்பு மருமகளும் சிவஞானத்தின் (ஓய்வுபெற்ற சிறாப்பர், திறைசேரி) அன்பு மனைவியும் சிவயோகப்பிரியா (தேசியசேமிப்பு வங்கி - மானிப்பாய்), சிவரஞ்சினி (3ஆம் வருட சித்தமருத்துவம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி காலஞ்சென்றவர்களான பத்மநாதன், பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2004) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.* (37242)(38-14-18)

தகவல்:
து.சிவஞானம் (கணவர்),
சி.சிவயோகப்பிரியா (மகன்).

### திருமதி பராசக்தி சுந்தரம்பிள்ளை

(இணுவில்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி பராசக்தி சுந்தரம்பிள்ளை கனடா Scarborough இல் 03.10.2004 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - ராசம்மா தம்பதிகளின் அருமைப் புத்திரியும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், சரவணபவன், சிவபாலசிங்கம் (பதிவு அதிகாரி, யாழ்.நீதிமன்றம்) மற்றும் மீனாட்சி (சுன்னாகம் ப.நோ.கூ.ச) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிறிதரன் (SAT. TRADING, CANADA) சிறிராகவன் (CHANKNAI FURNITURE, CANADA) முரளிதரன் (ANTO WHOLE SALE DISTRIBUTER, CANADA), சிறிகலாசேனா (கோசலை, TRICHY, INDIA) ஆகியோரின் பாசமிகு தாயாரும் உமாசிறிதரன், தயாளினி, ராகவன், அஜந்தா முரளி, யோகேஸ்வரன், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபானி, வதன் (இந்தியா), வதிக்கா, கோபிகா, சாயிசன், கயனி, கீர்த்தனி, ரொபினி, அபிநயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் 5.10, 6.10, ஆம் திகதிகளில் OGDEN FUNERAL HOME, 4164 SHEPPARD AVA EAST CANADA வில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (07.10.2004) வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு Higland Memorial Garden, Donmills finch, Canada இறுதிக்கிரியைகளுக்காகப் பூதவுடல் கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இணுவில் தென்மேற்கு,*
*இணுவில்.* (37242)(38-14-18)

தகவல்:
கோசலை (மகள்),
மீனாட்சி (சகோதரி).

## லொறியில் இருந்து தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி,ஒக்.6

லொறியில் பயணம் செய்துகொண்டிருந்த ஒருவர் அதிலிருந்து தவறிவீழ்ந்து காயமடைந்தார்.

நேற்றுக்காலை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இணுவில் தியேட்டர் வீதியைச் சேர்ந்த சுந்தரம் தர்மராஜா (வயது 55) என்பவரே காயமடைந்தவராவார். (4-117)

## குரு தட்சணை

ஆற்றல் கொடுத்தீர் அறிவுப் பசிதீர்த்து
ஏற்றம் பெறச் செய்தீர் – இத் தரிசில்
நாற்றை வீதைத்து, விளைவீத்து, நாலுபேர்
போற்றும் வகைசெய்த போதகர் காள்; –
அறிவே
ஊற்றான குணரஞ்சிக் குருமாதா – மற்றும்
ஆற்றுப்படுத்தும் அதிபர், உப அதிபர்,
தோற்றாத் துணையான வள அணியோர்.
தும்பாதம்
ஏற்றினேன் என் சிரசில் ஏற்றிடுவீர்
தட்சணையாய்!

(C-37241)(38-14-18)

தரம் 5, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

சாற்றுபவன்
இரத்தினசிங்கம் பிரணவன்.

## யாழ்நகரில் M.M.I.C

ஒலிபரப்பாளர் நேரடிப் பயிற்சி வகுப்பு.
புதிய பிரிவு 09.10.2004
சனிக்கழமை 1.30 மணிக்கு ஆரம்பம்.

இல.15, சிறாம்பியடி லேன்,
மணியம் பில்டிங்,
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 0777316258
(38031)(38-11-18)

இதுவரை பதிவினை மேற்கொள்ளாதவர்கள் பதிவினை மேற்கொள்ளலாம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆசிரியத் தொழிலில் 25 ஆவது அகவை நிறைவு விழாக்காணும் ஆசான் வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம் அவர்கள் ஆசிரிய தினத்தில் பாராட்டைப் பெறும்வேளை நாமும் அவர் பண செவ்வனே தொடர இறை தாழ் பணிந்து வாழ்த்துகின்றோம்.

மேலைத் தேய மெய்யியல், கீழைத்தேய மெய்யியல், பொதுசமூக உளவியல், அறிவாராசசியல், ஒழுக்கவியல், அளவையியல் ஆகிய மெயயியற் கற்கை நெறிகளில் 25 ஆண்டுகளுக்கு மேல் தனக்கெனத் தனித்துவமான முத்திரையைத் தொடர்ந்து பதித்துவரும் எங்கள் ஆசானின் பணிதொடர தனது உயர் கல்வி முயற்சிகளில் வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.

46, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (37243)(38-11-18)

பட்டப்படிப்பு கல்லூரி, இயக்குநர், விரிவுரையாளர், மாணவர்கள்.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

1இல் இருந்து O/L வரை தமிழ், ஆங்கிலம் SPOKEN ENGLISH, கணிதம், விஞ்ஞானம் மாதாந்தக் கட்டணம் 150/=
426 (302), K.K.S. Rd., Jaffna. (37249)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடமை புரியும் க.புஸ்பராசா அவர்களின் அன்புத் தந்தை

### திரு.நா.கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள உத்தியோகத்தர்கள்.
(37244)(38-11-18)

## ராஜா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
அர்ஜுன, லாராதத்தா,
ரகுவரன், விவேக் நடித்த
அரசாட்சி



ப.8ந. 10.30,2.30,6.30, 9.30 ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம். (36364)

## நாகம்ஸ் சுன்னாகம்

இன்றுமுதல்
சத்தியராஜ், சிபிராஜ், கஜலா, தாமு நடித்த
ஜோர்
காட்சிநேரம்:
11.00, 3.00, 7.00 (மு.ந)
(C-37740)

## நிர்மலதிரையரங்கு சங்கானை

அப்பாஸ், நந்திதா நடித்த (ரீல்ல்)
சிந்தாமல் சிதறாமல்
வெள்ளி, சனி, ஞாயிறு
MEET THE PARENTS

காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்) இரவு 8.45 (பு.நே.)

## சிற்றி சினிமா பண்டத்தரிப்பு



சூரியா, லைலா, ராஜ்கிரண் நடித்த
நந்தா
(ரீல்லல)

காட்சிகள் தினசரி 3.00, 7.00
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-37902)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை சிவக்கொழுந்து



மாவிட்டபுரம், இலகடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சிவன் கோயிலடி சித்தன் கேணியை வசிப்பிடமாக கொண்டவருமான திருமதி சின்னத்துரை சிவக்கொழுந்து அவர்கள் நேற்று (05.10.2004) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்பான உள்ளம் கொண்ட அவர் காலஞ்சென்ற பொன்னையா சின்னத்துரை அவர்களின் அன்பு மனையாளும் சண்முகராசா, சிவசக்தி, ஜெயசக்தி காலஞ்சென்ற ஹரிதாஸ் ஆகியோரின் அன்புநிறைத் தாயாரும் டியேந்திராதேவி, விஜேந்திரன், குணசீலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஹயாளினி, விருபாஷன் நவதீஸ், வோகிதாச்சுவன், ஸோபிநாத்சுவன், சுலக்ஷன், நிதர்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் சித்தன்கேணியில் நடைபெற்று, இன்று (06.10.2004) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பூதவுடல் விளாவெளி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உறறார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*விஜேய் இன்டஸ்ரீஸ்,*
*பண்டத்தரிப்பு.* (37254)(38-14-18)

தகவல்:
சண்முகநாதன் விஜேந்திரன் (மருமகன்).

### இராசதுரை நாகராசா

(பிரபல பூட்டுத் தயாரிப்பாளர்)

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை நாகராசா 04.10.2004 அன்று இரவு 8 மணியளவில் அகாலமரணமானார்.

அன்னார் இராசதுரை - அமரர் கனகம்மாவின் அன்பு மகனும் வேலம்பிராயைச் சேர்ந்த கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் சுதாகரன் (பிரான்ஸ்), சசிகரன் (A/L மாணவன் K.C.C.), விஜிகரன் (O/L மாணவன் K.C.C.), ராஜ்கரன் (R.C.பாடசாலை, நீர்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சகுந்தலாதேவி, தேவராசா, ஜெயராசா (கனடா), ஆனந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம், தனலட்சுமி, ஜெயவதனி, புஸ்பா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2004) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் நீர்வேலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பரலோகமாதா வீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (37256)(38-14-18)

தகவல்:
செ.சுப்பிரமணியம் (மச்சான்),
மனைவி, பிள்ளைகள்.

### நாகமணி கணபதிப்பிள்ளை

(பஞ்சாட்சரம்)



கரம்பொன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது யா/தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி கணபதிப்பிள்ளை (பஞ்சாட்சரம்) அவர்கள் நேற்று (05.10.2004) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார், நாகம்மாவின் அன்புக் கணவரும் அமரர்களான நாகமணி - சிவக்கொழுந்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் அமரர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், தேவராணி, தேவராஜா (உபஅதிபர், யா/கரம்பொன் சண்முகநாத ம.வி., ஊர்காவற்றுறை), புஸ்பராணி, புஸ்பராஜா (கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம், கச்சேரி - யாழ்ப்பாணம்), மனோராணி (முன்னாள் ஆசிரியர், வண்.நாவலர் ம.வி., தற்பொழுது பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியசீலன் (குட்டி, சாவகச்சேரி தற்பொழுது கனடா), மகேந்திரன் (கனடா), யசோதா (டாக்டர்), சத்தியேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜலக்சனாவின் (மாணவி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்புப் பேரனும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் வள்ளியம்மை, அமரர் நடராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர்களான சோமசுந்தரம், சுந்தரம், பொனனம்பலம், புனிதம்மா மற்றும் தருமபூபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2004) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (37255)(38-14-18)

தகவல்:
க.தேவராஜா (மகன்).

### பொன்னுச்சாமி சுப்புச்சாமி

(பிரபல நாதஸ்வர வித்துவான்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி சுப்புச்சாமி அவர்கள் நேற்று (05.10.2004) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் பஞ்சரத்தினத்தின் அன்புக் கணவரும் பாலமுருகன், ஜானகி, செந்தில் நாதன், ரேவதி, ஜெயசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் காயத்திரி, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சாரங்கன், தரங்கினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2004) புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.* (37250)(3814-18)

தகவல்:
சு.பாலமுருகன் (மகன்)
நாதஸ்வர வித்துவான்.

# கடற்புலிகளின் துணைத் தளபதி நிரோஜன் நினைவுதினம் நாளை

## முல்லைத் தீவில் சிறப்பு நிகழ்வுகள்

முல்லைத்தீவு,ஒக்.6

மன்னார் தாக்குதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்டினன்ட் கேணல் நிரோஜன் மற்றும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவர்களின்5 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நாளை இரவு 7மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

சமாதான காலத்தில் சர்வதேசக் கடலில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட 'கொஸ்ஸின்', 'கொஸ்' ஆகிய விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல்களில் வீரமரணமடைந்த 23 மாவீரர்களின் நினைவு வாகத் தயாரிக்கப்பட்ட அலைபாடும் பரணி எனனும் ஒலிநாடா இந்த நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்படும்.

அதைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3)

## மாலதி தின நிகழ்வுகள் புலிகளின் குரலில் அஞ்சல்

கிளிநொச்சி,ஒக்.6

இரண்டாம் லெப்.மாலதியின் நினைவு தினத்தையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு கிளிநொச்சியில் நடைபெறுகின்ற மாபெரும் போரியல் வரலாற்று கண்காட்சி நிகழவுகளை புலிகளின் குரல்வானொலி நேரடியாக ஒலிபரப்பவுள்ளது.

புலிகளின்குரல் வானொலியின் சிறப்பு ஒலிபரப்பு இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறும்.

எவ்.எம்.100 அலைவரிசை ஊடாக இந்த நிகழ்வுகளை கேட்க முடியும் என்று புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது. (4-7)

## மாலதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படும், ஆயுதக் கண்காட்சி ,கடற்புலி மகளிர் படையணியின் காட்சியகம், புகைப் படக் கண்காட்சி, தமிழீழ காவல்துறையின் மாதிரி மகளிர் காவல் பணிமனை, விடுதலைப் புலிகளின் மாதிரி மருத்துவமனை, விடியல் படை வீடு, மாவீரர் நினைவு மண்டபம் என்பன வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து மாலைவரை கண்காட்சி இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு மகளிர் படையணியின் வரலாற்றைச் சித்திரிக்கும் 'அக்கினிப் பறவைகள் பாகம் -1' திரையிடப்படும். இரவு 7.30 மணிக்கு கலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். செஞ்சோலை மாணவிகளின் நடன நிகழ்வுகளும் பெண்கள் வழங்கும் தவில், நாதஸ் வரக்கச்சேரியும், சிறப்புரைகளும் சோதியா படையணி வழங்கும் சிறப்புச் சண்டைக் காட்சிகளும் இடம்பெறும். (4-7)

# கண்காணிப்புக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின் செயலாளர் சிறில் ஹேரத்தை நேற்றுமுன்தினம் சந்தித்து அவர் கலந்துரையாடினார். விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவலர்கள் தொடர்பான விடயம் குறித்தே இக்கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடல் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு தரப்பினால் பிடித்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்காக மற்றைய தரப்பைச் சேர்ந்தவர்கள் எதிர்த்தரப்பைச் சேர்ந்தவர்களைக் கைதுசெய்வதை யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று புரூஹொவ்டே தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்ட விவகாரமும், ஊர்காவல் படையினர் இருவர் கைதுசெய்யப்பட்ட விவகாரமும் வேறு வேறானவை, இரண்டையும் இணைப்பதற்குத் தர்க்கரீதியான காரணங்கள் எவையும் இல்லை.

ஊர்காவலர்களை விடுவிப்பதற்காக தமது போராளிகளை விடுவிக்க வேண்டும் என்று புலிகள் கோருகிறார்கள். ஆனால், அது நீதிமன்ற சட்டத்திற்கு உட்பட்ட விவகாரமாகும்.

அதேசமயம் - இரு ஊர்காவல் படையினரும் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனினும், அவர்களை விடுவிப்பதற்கு உள்ளூர் மட்டத்தில் கண்காணிப்புக்குழு முழு முயற்சிகளையும் எடுத்துவருகின்ற. இது தொடர்பாகக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இரு ஊர்காவலர்களையும் விடுவிக்குமாறு விடுதலைப் புலிகளிடம் கண்காணிப்புக்குழு மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

- இப்படி கண்காணிப்புக்குழுவின் தலைவர் பாதுகாப்புச் செயலரின் அலுவலருக்கு விளக்கியுள்ளார். (க-3-4)

## ராணுவம் - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்போடப்பட்டது என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினால் முன்னர் தெரிவிக்கப் பட்டிருந்தது.

ஆனால், சந்திப்பு திட்டமிட்டபடி நடக்கும் என கண்காணிப்புக்குழுவினர் இறுதியாக அறிவித்துள்ளனர். (க-3)

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் படுகொலைகளையும் நோர்வே வன்மையாகக் கண்டித்துள்ளது.

இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுமேயானால் அது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் பணிகளைப் பெரிதும் சிரமத்திற்குள்ளாக்கிவிடும் எனவும் ஹெல்கிஸன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், யுத்தநிறுத்த மீறல்களைத் தவிர்க்கவும், அரசியல் படுகொலைகளைத் தடுக்கவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மாலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் நோர்வே பிரதிஅமைச்சர் தமிழ்ச்செல்வனிடம் கேட்டுள்ளார்-எனவும் அந்தச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-3-4)

## பன்னிரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் பொதுச்சுடர்களை ஏற்றினர்.

வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா, தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றினார். பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படங்களுக்குமான ஈகச்சுடர்களை அவர்களது தாய் தந்தையர், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து வடமராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. விரிவுரையாளர் குமாரவேல் , யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.இளம்பரிதி, பொன். தியாகம் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர். கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

**நல்லூரில்**

நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணம் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவஞானசுந்தரம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன், வட பிராந்திய தொழிலாளர் தொழிற் சங்கம் தலைவர் எட்வின் நா.நவரத்தினராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஈகச்சுடரினை தமிழீழவிடுதலைப் புலிகளின் தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமையவன் ஏற்றிவைத்தார். பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படங்களுக்கு யாழ்மாவட்ட மாணவர் எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் எழிலன்பன் மலர் மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தினார்.

**கோப்பாய் துயிலும் இல்லத்தில்**

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் காலை 9 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

தேசியக் கொடியினை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர், சுதாஸும் ஈகச்சுடரினை மாவீரர் கப்டன் கலைமதியின் தாயாரும் 2ஆம் லெப். சண்டியாவின் தயாரும் ஏற்றிவைத்தனர்.

பன்னிரு வேங்கைகளில் ஒருவரான கப்டன் கரனின் நினைவுக் கல்லறைக்கு சுதாஸ் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன. கொடிகாமம், சாட்டி, எள்ளங்குளம் ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பன்னிரு வேங்கைகளின் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (4-70-86-72)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை பிலிப்தும் மார்சலின்



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட செல்லத்துரை பிலிப்தும் மாசலின் நேற்று (5.10.2004) செவ்வாய்க்கிழமை கர்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் திரேஸம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துத்துரை மற்றும் மங்களம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கொலஸரிக்காவின் (முத்துப்பிள்ளை) அன்புக் கணவரும் பற்றிக், தேவதாஸ் (மாப்பிள்ளை), லற்றிஸியா, றெஜீனா (வவா), வேவி, காலஞ்சென்ற அன்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கொன்ஸி, யசோ, றமேஸ், ரமணி (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் மதன், ஸண்மார், ஸிங் (ஆசிரியர், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி), மதிமாலினி, சயன், எரிக், எஸ்ரா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதுனியின் அன்பு மாமனும் ஏபேத்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல்லத்தில் இருந்து இன்று (06.10.2004) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொட்டடியில் உள்ள கிறிஸ்தவ சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*40A, கடற்கரை வீதி,*
*குருநகர்.* (37260)(32-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம் அவர்கள் 5.10.2004 செவ்வாய்க்கிழமை நண்பகல் சிவப்பேறுபெற்றுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் சுப்பிரமணியம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகளும் கந்தையா பஞ்சலிங்கம் (முன்னாள் பிராந்திய முகாமையாளர், அங்லோசியன்) அவர்களின் அன்பு மனைவியும் கேதீஸ்வரன் (கொழும்பு), தர்ஷினி (கலைப்பீடம் 2ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), தாரணி (H.N.D.A., பகுதி நேர இறுதியாண்டு மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீசிவராஜன் (பண்ணாகம்/பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமியாரும் நாகராஜா (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், வட்டு. இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற வைத்தியகலாநிதி தியாகராஜா, ராஜேஸ்வரி, சண்முகநாதன், (முகாமையாளர், ஸ்ரீமகாவிஷ்ணு ஸ்ரான்லி றோட், யாழ்பாணம்), கந்தராஜா (உதவிப் பிரதேச செயலர், காரைநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரோஜினி, இராஜபூபதி, இரட்ணாகரன் (முன்னாள் நிர்வாக உத்தியோத்தர் யாழ்.மாநகர சபை), பவானி, கெங்கேஸ்வரி (சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரது மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வடலியடைப்பு பிள்ளையார் கோயிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (07.10.2004) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.* (37261)(32-11-18)

தகவல்:
பஞ்சலிங்கம் (கணவர்),
பிள்ளைகள்.

## சின்னவி கந்தையா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 167, மானிப்பாய் வீதியை வதிவிடமாகவும்கொண்ட சின்னவி கந்தையா அவர்கள் நேற்று (5.10.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் தெய்வேந்திரன (முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் -யாழ்.பல்கலைக்கழகம்), இராமச்சந்திரன், ரேணுகாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் செல்வராணி, ஜெயசிலி, இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் துஸ்யந்தன், துஷாந்தன், துஷ்யந்தி, கிறிஸ்ரிகா, துஷிதா, சாளின், ஸ்ரீபன், ஸ்ரில் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6.10.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.4 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*167,மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (37259)(18-11-32)

தகவல்:
க.தெய்வேந்திரன்
(மகன்).

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off stanly Rd)
Tel:0777222422
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
QUICK BOOKS PRO + ACCPAC + MYOB
ஆரம்பம் 17-10-2004
காலம்:- 4மாதம்

சொன்னதையும் செய்வம்...
திலவு.com
(c/38006)(30)

இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு
அம்பிகா அம்மா
மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தவகையான பிரச்சினைகள் ஆனாலும் ஜாதக ரீதியாக கிரகதோசம் நீக்கி, நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில சந்திக்கவும். சந்திக்கும் இடம்:
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / லிங்கன கூல்பார் அருகில்).
(37206)(11-18-32)

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies...
வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது
றோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: Tel: 011 2372952/3 , Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.